சகோதரி நிவேதிதை



இயற்றியவர்
சுவாமி
சித்பவானந்

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் இயற்றிய

பிற நாடகங்கள்

ஏகலைவ்யனின் குருபக்தி	ரூ.	2-50
விரத வீரர் பீஷ்மர்	...	2-50
தானவீரன் கர்ணன்	...	2-50
பாண்டவ கௌரவ பெருமை	...	2-50
ஹரிச்சந்திரன்	...	2-00
தவப்புதல்வர்கள்	...	2-00
வாலிமோட்சம்	...	2-00
பாதுகாபட்டாபிஷேகம்	...	1-75
விபீஷணன் சரணாகதி	...	1-50
தபோபலன்	...	1-00
மார்க்கண்டேயன்	...	1-00

சகோதரி நிவேதிதை

இயற்றியவர்

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை போஸ்ட், எலமனூர் ஸ்டேஷன்
திருச்சி ஜில்லா
1983

தபோவனத் தொடர் 39

முதற் பதிப்பு	1957	3 000
இரண்டாம் பதிப்பு	1958	12 000
மூன்றும் பதிப்பு	1958	3 000
நான்காம் பதிப்பு	1959	3 000
ஐந்தாம் பதிப்பு	1961	3 000
ஆறும் பதிப்பு	1963	10 000
ஏழாம் பதிப்பு	1963	20 000
எட்டாம் பதிப்பு	1983	5 000

திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
காரியதரிசியால் பிரசுரிக்கப்பட்டது

தபோவன அச்சுப்பள்ளி, திருப்பராய்த்துறை.

பொருளடக்கம்

சகோதரி நிவேதிதைக்கு

சுவாமி விவேகானந்தர் வழங்கிய ஆசி:

The mother's heart, the hero's will,
The sweetness of the southern breeze,
The sacred charm and strength that dwell
On Aryan altars, flaming, free;
All these be yours, and many more
No ancient soul could dream before—
Be thou to India's future son
The mistress, servant, friend in one.

—Vivekananda

தாயின் உள்ளம், வீரனது உறுதி, தென்றலின் இனிமை, தேவாலயங்களில் ஓயாது திகழ்கின்ற இன்னருள், ஆற்றல் ஆகிய இவை யாவும், முன்னோய மனிதன் கனவிலும் கண்டிராத, இவை யாவினும் மேம்பட்ட பண்புகள் பலவும் உனக்கு உரியனவாகுக. இந்தியாவின் சக்திக்குத் தலைவியாகவும், திருத் தொண்டு புரிபவளாகவும், தோழியாகவும் நீ இருப்பாயாக.

— விவேகானந்தர்



சகோதரி நிவேதிதை

சகோதரி நிவேதிதை

அருளுக்கு நிவேதனமாய், அன்பினுக்கோர்
கோயிலாய், அடியேன் நெஞ்சில்
இருளுக்கு ஞாயிருய் எமதுயர்நா
டாம்பயிர்க்கு மழையாய், இங்கு
பொருளுக்கு வழியறியா வறிஞர்க்குப்
பெரும்பொருளாய்ப் புன்மைத் தாதச்
சுருளுக்கு நெருப்பாகி விளங்கிய தாய்
நிவேதிதையைத் தொழுது நிற்பேன்.

— சி. சுப்பிரமணிய பாரதியார்

1. பிறப்பும் வளர்ச்சியும்

பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் அயர்லாந்து நாட்டின் வடபகுதியில் சாமுவேல் நோபில் என்ற நன்மகன் ஒருவர் வாழ்ந்திருந்தார். மேரி ஹாமில்டன் என்னும் குலமகள் ஒருத்தியை மணந்துகொண்டு அவர் இல்லறமாகிய நல்லறத்தை நடாத்தி வந்தார். ஜவுளிக்கடை ஒன்றில் அவர் சம்பளத்துக்கு அமர்ந்திருந்தார். ஆனல் அந்த வர்த்தகத்தைப்பற்றி அவருக்கு நல்ல அபிப்பிராயம் உண்டாகவில்லை. பிறர் பொருளைக் கௌரவமான முறையில் கொள்ளையடிப்பதற்கு வர்த்தகம் என்னும் பெயர் வந்துள்ளது என்று அவர் கருதினர். ஆதலால் விரைவில் அத்தொழிலினின்று அவர் விலகிக்கொண்டார். தம் தந்தையின் தூய தொழில் ஆகிய (Minister of

the Wesleyan Church) கிறிஸ்துவக்கோயில் குருக்கள் வேலையை அவர் ஏற்ருர். அது அவருக்கு மிகப் பிடித்தமாய் இருந்தது. உயிர்களை ஆண்டவனிடம் கொண்டு சேர்க்கும் அரும்பணியென்று அவர் அதைப் பாராட்டினர். பாங்குடனும் பக்தியுடனும் அப்பணியை அவர் புரிந்து வந்தார்.

இத் தம்பதிகளுக்கு முதல் பேறு ஆக பெண் மகவு ஒன்று வாய்த்தது. அது 1867ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28ஆம் தேதியன்று பிறப்பெடுத்தது. பிரசவ வேதனையில் பெற்றவள் வருந்திக் கொண்டிருந்தபொழுது, "இறைவா, இக்குழந்தையை உனக்கு உரியது ஆக்குகிறேன்" என்று அவள் பிரார்த்தித்தாள். அப்படிப் பிறந்த குழந்தை அடிக்கடி நோய்வாய்ப்பட்டு விடும். அதை அன்புடனும் ஆதரவுடனும் பராமரித்து வந்த தாய், "என் கண்ணே, உன் எதிர்கால நிலைமை எத்தகையதோ! நான் உன்னை உண்மையாகவே கடவுளுக்குக் கொடுத்து விட்டேனே?" என்று இப்படியெல்லாம் பகர்வாள். குழந்தைக்கு மார்கரெட் எலிஸபெத் **(Margaret Elizabeth)** என்று பெற்ருேர் பெயர் சூட்டினர்கள்.

மனமுவந்து தாம் எடுத்துக்கொண்ட குடும்பப் பரம்பரை உத்தியோகமாகிய கோயில் குருக்கள் வேலையில் பயிற்சி பெறுதற்கு சாமுவேல் நோபில் இங்கிலாந்தில் உள்ள மான்செஸ்டருக்குப் புறப்பட்டார். அவருடன் மனைவி மேரியும் போக நேர்ந்தது.

ஆதலால் தங்கள் செல்வி மார்கரெட் எலிஸபெத்தை அவளுடைய பாட்டியாரிடம் விட்டு வைத்தார்கள். பாட்டிக்கும் பேத்திக்குமிடையே ஆர்வம் கலந்த அன்பு ஊற்றெடுத்து வளர்ந்தது. கடல் கடந்து மான்செஸ்டருக்குச் சென்றிருந்த தாய் தந்தையரை இச்சிறுமி விரைவில் மறந்துவிட்டாள். தனக்குத் தேவையாயிருந்தவைகளை எல்லாம் பாட்டியின் வீட்டிலேயே பெற்று அவள் இன்புற்று வாழ்ந்து வந்தாள். வாழ்க்கையைப் பற்றி விதவிதமாகக் கனவுகள் காண்பதற்கும் கற்பனைகள் செய்து கொள்ளுதற்கும் அங்கிருந்த பூந்தோட்டம் தூண்டுகோலாயிற்று. விதைகள் முளைப்பது, செடிகள் வளர்வது, அரும்புகள் தோன்றுவது, பூக்கள் மலர்வது, காற்றில் அவைகள் நடனமாடுவது, பின்பு அவைகள் மறைந்துபட்டுப் போவது ஆகிய நிகழ்ச்சிகள் மார்கரெட்டின் மனதில் புதிய புதிய உணர்ச்சிகளை உண்டு பண்ணி வந்தன. பாட்டி புகட்டிய கதைகள் சிறுமியின் உள்ளத்தில் ஆழ்ந்து பதிந்தன. கேட்ட கதைகளைப்பற்றி எண்ணிய வண்ணம் அவள் படுத்து உறங்கி விடுவாள். ஆண்டுகள் மூன்று இங்ஙனம் கழிந்தன. அதன் பிறகு தாய் தந்தையர் அயர்லாந்துக்குத் திரும்பி வந்து தம் செல்வியைத் தங்கள் இருப்பிடத்துக்கு எடுத்துச் செல்ல எத்தனித்தனர். ஆனால் எலிஸபெத்தோ தன் பாட்டியைத் தவிரவேறு யாரையும் உற்றாராகக் கருதவில்லை. அவளைப் பிரித்தெடுப்பது பெரும்பாடாய் விட்டது.

புதிய சூழ்நிலை

இதற்குள் எலிஸபெத்துக்குத் தங்கை ஒருத்தியும் தோன்றியிருந்தாள். அந்தத் தங்கையுடன் இப்பொழுது அவள் பள்ளிக்கூடத்துக்குப்போக ஆரம்பித்தாள். புதிய சூழ்நிலையிலும், புதிய உறவினர்களுக்கிடையிலும், புதிய வாழ்க்கை முறையிலும் தன்னைப் பொருத்தி அமைத்துக் கொள்ளுதற்கு அவளுக்குச் சிரமம் மிக உண்டாயிற்று. அக்காலத்தில் மாலையில் இருட்டிப்போம் வரையில் பள்ளிக்கூடம் நடைபெற்று வந்தது. அந்திவேளை வந்து கொண்டிருந்த பொழுது அக்கம் பக்கத்து வீட்டுச் சிறுமிகளையும் தன்னுடன் விளையாடுதற்கு அழைத்து வந்தது மார்கரெட்டிடமிருந்த மாறுப் பழக்கம் எனலாம். தான் திரட்டி வந்த பாவையர்களுடன் கண்ணாம்பூச்சி ஆடுவதில் அவள் களிப்புமிக எய்தினாள். அந்தியில் உணவு அருந்தியான பிறகு தன் சிற்றப்பாவினுடைய மடியில் சாய்ந்துகொண்டு விதவிதமான பேச்சுக்களைக் கேட்பதிலும், கேட்டதைக் குறித்து எண்ணுவதிலும், அவைகளைப்பற்றி வினவுவதிலும் ஈடுபடுவது அவளுடைய அன்றாட வழக்கமாயிற்று. அக்குமாரியின் கூந்தலைத் தடவிக்கொடுத்துக்கொண்டே சிற்றப்பாவும் என்னென்னவோ விஷயங்களைப் பற்றி அவளுடன் நிதானமாக உரையாடுவார். அப்பொழுது அவர்கள் சொப்பனம் போன்ற ஒருவித உலகத்தில் இருந்தார்கள் என்று இயம்பலாம். அச்சிறுமியின் தினசரி வாழ்க்கையில் அது மிக முக்கியமான பகுதியாக இருந்து வந்தது.

கோயில் குருக்களாக வேலை பார்த்துவந்த சாமுவேல் கோபில் திறமை மிக வாய்ந்தவர். நாட்டுப் புறங்களில் இருந்த கோயில்களுக்குத் தலைவராக வாழ்க்கையைத் துவக்கியவர் எளிதில் பட்டணங்களில் இருந்த கோயில்களுக்குத் தலைவராக ஆகி உயர்நிலையை அடைந்திருக்கலாம். ஆனால் அவர் கிராமங்களிலேயே தெய்வீகத்தொண்டு புரிந்துவர விரும்பினார். அதற்கேற்ற காரணமும் ஒன்று இருந்தது. அவர் உடல் திட்பம் வாய்க்கப்பெற்றவர் அல்லர். அடிக்கடி நோய்வாய்ப்பட்டுவிடுவார். உடல் நோய் வாய்ப்பட்டு வருவதற்கு ஏற்ப அவருடைய மனது உள்முகத்தில் அதிகமாகத் திரும்பியது. அதற்கு நாட்டுப்புற வாழ்க்கையே முற்றிலும் பொருத்தமானது. தந்தையின் உடல் நிலையையும் மன நிலையையும் மார்கரெட் எலிஸபெத் நன்கு அறிந்துகொண்டாள். அவளுக்கு இப்பொழுது வயது பத்து. ஆனால் குறிப்பறியும் தன்மையில் வயதுக்கு மீறிய முதிர்ச்சி அவளிடத்திருந்தது. தன் விளையாட்டுக்களையெல்லாம் அவள் இப்பொழுது பெரிதும் நிறுத்திவிட்டாள். தக்க தருணங்களிலெல்லாம் தந்தைக்குத் துணைபுரிவதிலேயே அவள் கருத்தை மிகச்செலுத்தினாள். கோயிலில் மதபோதனை செய்வதற்குப் பிதா போன பொழுதெல்லாம் புதல்வியும் அவருடன் செல்லுவாள். தனக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த ஆசனத்தில் அவள் அமர்ந்துகொள்வாள். வழிபாட்டுக்கு வந்தவர்களுள் பலர் அவளுக்கு அறிமுகமா

யிருந்தார்கள். தந்தையின் சொற்கள் பசுமரத்தாணி போன்று அவளுடைய உள்ளத்தில் பதியும். தனியா யிருந்தபோதெல்லாம் தந்தையைப் போன்று அவள் அபிநயித்துப் பேசிப் பழகுவாள். சொன்ன சொல்லை வற்புறுத்துவதற்கு அப்பாவைப் போன்றே அவள் தலையை அசைப்பதுண்டு. தம் கருத்துக்களைத் திறம் படப் பகர்தல் தந்தையிடத்து அமைந்திருந்த பேரி யல்பாகும். புதல்வியும் அப்பெற்றியைப் பெற முயன்று வந்தாள். தன் தங்கைகளிடத்திலும் தோழிகளிடத்திலும் அதிகாரத் தோரணையில் அவள் பேசுவாள். தன் கொள்கையை உறுதியாகக்கடைப் பிடித்தலும், தன் கொள்கையைப் பற்றிப் பெருமை பாராட்டுதலும் ஆயுட்காலமெல்லாம் அவளிடம் அமைந்திருந்த இயல்பாயிற்று. பிறர் திடுக்கிடும்படி தன் கருத்தையெடுத்து அன்னவர் உள்ளத்தில் அவள் புகுத்துவதுண்டு. ஏகாந்தத்தில் இருப்பதி லும் அச்சிறுமிக்கு விருப்பம் மிக இருந்துவந்தது.

ஆசிமொழி

பார்க்க வந்தவர்களுக்குத் தந்தையார் பேட்டி கொடுத்த வேளைகளை அவள் நன்கு பயன்படுத்தி னள். இந்தியாவில் கிறிஸ்தவ மதப்பிரசாரம் செய்து வந்தவர் (Missionary) ஒருவர் அயர்லாந்துக்குத் திரும்பிப் போய்ச் சேர்ந்தார். ஸன்மகன் சாமுவேல் நோபிலை அவர் சென்று சந்தித்தார். அத்தருணத்தில் அவருடைய புதல்வி மார்கரெட் எலிஸபெத்துடன் உரையாடும் வாய்ப்பு அந்த மதபோதகருக்கு உண்

டாயிற்று. ஆணித்தரமாக அவள் பேசவல்லவள் என்பது வந்தவருக்கு விளங்கிற்று. விடைபெற்றுப் போகும்போது சிறுமியின் முகத்தை அன்புடன் தட விக் கொடுத்து, அவர் இங்ஙனம் ஆசீர்வதிப்பாராயி னர்: "தன் தெய்வத்தைத் தேடிக் கண்டுகொள்ள இந்தியா தேசம் ஆர்வத்துடன் முயன்றுகொண்டிருக் கிறது. என்னைத் தன்னிடம் வரவழைத்ததுபோன்று ஒருவேளை உன்னையும் இந்திய நாடு தன்னிடத்து வரவழைக்கும். ஆங்குச் செல்ல யாண்டும் ஆயத்த மாயிரு." இக்கூற்றைக் கேட்டதும் மார்கரெட்டி னுடைய உள்ளத்தில் உணர்வும் ஊக்கமும் பொங்கி எழுந்தன. அவள் உடல் விதிர் விதிர்த்தது. தேசப் படத்தில் இந்தியா இருக்குமிடத்தைச் சுட்டிக்காட் டும்படி பிதாவிடத்தில் அவள் பதைபதைப்புடன் வேண்டிக்கொண்டாள். பிறகு தன் சுட்டு விரலால் அத்தேசத்தை அவள் விளம்பினாள். கண்களில் ஒளி வீசியது. ஓர் உயர்ந்த இலட்சியத்துக்குத் தான் ஒப் படைக்கப்பட வேண்டுமென்று பிரார்த்தனை பண்ணி விட்டு அன்று இரவு அவள் படுக்கப்போனாள்.

மத குருவாகிய சாமுவேல் நோபிலுக்கு வயது முப்பத்து நான்கு ஆயிற்று. அப்பொழுது அவருக்கு மரணம் நெருங்கிவிட்டது என்பதை உணர்ந்தார். உலகப்பற்று ஒன்றும் அவரிடத்து இல்லாதிருந் ததால் சாவைக் குறித்து அவர் சஞ்சலப்படவில்லை. மனைவியிடம் விடைபெற்றுக்கொண்டபொழுது அவ ருடைய கடைசிப் பேச்சு புதல்வி மார்கரெட்டைப்

பற்றியதாயிருந்தது. செயற்கரியது ஏதாவது ஒன்றை மார்கரெட் செய்து சாதிப்பாள். அவள் போக்குக்கு இடைஞ்சல் ஒன்றும் செய்யவேண்டாம். இங்ஙனம் இயம்பிவிட்டு அவர் இவ்வுலக வாழ்வை நீத்துவிட்டார். தம் புதல்வி எதிர்காலத்தில் பெருநிலை ஏதேனும் ஒன்றை எய்துவாள் என்று அவர் எண்ணியஎண்ணமானது மரண வேதனையை மறக்கும்படி செய்துவிட்டது. தம் செல்வியைக் குறித்துப் புன்னகை பூத்தவராக அவர் உடலினின்று ஒதுங்கிக்கொண்டார். மார்கரெட்டுக்கு உண்டான மனவேதனையைப்பற்றி ஒன்றும் பகரவேண்டிய அவசியமில்லை. உலகம் இருள் சூழ்ந்தது போன்று நெடுநாளைக்கு அவள் உணர்ந்தாள். இதற்குள்ளாகக் குடும்பத்தார் வீட்டு அலுவல்கள் பலவற்றைப் பற்றிச் சில தீர்மானங்கள் செய்தார்கள். மார்கரெட்டையும் அவள் தங்கை மே என்பவளையும் கல்லூரிப் படிப்புக்கு அனுப்பிவைக்க அவர்கள் முடிவு செய்தது அத்தீர்மானங்களுள் மிக முக்கியமானதாகும். அந்த வனிதைக்கு அதன் மூலம் வாழ்க்கையில் புதியதோர் அத்தியாயம் துவங்கிற்று.

---

2. கல்லூரிப் படிப்பு

அனுகூலமான சூழ்நிலை

ஹாலிபாக்ஸ் கல்லூரியின் வாயிலுக்குள் நுழைந்த பொழுதே சகோதரிகள் இருவருக்கும் ஒருவிதத் திகில் உண்டாயிற்று. ஜன்னல்கள் நிறைந்த பெரிய கட்டடம் ஒரு நூதனமான உணர்ச்சியைக் கிளப்பிற்று. மாணவிகளெல்லாரும் ஒரே பாங்கில் உடை அணிந்திருந்தார்கள். நீலப்பாவாடையும் வெள்ளை அங்கியும் கூடிய அவ்வுடையின் காட்சியே மனதுக்கு ஒருவிதமான அடக்க ஒடுக்கத்தை ஊட்டியது. மிகவும் கட்டுப்பாடான வாழ்க்கைக்கு இனி உட்பட்டாகவேண்டும். சகோதரிகள் இருவரும் அதற்கு முற்றிலும் ஆயத்தமாய் இருந்தார்கள். ஆதலால் அவர்கள் மனதில் தோன்றிய அச்சம் ஒருவிதமான பயபக்தியாக மாறிற்று. அவர்கள் விரைவில் கண்டு கொண்ட மற்றொரு விஷயம் அவர்களுக்கு உற்சாகம் ஊட்டியது. தங்களைப் போன்றே அங்குக் குழுமியிருந்த பெண்களில் பெரும்பான்மையோர் கோயில் குருக்கள்மார்களுடைய புதல்வியர் என்பதுதான் அவர்கள் கண்டுகொண்ட விஷயமாகும். பண்பிலும் புத்திவன்மையிலும் தங்களைவிடப் பன்மடங்கு மேலோர்களே அங்குக் குழுமியிருப்பார்கள் என்று முதலில் அவர்கள் கற்பனை செய்துகொண்டது உண்மையல்ல. தரத்தில் தாங்கள் மற்றவர்களுக்குப் பின்வாங்கியவர்கள் அல்லர் என்பதைச் சகோதரிகள் இருவரும் சிலநாட்களுள் தெரிந்துகொண்டனர்.

மார்கரெட் எலிஸபெத் நோபில் என்ற கன்னிகைக்கு மற்றொரு நூதனம் கல்லூரியில் வாழ்ந்திருந்த பொழுது வெளியாயிற்று. கல்லூரி ஆசிரியைகள் கண்டிப்பு மிக வாய்க்கப்பெற்றவர்களே. ஒழுங்குப்பாடு பிசகாது அவர்கள் காரியங்களை நிர்வகித்து வந்தார்கள். ஆனால் அவர்களையுங்கூட ஆட்டுவிக்கின்ற பாங்கில் கல்லூரி மணி இருந்தது. மணியைத்தான் மணியக்காரன் என்று அந்த அம்மணி எண்ணினாள். அதன் ஓசைக்கு அடிபணிந்தே பிரார்த்தனை துவங்குகிறது; பாடம் நடைபெறுகிறது; விளையாட்டு நிகழ்கிறது; உணவு வழங்கப்படுகிறது; நித்திராதேவியும் பிரசன்னமாகிறாள்! மணியின் ஆதிக்கத்தை மீறி நடக்க யாருக்குத்தான் இயன்றது? குறிப்பிட்ட வேளையில் குறிப்பிட்ட காரியங்களைச் செய்வது பிரிட்டிஷ் பண்பு. இப் பெண்ணுக்கு அது கல்லூரி மணி படைத்திருந்த சர்வாதிகாரமாகத் தென்பட்டது. மற்றுமொரு புதுமையை அப்பெண் கல்லூரி வாழ்க்கையில் கண்டாள். வகுப்பு அறைகளெல்லாம் துப்புரவே வடிவெடுத்திருந்தன. காற்றோட்டத்துக்கும் வெளிச்சத்துக்கும் அங்குக் குறை ஒன்றுமில்லை. இயற்கையின் வெகுமதிகளாகிய அவை நன்குபயன்படுத்தப்பட்டன. பத்துப்பேருக்கு ஒரு படுக்கையறை பாங்குடன் அமைக்கப்பட்டிருந்தது. வகுப்பு அறைக்கு எவ்வளவு மதிப்போ அவ்வளவு மதிப்பு விளையாடுமிடத்துக்கும் இருந்தது. சுருங்கச் சொல்லின் வாசிப்பு, விளையாட்டு, உணவு,

உறக்கம் ஆகிய நான்கும் முறையாகக் கவனிக்கப் பட்டிருந்தன.

கல்வி ஸ்தாபனம் ஒன்றன் சிறப்பு இயல்பு ஏதா வது இருந்தால் அது தலை மாணாக்கன் ஒருவனுக்கு அல்லது தலைமாணாக்கி ஒருத்திக்கு விரைவில் பிடி பட்டு விடுகிறது. ஹாலிபாக்ஸ் கல்லூரியில் மத போதனை முக்கியமான இடம் பெற்றிருந்தது. அது ஆங்கு வெறும் வாசிப்புக்கும் விவாதத்துக்கும் அமைந்ததல்ல. வாழ்க்கையைப் பண்படுத்துதற் கென்றே சமயப் படிப்பும் சமயப் பழக்க வழக்கங் களும் ஆங்கு அளிக்கப்பட்டிருந்தன. அடக்கம் பழகு தல் சமயப் பயிற்சிக்கு அஸ்திவாரம் போன்றது. "அடக்கம் அமரருள் உய்க்கும், அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும்" என்னும் பொய்யா மொழிக்கு எடுத் துக்காட்டாக அக்கல்லூரியின் வாழ்க்கை முறை அமைந்திருந்தது. தன்னலம் கருதாது பிறர் நலத்தில் கண்ணுங் கருத்துமாய் இருப்பவர்களுக்குச் சிறப்பு கள் அனைத்தும் தாமே வந்தமைகின்றன. அடக்க மும் சுயநலத்தியாகமும் சமய வாழ்க்கைக்கு அடி கோலிகளாகின்றன. யாருடைய வாழ்க்கையில் இவ்விரண்டு பேரியல்புகளும் நன்கு இலங்குகின் றனவோ அவர்களே பிறருக்கும் சமயபோதனை செய் யத் தகுதி வாய்ந்தவர்களாகின்றனர். ஹாலிபாக்ஸ் கல்லூரிப் பேராசிரியைகளின் வாழ்க்கையில் அடக்க மும் தன்னலத்தியாகமும் ஒருங்கே மிளிர்ந்தன. யுவதி மார்கரெட்டின் மனதை இப்பேரியல்புகள்

முற்றிலும் கவர்வனவாயின. அவளுடைய வாழ்க்கையைப் பண்படுத்துதற்கு இவ்விரண்டு கோட்பாடுகளும் உறுதுணைகளாயின.

தலைமாணுக்கி

மார்கரெட் எலிஸபெத் நோபிளினுடைய அறிவுத்திறன் அதிவிரைவில் வெளியாயிற்று. தன் வகுப்பு மாணவிகளுக்கிடையில் அவள் அடிக்கடி முதன்மை வகித்து விளங்கினாள். பின்பு வகுப்பின் நிர்வாகத்திலோ அவள் எப்பொழுதுமே ஆசிரியைகளுக்கு அடுத்தபடியாகச் சட்டாம்பிள்ளையாக இருந்து வந்தாள். சில வேளைகளில் வகுப்பில் உண்டாகும் சிக்கலான நெருக்கடிகளையும் குழப்பங்களையும் சாமர்த்தியமாக அவள் சமாளித்துவிடுவாள். அவளுக்கு ஆகாத காரியம் என்பது எதுவுமில்லை. இனிப் படிப்பிலோ அவள் யாண்டும் தலைமாணவி. புகட்டியதன் உட்பொருளை உடனே அறிந்துகொள்ளுதல், அறிந்து கொண்டதை யாண்டும் ஞாபகத்தில் வைத்திருத்தல், அப்படி ஞாபகத்தில் வைத்திருப்பதைக் கேள்விக்கேற்ற பாங்கில் விடையாக அமைத்து இயம்புதல் ஆகிய திறன்கள் படைத்தவள் அவள். ஆதலால் ஆசிரியைகளுக்கு அவளிடத்தில் அலாதியான அபிமானம் இருந்தது. மற்றவர்களுக்குக் கொடுக்காத தனி மதிப்பை இப்பெண்ணுக்கு அவர்கள் கொடுத்து வந்தார்கள் என்று இயம்பலாம்.

ஆற்றல் மிகப் படைத்திருப்பவர்களுக்குப் புகழ்ச்சி தானே வருகிறது. ஆனால் அது பெரும்

பாலும் மக்களுடைய உள்ளத்தைக்கெடுத்துவிடுகிறது. இகழ்ச்சியால் கெட்டுப்போனவர்களைவிடப் புகழ்ச்சியால் கெட்டுப்போனவர்களே உலகில் பெரும்பான்மையோர். சிறுவயதில் புகழ்ச்சி வருவது இன்னும் கெடுதலானது. மார்கரெட்டினுடைய பண்புகளை மாணவிகளும் ஆசிரியைகளும் பாராட்டாமல் இருக்கமுடியவில்லை. அதை முன்னிட்டு அவளுக்கு ஒருவிதச் செருக்கு உண்டாயிற்று. திறமையில் தனக்கு மிக்கார் யாருமில்லை என்ற எண்ணம் அவளுடைய உள்ளத்தில் வேர்பிடித்து வந்தது. ஆனால் கல்லூரித் தலைமை ஆசிரியை அந்த மனநோயை அதிவிரைவில் கண்டுபிடித்துவிட்டார். மனபரிபாகத்துக்குப் பெருந்தடையாயிருப்பது செருக்கு என்பது அவருக்குத் தெரியும். முளையிலேயே அதைக் களையாவிட்டால் அது மனதை ஆழ்ந்து பற்றிக்கொள்ளும். பிறகு அதை நீக்குவது மிகக்கஷ்டம். இதையெல்லாம் நன்கு அறிந்திருந்த தலைமை ஆசிரியை தீவிரமான நடவடிக்கை எடுத்துக்கொண்டார். சந்தர்ப்பம் வாய்த்தபொழுதெல்லாம் மார்கரெட்டின் தற்பெருமையைத் துருவித்துருவி ஆராய்ந்து வகுப்பில் விளக்கிக் காட்டுவார். அவர் கையாண்ட முறையில் அன்பு கலந்த இனிமை ததும்பும். ஆதலால் கன்னிகை மார்கரெட்டுக்கு மனக்கசப்பு ஒன்றும் வந்துவிடாது. தான் வருவித்துக்கொண்ட சிறிய மனப்பான்மையைக் குறித்து அவள் வெட்கப்படுவாள். இன்னும் சில வேளைகளில் வருந்துவாள். நாளடைவில் செருக்கு என்னும் மன

நோய் அவளைவிட்டு அறவே அகன்று போய்விட்டது. அதை அகற்றிவைத்த பெருமை தலைமை ஆசிரியைக்கே உரியதாகும். நல்ல மனம் படைத்திருப்பவர்களுக்கே மற்றவர்களை நல்ல மனம் படைத்தவர்களாக மாற்ற இயலும்.

மார்கரெட் எலிஸபெத்திடத்து மற்றொரு மேன்மை மிளிர்வதாயிற்று. கதைகள் சொல்லுவதில் அவளுக்குக் கற்பனைசக்தியும் வாக்குவன்மையும் வேண்டியவாறு அமைந்திருந்தன. ஓய்வு வேளைகளிலும், இரவில் படுக்கப்போகின்ற வேளைகளிலும் கதைகள் கேட்பதற்குச் சிறுமிகள் பலபேர் மார்கரெட்டிடம் குழுமிவிடுவார்கள். கட்டுக்கதைகள், சரித்திர சம்பந்தமான கதைகள், சமய சம்பந்தமான கதைகள் ஆகிய விதவிதமான கதைகளைத் தன் போக்கில் நன்ருக அலங்கரித்துச் சுவை ததும்பும் பாங்கில் அவள் பகர்வாள். ஏதேனும் ஒரு ரசம் முன்னணியில் இருக்கும் கதையை ஒரு நாளைக்கு எடுத்துக்கொள்வாள். சோகரசம் நிறைந்த கதை என்ருல் அன்று கேட்போர் அனைவரையும் துயரத்தில் ஆழ்த்திவிடுவாள். அச்ச மூட்டும் கதையென்ருல் அதைக் கேட்போருக்கே பயம் மிக வந்துவிடும். இனி, நகைச்சுவை நிறைந்த கதையோவெனின் அதைக் கேட்போரது பாடு பெரும்பாடு ஆய்விடும். ஹாஸ்யரசம் படிப்படியாக உச்சநிலைக்குப் போய்க் கொண்டிருக்கும். உச்சநிலை என்ன பாங்கில் எப்படி வந்தமையும் என்பது கேட்போருக்குத் தெரியாது. அது வந்ததும் கேட்போர் விலாவெடிக்க விழுந்து

விழுந்து சிரித்தாகவேண்டும். அத்தகைய பேச்சு வன்மைமார்கரெட்டுக்குஇயல்பாக வாய்த்திருந்தது.

இந்த மாணுக்கி கிளப்பிய ஒரே ஒரு பிரச்னையானது கல்லூரி ஆசிரியைகளால் சமாளிக்க முடியாதத்தாய் இருந்தது. அறிவுத்திறமையில் மற்ற மாணுக்கிகளையெல்லாம் விட அவள் மேம்பட்டவள் என்பது மறுக்க முடியாதது. சில வேளைகளில் அவள் கிளப்பிய கேள்விகளுக்குத் தக்க மறுமொழிகூற ஆசிரியைகளுக்கே இயலாது. ஏதோ ஒரு போக்கில் அவர்கள் சமாதானம் சொல்லி அவளைத் திருப்திபடுத்தி விட முயலுவார்கள். ஆனல் அம்முயற்சி பெரிதும் வீண் போய்விடும். யுக்தி பூர்வமாக அவளுடைய அறிவுத் தாகத்தைத் தணிக்கவேண்டும், அல்லது அவள் கிளப்பிய கேள்வி தங்களுக்கு எட்டாததென்று ஒத்துக்கொண்டாக வேண்டும். ஆனல் அப்படிச் செய்வதுதான் ஆசிரியைகளுக்குத் தர்ம சங்கடமாயிருந்தது. மெய்ப்பொருள் விசாரணையில் சிறுமியொருத்தியிடம் அத்தகைய முன்னீட்டம் இருப்பானேன் என்று அவர்கள் அடிக்கடி முறையிட்டார்கள். சில வேளைகளில் அவர்கள் அவளை நொந்து கொண்டார்கள். வயதில் சிறியோரெல்லாம் அறிவிலும் சிறியோராய் இருக்கவேண்டும் என்பது நியதியல்ல என்பதை அவர்கள் மறந்துவிட்டனர் போலும்.

மார்கரெட்டுக்குக் கல்லூரியில் தான் வசித்து வந்த காலத்தின் கடைசிப்பகுதி ஆர்வம் மிக ஊட்டுவதாயிற்று. பரீக்ஷைக்கென்று படிப்பதை அவள் அதிகப்படுத்தினள். இரவு என்றும் பகல் என்றும்

உணர்வற்ற நிலையில் இருந்து கொண்டு தனக்கு அமைந்திருந்த வெவ்வேறு பாடங்களையெல்லாம் திரும்பவும் ஒரு முறை கற்பதிலேயே அவள் கருத்தைச் செலுத்தி வந்தாள். அதற்கிடையில் மற்றோர் உணர்வு மார்கரெட்டின் உள்ளத்தில் ஊற்றெடுத்து வந்தது. இன்னும் சில வாரங்களில் கல்லூரிப்படிப்பு தனக்கு முற்றுப்பெற்றுவிடும். அதன் பிறகு கல்லூரி வாழ்க்கைமுறை தன் மீது விதித்திருந்த கட்டுமானங்களெல்லாம் தாமாகவே நீங்கிவிடும். தன் வாழ்க்கையைத் தான் எப்படி வேண்டுமானாலும் கொண்டு செலுத்தலாம். தன்னை மேல் நிலைக்கு எடுப்பது, அல்லது கீழ்மையில் தன்னைத் தள்ளிக்கெடுப்பது எல்லாம் தன் கைவசத்தில் இருக்கிறது என்று அவள் எண்ணினாள். எவ்விதத்திலும் தான் மேன்மையடைய முடியும் என்ற நம்பிக்கை மார்கரெட் எலிஸபெத்துக்கு இருந்தது. கடைசியாகப் பரீக்ஷைக்குரிய நாளும் வந்தது. மிக மிக உயர்ந்த பாங்கில் தனது அறிவுத்திறனை அதன் மூலம் அவள் விளக்கிக் காட்டினாள். கல்லூரிவாசம் முற்றுப்பெற்றது. வெளியே புறப்படுகிற நாளும் வந்தது. மார்கரெட்டுக்கு மகிழ்ச்சி ஒருபுறம்; மனக்கிலேசம் மற்றொரு புறம். புதிய வாழ்க்கை முறையைத் துவக்குவதைக்குறித்து மகிழ்ச்சி. தன்னை உள்ளன்போடு நேசித்தும் தனக்குப் பயிற்சி கொடுத்தும் வந்திருந்த ஆசிரியைகளை விட்டுப்பிரிந்து போவதைக் குறித்து மனக்கிலேசம். அதற்கிடையில் கல்வியில் முழு வெற்றி அவளுக்குக் கிடைத்தது. புதிய வாழ்வைத் துவக்க அனைவரிடமும் விடைபெற்றுச் சென்றாள்.

3. சுதந்திர வாழ்வு

பள்ளியில் ஆசிரியை

இதுவரையில் மார்கரெட்நோபில் பிறரால் ஆதரிக்கப்பட்டு வாழ்ந்து வந்தாள். இனி தனக்குத் தேவையான பொருளைத் தானே சம்பாதித்துக் கொள்ள முடியும் என்றும், தன் வாழ்க்கையைத் தானே நிர்வகித்துக்கொள்ள முடியும் என்றும் அவள் உறுதி கொண்டாள். சுதந்திர வாழ்வைப் பற்றிய எண்ணமே அவளுக்குப் பெருமகிழ்வூட்டியது. ஏதேனும் ஒரு பள்ளிக்கூடத்தில் தான் ஓர் ஆசிரியை ஆகவேண்டுமென்று அவள் விரும்பினாள். அப்படி அவள் கருதியதில் வியப்பு ஒன்றுமில்லை. அவளுடைய இயல்புக்கு அந்த உத்தியோகம் முற்றிலும் பொருத்தமானது. தான் பெற்றிருந்த கல்விச் செல்வத்தை மற்றவர்களுக்கும் எடுத்து வழங்க அவள் முடிவு செய்தது முற்றிலும் பாராட்டத்தக்கது.

ஆற்றலும் அறிவும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற யுவர்களும் யுவதிகளும் தங்களைப்பற்றிப் பெருமிதமாக மதிப்புப் போட்டுக்கொள்வதுண்டு. தாங்கள் விரும்பியவாறு உலகம் தங்களுக்கு உட்பட்டு நடக்குமென்றும், உலகத்துக்குத் தாங்கள் பெரு நன்மை செய்துவிட முடியுமென்றும் மனக்கோட்டை கட்டுவது அவர்களின் இயல்பு. என்னென்ன பாங்கில் உலகத்தில் எத்தகைய அரும்பெரும் செயல்களைத் தாங்கள் செய்து சாதித்தாக வேண்டுமென்றும் அவர்கள் மனதில் கற்பனை பண்ணிக்கொண்டிருப்

பார்கள். எண்ணியதை எண்ணியாங்கு நிறைவேற்றி வைத்துவிட முடியுமென்ற உறுதியும் ஊக்கமும் அவர்களிடத்துத் ததும்பிக்கொண்டிருக்கும். மார்கரெட் எலிஸபெத்நோபில் என்ற யுவதியும் அத்தகைய பான்மை படைத்தவளாய் இருந்தாள். தான் பெற்றிருந்த பயிற்சியைப் பற்றியும், கல்வித்துறையில் இனித் தான் ஆற்ற விரும்பிய பணிவிடையைப் பற்றியும் சமாசாரப் பத்திரிகையில் அவள் விளம்பரம் செய்துவிட்டாள். இனி தன்னைத் தேடிக் கொண்டு உத்தியோகம் தானாக வருமென்ற நம்பிக்கையும் அவளுக்கிருந்தது.

மார்கரெட் கட்டியிருந்த மனக்கோட்டை வீண் போகவில்லை. 1884 ஆம் ஆண்டின் கோடையிலே அவளுக்குக் கெஸ்விக் (Kesevick) என்ற ஊரில் இருந்த பிரசித்திபெற்ற பள்ளிக்கூடத்தில் உத்தியோகம் கிடைத்தது. அவளுக்கு அப்பொழுது வயது பதினெட்டு. ஆசிரியைத் தொழிலைத் துவக்க அவள் ஆசை மிகக்கொண்டிருந்தாள். உற்றாரும் உறவினரும் அவளுக்கு உத்தியோகம் கிடைத்திருப்பதைப்பற்றிப் பெருமை பாராட்டினர். ஆசிச் செய்திகளும் சன்மானங்களும் அன்பர்களால் அவளுக்கு அனுப்பப்பட்டன. இரண்டுவருஷ காலம் அவள் பணியாற்றுதற்கிருந்த பள்ளிக்கூடமோ அற்புதமான பாங்கில் அமைக்கப்பெற்றிருந்தது. கட்டடம் மிகப் பெரியது. ஓங்கி வளர்ந்திருந்த மரச்சோலையில் அது மறைந்திருந்தது. குன்றுகளும் தடாகங்களும் திகழ்ந்துகொண்டிருந்த சூழ்நிலையில் அது இருந்தது.

"உழைப்பும் அழகும்"—என்பது அப்பள்ளிக்கூடத்தின் குறிக்கோளாயிருந்தது. கோலரிட்ஜ்(Coleridge) என்பாரும், சௌதே (Southey) என்பாரும் ஆங்கில இலக்கியத்தை வளர்த்த புலவர்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். இவ்விரு பெருமக்களை உருவாக்கிய பெருமை கெஸ்விக் பள்ளிக்கூடத்துக்கு உண்டு. இத்தகைய சிறந்த பள்ளிக்கூடத்தில் மார்கரெட் ஊக்கத்துடன் பணியாற்ற ஆரம்பித்தாள். அவள் கொண்டிருந்த கருத்து ஒன்றை ஈண்டுப் பெரிதும் திருத்தியமைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. பாடம் புகட்டிய ஆசிரியையாகிய தனக்கும் பாடம் கற்றுக்கொண்ட மாணவிகளுக்கும் வயதில் இரண்டு மூன்று வருஷங்கள்தான் வித்தியாசம் இருந்தது. ஆசிரியையின் கருத்துக்களையெல்லாம் ஆராய்ச்சிசெய்யாது ஏற்றுக்கொள்ள மாணவிகள் ஆயத்தமாயில்லை. மார்கரெட் ஆசிரியைக்கு அது பெருஞ் சோதனையாயிருந்தது. அதிகாரத் தோரணையில் தான் எதையும் பிறர்க்குப் புகட்டிவிட முடியாது என்பதை அவள் அறிந்துகொண்டாள். தான் கற்றறிந்ததையே திரும்பவும் ஒருமுறை பிறரோடு பரிமாறிக் கொள்கிற பாங்கில் கற்கவேண்டிய அவசியம் அவளுக்கு உண்டாயிற்று.

சமுதாய சேவை

கெஸ்விக் பள்ளிக்கூடத்தில் வேலை பார்த்து வந்த இரண்டு வருஷத்துக்குள் மார்கரெட்டின் மனப்பான்மையில் மற்றொரு பெரிய மாறுதல் உண்டாயிற்று. தன்னிடத்தில் தியாக மனப்பான்மை

இருக்கிறதா, எளிய வாழ்க்கை வாழ்த் தான் ஆயத்த மாய் இருக்கின்றுளா, பிரதிபலனை எதிர்பாராது பிறர்க்குப் பணிவிடை செய்யத் தனக்கு இயலுமா?—இவைபோன்ற கேள்விகளுக்குத் தக்க விடைகளைப் பெற்றாகவேண்டும். ஆகவே தன்னைச் சோதனைக்கு உள்ளாக்க அவள் தீர்மானித்தாள். அதன்பொருட்டு வெஸ்லிக் பள்ளிக்கூடத்தினின்று தானாகவே அவள் விலகிக்கொண்டாள். ரக்பி (Rugby) என்னும் இடத்தில் அநாதைப் பெண்களுக்கு ஒரு விடுதி ஏற்பட்டிருந்தது. அதில் சம்பளமில்லாது பணியாற்ற மார்கரெட் முன் வந்தாள். அவர்களுக்குப் பாடம் புகட்டியும், அவர்களோடு கூடியிருந்து விதவிதமான உடல் உழைப்பில் கலந்துகொண்டும், அவர்கள் உண்ட எளிய உணவையே தானும் உண்டும் அவள் காலம் கழித்தாள். அந்த எளிய வாழ்வைக் குறித்து அவளுடைய மனதில் கிலேசமோ தளர்ச்சியோ சிறிதேனும் உண்டாகவில்லை. அநாதைச் சிறுமிகளுக்கு ஊக்கத்தையும், தன்னம்பிக்கையையும், உழைப்பில் ஆர்வத்தையும், கண்ணியமான வாழ்க்கை முறையில் விசுவாசத்தையும் புகட்டி வந்த பெருமை மார்கரெட் எலிஸபெத் நோபிலுக்கே உரியதாயிற்று. ஓர் ஆண்டு இங்ஙனம் உழைத்தான பிறகு இத்தகைய தியாக வாழ்க்கையும் தனக்குச் சாத்தியம் என்பதை அவள் அறிந்துகொண்டாள். தன் ஜீவனோபாயத்தைப் பற்றிச் சிறிதேனும் கவலைப்படாமல் கடவுளின் பெருமைக்காகவென்றே தான் இனி திருத்தொண்டு புரிய முடியும் என்று அவள் தீர்மானித்துக்கொண்

டாள். ரக்பி அனுதை விடுதியினின்று பிறகு மற்றோர் இடத்தில் பணியாற்ற அவள் புறப்பட்டுப்போனுள்.

ரெக்ஸ்ஹாம் (Wrexham) என்பது நிலக்கரிச் சுரங்கம் ஒன்றன் அருகில் உண்டாகியிருந்த தொழிலாளர்களுடைய ஊர். வீடுகளெல்லாம் ஒன்றோடு ஒன்று பின்னிக்கொண்டு நெருக்கமாகக் கட்டப்பட்டிருந்தன. பார்த்தவிடமெல்லாம் நிலக்கரித்தூளும் குப்பையும் தூசியும் நிறைந்து கிடந்தன. தொழிற்சாலைகள் ஓயாது கக்கிக்கொண்டிருந்த புகையோ கீழும் மேலும் எங்கும் பரவியிருந்தது. அத்தகைய புகை சூழ்ந்த நிலைக்குப் பருவம் இன்னதுதான் என்கிற வரையறை கிடையாது. காலமெல்லாம் மக்களுடைய கதி புகைப்படலத்தில் புதைந்து கிடப்பதுதான். ஆங்குத் தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்காகவென்று இடைத்தரப்பள்ளி (Secondary-School) ஒன்று நிறுவப்பெற்றிருந்தது. அப்பள்ளியில் உபாத்தியாயினியாக மார்கரெட் நோபில் உத்தியோகம் ஏற்றுக்கொண்டாள். பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்குப் பாடம் புகட்டுதற்கு நித்தமும் அரைநாள் ஒதுக்கிவைக்கப்பட்டது. எஞ்சியிருக்கும் நேரத்தைச் சமுதாய நலத்துக்காகப் பயன்படுத்த அவள் தீர்மானம் செய்திருந்தாள். தன் இயல்புக்குகந்த பணிவிடையும் அதுவே என்று ஆர்வத்துடன் அவள் அதில் ஈடுபடலானுள். பள்ளிச் சிறுவர்கள், சிறுமிகள் மூலமாகப் பெற்றோர்களுடன் தொடர்பு கொள்ளுதல், அவர்களின் குறைபாடுகளை நேரே பார்த்துக் கண்டுகொள்ளுதல், பிறகு அக்

குறைபாடுகளை நீக்கிவைக்க முயலுதல்—இங்ஙனம் அவள் திட்டம் வகுத்துக்கொண்டாள். தான் எடுத்துக்கொண்ட சேவை நன்கு நிறைவேறுதல் பொருட்டு ஆலயத்தொண்டர் குழாமில் தன்னை ஓர் அங்கத்தினளாகப் (Church worker) பதிவு செய்து கொண்டாள். சமுதாயப் பணிவிடை வேலையும் தீவிரமாகத் துவக்கப்பட்டது. வெவ்வேறு விதமான குறைபாடுகளுக்கு உட்பட்டிருந்த ஆடவர் மகளிர், சிறுவர் சிறுமிகள் ஆகியவர்களைப்பற்றிய புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டன. அவர்களுக்கு என்னென்ன பாங்கில் எத்தகைய உதவிகள் செய்ய வேண்டும் என்ற திட்டத்தை இளம் வயதினளான மார்கரெட், கோயில் அதிகாரிகளிடம் சமர்ப்பித்தாள். ஆனால் அவளுடைய எதார்த்தமான முற்போக்கும் வேலைத்திட்டமும் கோயில் அதிகாரிகளுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. அவளுடைய முயற்சிகளெல்லாம் கோயில் சட்டதிட்டத்துக்கு (Statutes of the Church) முரண்பட்டிருந்தன. கண்டவர்களுக்கெல்லாம் தொண்டு செய்வதற்கு அந்தச் சட்டம் இடம் தராது. கோயிலோடு ஏதேனும் ஒருவிதத்தில் தொடர்பு கொண்டிருப்பவர்களுக்குத்தான் உதவி செய்யவேண்டும். இத்தகைய தடைகளையெல்லாம் கோயில் அதிகாரிகள் கொண்டுவந்தார்கள்.

மார்கரெட்டுக்கு இப்பொழுது பெரியஏமாற்றம் உண்டாயிற்று. தான் படைத்திருந்த பரந்த நோக்கம் உலகத்தவர்களிடம் இல்லை என்பதை அவள் கண்டு கொண்டாள். கோயில் திருச்சபையினின்று தான்

விலகிக்கொள்ளாவிட்டால் அது சண்டை சச்சரவுக்கும் குழப்பத்துக்கும் இடம் தரும் என்று அவள் உணர்ந்தாள். தனக்கும் கோயில் அதிகாரிகளுக்கும் உள்ள அபிப்பிராயவித்தியாசத்தைச்சமாசாரப்பத்திரிகை ஒன்றன்மூலம் பிரசுரித்துவிட்டு வேலையினின்று அவள் விலகிக்கொண்டாள். கோயில் அதிகாரிகளின் குறுகிய நோக்கம் அதன் வாயிலாக வெளியாயிற்று. இப்பொழுது அக்கன்னிகை தன் கைவசத்தில் மற்றொரு பெரிய ஆயுதம் இருப்பதைக் கண்டுகொண்டாள். எழுத்தின் துணைகொண்டு உலகத்தவர் கருத்தைப் பெரிதும் மாற்றலாம் என்று அவளுக்கு விளங்கிற்று. ரெக்ஸ்ஹாம் ஏழைகளுடையபரிதாபகரமான நிலைமைகளைப்பற்றிச் சில கட்டுரைகள் எழுதி அவள் வெளியிட்டாள். உண்மையை உள்ளபடி உணர்ந்த பொதுமக்களிடத்திருந்து உதவியும் வர ஆரம்பித்தது. நன்கொடையாகச் சேர்ந்த செல்வத்தைக் கொண்டு உணவுவழங்குதல், வைத்திய வசதிகள் செய்துகொடுத்தல், புத்தகசாலை நிறுவுதல் முதலிய கைங்கரியங்களை ஏழை மக்களுக்கு அவள் செய்து உதவினாள்.

சொந்தப் பள்ளிக்கூடம்

இதற்குள்ளாகத் தன் வாழ்க்கையையே மார்கரெட் ஆழ்ந்து விமர்சனம்செய்தாள். தன்வாழ்க்கைக்குகந்த முக்கியமான செயல் எது என்பதையும் அதற்கு அனுசரணையாக அமையவேண்டியசெயல்கள் எவை என்பதையும் பற்றி அவள் எண்ணிப் பார்த்தாள். அதைப்பற்றிப் பிறரிடம் பேசுவதைவிடத் தன்

மனப்பான்மையையே அவள் மேலும் மேலும் அலசி ஆராய்ச்சி செய்து பார்த்தாள். பிறகு உறுதியான தீர்மானமும் அதினின்று உண்டாயிற்று. கல்வித் துறையில் பயன்படுகிற உயர்ந்த முறைகளைக் கையாளுதல் தன் வாழ்க்கையின் முக்கியமான செயலாக வேண்டும் என்று அவள் தீர்மானித்தாள். பொதுமக்களுடைய நலனைக் குறித்துப் பாடுபடுதல், சமுதாய நலனைக் குறித்துக் கட்டுரைகள் எழுதுதல் இவை போன்ற செயல்கள் இரண்டாந்தரமான இடம் பெற வேண்டும் என்கிற முடிவுக்கு அவள் வந்துவிட்டாள்.

கல்வித்துறையில் நிபுணர்களாயிருப்பவர்களோடு தன் கருத்துக்களைப் பரிசீலனை செய்வது அவசியமென்று மார்கரெட்டுக்குத் தோன்றியது. அதற்காகச் செஸ்டர் (Chester) என்ற ஊருக்குப் புறப்பட்டுப் போனாள். கொஞ்ச காலம் அங்கே தங்கியிருந்தது அவளுக்கு முற்றிலும் பயன்பட்டது. பிறகு மற்றொரு மாதுடன் அவள் லண்டனுக்கு வந்து சேர்ந்தாள். இங்கே தன் புதிய கல்வித் திட்டத்தைப் பற்றிப் பல சங்கங்களிலும் நிபுணர் கூட்டங்களிலும் எடுத்துப் பேசினாள். இத்தகைய ஆராய்ச்சியில் ஆண்டுகள் இரண்டு கழிந்தன. அது நன்கு பயன்படுத்தப்பட்ட காலமாகும். அப்படி ஆராய்ச்சி பண்ணிக்கொண்டிருந்தபொழுது கல்வி நிபுணர்கள் சிலர்களிடையில் உண்டாயிருந்த கருத்து ஒற்றுமை சிலவற்றை ஈண்டுக் குறிப்பிடுவது அவசியமாகிறது.

கல்வி கற்கும் பருவம் வந்துள்ள குழந்தை ஒன்றனிடத்து அளவு கடந்த அன்பு வைத்து, அக்

குழந்தை தங்களை விட்டுப் பிரியாது இருக்கவேண்டுமென்று அதைப்பற்றிப் பிடித்து வைத்திருக்கும் பெற்றோர்கள் அக்குழந்தைக்குப் பரம சத்ருக்கள் ஆவார்கள்.

குழந்தை ஒன்றன் இயல்பை அறிந்துகொள்ளாது தாங்கள் கொடுத்துள்ள வாழ்க்கைத் திட்டத்தை மாத்திரம் அது கடைப்பிடிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிற உபாத்தியாயர்களும் உபாத்தியாயினிகளும் அக்குழந்தைக்குப் பரம சத்ருக்கள் ஆவார்கள்.

இலண்டன் மாநகரத்தில் புதிய பள்ளிக்கூடம் ஒன்றைத் துவக்க மார்கரெட் நோபில் தீர்மானம் செய்தாள். அதன் வளர்ச்சிக்கு ஆங்கு வேண்டியவாறு வசதிகள் அமைந்திருந்தன. அதில் அனுஷ்டிப்பதற்கிருந்த புதிய கல்வி முறைகளை அறிந்துகொள்ளவல்ல விவேகிகளும் கணக்கற்ற பேர் அந்நகரில் அப்பொழுது வசித்திருந்தார்கள். உற்சாகத்துடன் பள்ளிக்கூடமும் துவக்கப்பெற்றது. மார்கரெட்டுக்கு அது அனுதினமும் ஆனந்தத்தை உண்டுபண்ணிற்று. தன் திறமையை வெளிப்படுத்துதற்கு அது நல்லதொரு முகாமையாயிற்று. தனக்குகந்த தொண்டு புரிதல் மூலம் அவளுடைய தோற்றமே இப்பொழுது பொலிவு நிறைந்ததாக மாறிவிட்டது. சிறார்களுடைய உடல் வளர்ச்சிக்கும், உள்ளம் திட்பம் பெறுதற்கும் உறுதுணையாவது ஆசிரியையின் கடமையாகும். விரைவில் வளர்ந்துவரும் சிறார்களை மேலாம்

பாங்குடையவர்களாகத் திருத்தியமைப்பது மார்கரெட் கொண்டிருந்த புதிய கல்வித் திட்டமாகும். ஊக்கமும் தன்னம்பிக்கையுமே சிறுர் உள்ளத்தில் ததும்பிக் கொண்டிருக்க வேண்டும் என்பது அவளுடைய கொள்கை.

மார்கரெட் நோபில் துவக்கியிருந்த புதிய பள்ளிக்கூடத்தில் ஐம்பது அல்லது அறுபது குழந்தைகள் மட்டும் சேர்க்கப்பட்டிருந்தனர். அவர்களுடைய வயது நான்கிற்குக் குறையாமலும் ஆறுக்கு அதிகப்படாமலும் இருந்தது. ஆசிரியையைச் சுற்றிலும் விளையாடிக் கொண்டிருப்பது அவர்களுடைய முக்கியமான பொழுது போக்கு ஆகும். அப்படி விளையாடிக்கொண்டிருக்கும்போது அவர்களுடைய உண்மையான இயல்பு வெளியில் தோன்ற ஆரம்பிக்கும். வளர்கின்ற குழந்தை ஒன்றுக்குக் கட்டுப்பாடுகளைப் பெருக்கலாகாது. தம்போக்கில் குழந்தைகள் மகிழ்வுற்றிருக்க வேண்டும். அவைகளிடத்து உற்சாகம் யாண்டும் ததும்பிக் கொண்டிருப்பது அவசியம். மனதில் உள்ளதை உள்ளபடி வெளியிடும் இயல்பு அவைகளுக்கு உண்டு. ஆதலால் அவைகளின் இயல்பைக் கண்டு கொள்ளுதல் எளிது. அவைகளிடத்துள்ள பொருந்தாத இயல்புகளைப் பழித்தலும் அழித்தலும் கூடாது. கீழான இயல்புகளைப் படிப்படியாக மேலான இயல்புகளாகப் பண்படுத்தவேண்டும். இது ஆசிரியை மார்கரெட்டினுடைய கொள்கை.

4. குருதரிசனம்

மூதுரை கேட்க அழைப்பு

மார்கரெட் எலிஸபெத் நோபில் மனதுக்குள் சமய உணர்ச்சியைப் பற்றிய போராட்டம் ஒன்று நிகழ்ந்து கொண்டிருந்தது. சமயக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொள்ளாத வாழ்வு நல்வாழ்வு ஆகாது என்பது அவளுடைய துணிபு. ஆத்ம ஞானத்துக்கு மக்களை ஆயத்தப்படுத்தாத வாழ்வு பயனற்றது என்றும் அவள் உணர்ந்தாள். சுக்கான் இல்லாத படகு காற்றடித்த பக்கம் மோதப்பெறும். சமய நெறியைப் பின்பற்றாத வாழ்வும் அத்தகையது. ஆனால் சமயக் கோட்பாடுகளிலோ மாறுபடும் கருத்துக்கள் பல இருக்கின்றன. அவைகளில் சில யுக்திக்குப் பொருந்தாதவைகளாகின்றன. பிரபஞ்சத்தின் நடைமுறைக்கு விளக்கமாக வந்தமைபவைகளைக் காண்பதோ அரிதிலும் அரிதாயிருக்கிறது. கார் இருளில் நடப்பதற்கு வழிகாணாது தவிப்பவர் நிலையில் மார்கரெட் இருந்தாள். ஞான விளக்கு என்பது ஒன்று இருந்தே ஆகவேண்டும். அதை அடையப் பெற்றாலொழிய வாழ்வு என்னும் பயணத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியாது. இதுதான் அவளுடைய உள்ளத்தில் நிகழ்ந்து கொண்டிருந்த போராட்டம். அதைப்பற்றி அவளுடைய நண்பர்களில் சிலர் அறிந்திருந்தனர்.

கலைமன்றம் ஒன்றில் கலைவல்லுநர் பலர் கூடியிருந்தனர். கலை ஞானத்தைப் பற்றி உரையாடி மகிழ்வது அவர்களுடைய சீரிய பொழுது போக்கு

ஆகும். அக்கற்றறிஞர் கூட்டத்தில் மார்கரெட்டும் ஒருத்தி. ஒருநாள் அத்தகைய கலைக்கூட்டம் ஒன்று முடிந்த பிறகு அதன் அங்கத்தினர் ஒருவர் மார்கரெட்டை நோக்கி, "சீமாட்டி இஸாபெல் மார்கஸென்னுடைய மாளிகையில் ஹிந்து சந்நியாசி ஒருவர் தத்துவ விளக்கம் செய்யப் போகிறார். அதைக் கேட்க நீயும் வருகின்றாயா?" என்று வினவினர்.

இத்தகைய அழைப்பு ஒன்றை மார்கரெட் ஆசிரியை ஒருநாளும் எதிர்பார்க்கவில்லை. அப்பேச்சைக் கேட்க அவளுக்கு ஆவல் மிக உண்டாயிற்று. எனவே ஆங்குச் செல்ல இசைந்தாள். குறித்திருந்த நாளன்று மாலையில் அவள் ஆற்றுதற்கிருந்த வேறு அலுவல்களை எல்லாம் ஒதுக்கி வைத்தாள். "அந்த மனிதர் யார்? அவர் என்ன விஷயத்தைப் பற்றிப் பேசுவார்?"—இப்படி எல்லாம் மார்கரெட் தன் மனதில் எண்ணிக்கொண்டிருந்தாள். பின்பு பிரசங்கத்துக்கும் புறப்பட்டுப் போனாள். ஆனால் அதற்குரிய கூட்டத்துக்குள் நுழைதற்கு அவள் சிறிது பிந்திவிட்டாள். முன்னணியில் ஒரே ஒரு நாற்காலி காலியாக இருந்தது. கடைசியாக வந்த அவள் அமைதியாக அதில் சென்று அமர்ந்து கொண்டாள். அப்பொழுது அனைவரும் அவளை உற்றுப் பார்த்தார்கள். தன் எதிரே மேடையின்மீது பருத்த திருமேனி தாங்கிய மனிதர் ஒருவர் இனிமையும் சாந்தமும் கம்பீரமும் தாங்கிய பாங்கில் வீற்றிருந்தார். அவர் காவியுடை தரித்திருந்தார். தலையில் கட்டியிருந்த காவித் தலைப்பாகை அவருடைய தோற்றத்துக்குச்

சோபை தந்தது. வட்ட வட்டமாக நறுமணப் புகையைக் கிளப்பிக்கொண்டிருந்த ஊதுவர்த்தி ஒன்று அவர் அருகில் எரிந்துகொண்டிருந்தது. குறித்த நேரத்தில் அப்பெரியாரும் பேசத்தொடங்கினர். தெள்ளத் தெளிந்த ஆங்கில மொழி, அமைதியில் நிலைபெற்றிருந்த மனநிலை, சீரிய கருத்துக்கள், கேட்போரின் ஐயத்தையெல்லாம் அகற்றி வைக்கக்கூடிய நிறைஞான மொழிகள். அவர் பகர்ந்ததையெல்லாம் மார்கரெட் கவனித்துக் கேட்டாள். தான் அதுபரியந்தம் கற்றிருந்தது பொருளற்றது என்று உணர்ந்தாள். அவளுடைய பிடிவாதத் தன்மையும் ஆராய்ச்சித் திறமையும் தகர்த்தெறியப்பட்டன. புதியதோர் அருள்சக்தி அவளை வசப்படுத்திக்கொண்டது. அவளுடைய மனது புதிய ஞான பூமிகளில் விரிந்தோடியது. ஏனென்றால் கடவுளை நேரே கண்டறிந்தவர் போன்று அம்முனிவர் பேசினர். பிரபஞ்சம் அனைத்துடனும் சொந்தம் பாராட்டிய பரமபுருஷனாக அவர் இருக்கக்கூடுமோ என்று அவள் உணர்ந்தாள். ஆனால் அவள் அப்பொழுது கேள்வி ஒன்றும் கேட்கவில்லை. மேலும் எண்ணிப்பார்க்க அவள் தீர்மானம் செய்தாள். சற்றுப் பொறுத்திருந்து அப்பெரியவருடன் பேசிப் பார்க்க வேண்டுமென்றும் அவள் தீர்மானித்தாள்.

சந்தேகம் தெளிதல்

அம்மஹான் யார் என்பதை மார்கரெட் இப்பொழுதுதான் அறிந்துகொண்டாள். மற்றவர் பலர் அவரைப்பற்றி ஏற்கனவே கேள்விப்பட்டிருந்

தார்கள். ஆனால் மார்கரெட்டோ அவரை நேரில் பார்த்த பிறகே அவருடைய வரலாற்றைத் தெரிந்து கொண்டாள். அவர் உலகப் பிரசித்தி பெற்றிருந்த சுவாமி விவேகானந்தர். இந்தியாவின் தவச்செல்வர் அவர். அமெரிக்காவில் நிகழ்ந்த சர்வமத மஹாசபை யின் வெற்றி வீரர் அவர். மேல்நாட்டவர்களுடைய மனநோயை அகற்றி வைக்க வந்திருந்த மற்ருெரு புத்தர் போன்றவர் அவர். ஒரு குழந்தையின் களங்க மற்ற தன்மையும், ஒரு ஞானபண்டிதனது சீரிய பாங் கும் ஒன்று சேர்ந்து அவரிடம் மிளிர்ந்தன. கீர்த் திக்கு அவர் சிறிதேனும் வசப்பட்டவர் அல்லர். இதையெல்லாம் கேட்டறிந்த மார்கரெட்டுக்குத் திகைப்பு மிக உண்டாயிற்று. இலண்டனில் விவேகா னந்த சுவாமிகள் நிகழ்த்திய இன்னும் இரண்டு சொற் பொழிவுகளை இந்த ஆசிரியை கேட்டு மகிழ்ந்தாள். ஆனல் அதற்கெல்லாம் மேலாக சுவாமிகளுடன் நிகழ்த்திய சம்பாஷணைகள் வாயிலாகத் தனக்குத் தேவையான ஞானேபதேசத்தை அவள் பெறுவா ளாயினள். அவள் பெற்ற புதிய கோட்பாடுகளைச் சுருக்கமாகச் சொல்லிவிடலாம். பௌதிக விஞ்ஞா னக் கோட்பாடுகளை ஆராய்ச்சி செய்வதுபோன்று கடவுள் தத்துவங்களையும் யுக்திபூர்வமாக ஆராய்ச்சி செய்யலாம். மானுட அமைப்பு உண்மையில் ஆத்ம சொரூபம் என்பதும், தெய்விகம் யாவும் அந்த ஆத்ம சொரூபத்தில் அமைந்திருக்கின்றன என்பதும் தன் சொந்த அனுபவத்தில் அறிந்துகொள்ளக்கூடியவை களாம். ஒழுங்குப்பாடான ஞானவாழ்க்கை வாழ்ந்து

வருபவர்களுக்கு ஆத்மஞானத்துக்கு ஏற்றபரிபாகம் நாளடைவில் வந்துவிடுகிறது. மக்கள் பாபத்தில் கட்டுண்டுகிடக்கிற கொள்கையைத்தான் மார்கரெட் இது வரையில் நம்பியிருந்தாள். பாபம் என்பது அறியாமையின் விளைவு என்பதையும், மெய்யறிவு பெற்றவர் பாபத்தை முழுதும் கடந்துவிடலாம் என்பதையும் இப்பொழுது அவள் அறிந்துகொண்டாள். அதிவிரைவில் இத்தகைய விவேகம் அவளுக்கு வந்துவிட்டது.

விவேகானந்த சுவாமிகள் லண்டனில் நிகழ்த்திய வேதாந்த உபந்நியாசங்களையெல்லாம் மார்கரெட் கருத்துடன் கேட்டுவந்தாள். அப்படிக் கேட்டறிந்த விஷயங்களைப் பற்றிப் பிறகு சந்தேகம் தெளிந்து கொள்ளும் பாங்கில் வேண்டியவாறு விவாதங்கள் நடைபெறும். தங்களுக்கு உற்ற ஐயங்களைக் குறித்து அவர்கள் தாராளமாக உரையாடலாமென்று சுவாமிகள் இனி அமைதற்கிருந்த சிஷ்யக்கூட்டத்தாருக்கு உற்சாகமூட்டினார். பொருத்தமான கேள்விகளைப் பல தடவைகளில் கிளப்பியவள் மார்கரெட் ஆவாள். ஐயம் திரிபு அற அவைகளுக்கேற்ற விடைகளும் விளக்கங்களும் விவேகானந்த சுவாமிகளிடமிருந்து வந்துகொண்டிருந்தன. மார்கரெட்டின் மனதில் இப்பொழுது பெரிய மாறுதல் ஒன்று விரைவில் உண்டாய்க்கொண்டிருந்தது. தான் ஆற்றி வந்திருந்த சமுதாய சேவைகளைப்பற்றி அவள் சுவாமிகளிடம் எடுத்துரைத்தாள். இலண்டன் நகரத்துக்கு அக்கம் பக்கங்களில் நடைபெற்று வந்த பலதரப்பட்ட சமு

தாய சேவைகளை நேரில் பார்ப்பதற்குச் சுவாமிகளை மார்கரெட் அழைத்துச் சென்றாள். சுவாமிகளோ அத்தகைய சேவைகளின் வெற்றி தோல்விகளைச் சிறிதேனும் கருத்தில் வாங்கிக்கொள்ளவில்லை. ஆனால் எத்தகைய மனப்பாங்குடன் அவைகளை ஆற்றி வர வேண்டும் என்பதை மார்கரெட்டுக்கும் மற்ற சிஷ்யர்களுக்கும் எடுத்துரைத்தார்.

இதற்கிடையில் இந்தியாவில் பொதுமக்களுடைய நலத்துக்காகவும் பெண்பாலருடைய முன்னேற்றத்துக்காகவும் தாம் கொண்டிருந்த பணிவிடைத் திட்டங்கள் சிலவற்றைப்பற்றி சுவாமிகள் தம் ஆங்கிலேய சிஷ்யர் சிலருக்கு எடுத்துச் சொன்னார். மார்கரெட்டின் மனது இப்பொழுது முற்றிலும் மாறிவிட்டது. தன் வரலாற்றையெல்லாம் அவள் சுவாமிகளிடம் தங்குதடையின்றித் தெரிவித்தாள். அவரைக் குருநாதர் என்று அழைக்கவும் ஆரம்பித்துவிட்டாள். தான் மணம்புரிந்துகொள்ள இரண்டு தடவை முயன்றதும், அதில் தான் தோல்வியுற்றதும் இறுதியில் தனக்கு நலந்தருவனவாயின என்று அவள் தெரிவித்தாள். இப்பொழுது தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் சுவாமிகளிடம் ஒப்படைத்துவிடுவதாகவும், இந்தியாவில் அவர் இட்டபணிவிடையைச் சிரமேற்கொண்டு ஆற்றிவருவதாகவும் அவள் தெரிவித்தாள். ஆனால் சுவாமிகள் அதற்கு உடனடியாக நேர்விடை ஒன்றும் கொடுக்கவில்லை. அவள் கொண்டிருந்த இல்ட்சியத்தைப்பற்றி இன்னும் நன்றாக எண்ணிப்பார்க்கும்படி அவர்

தூண்டினர். ஏனென்றால் மனதினுடைய போக்கை யாருமே தெரிந்துகொள்ள முடியாது. அவசரப்பட்டு செய்யும் தீர்மானம் பிறகு இடைஞ்சலாக வந்து அமையும்.

குரு இந்தியாவுக்குத் திரும்புதல்

தம் மேல்நாட்டு சிஷ்யர்பலர் புடைசூழ சுவாமி விவேகானந்தர் 1897 ஆம் ஆண்டின் இறுதியில் இந்தியாவுக்குத் திரும்பினர். ஆனால் அக்கூட்டத்தில் மார்கரெட் நோபிள் சேர்ந்துகொள்ளவில்லை. அவள் இன்னும் சிறிது காலம் இலண்டனிலேயே தங்கியிருக்க வேண்டுமென்றும், அதற்கிடையில் அவள் தன் மனதை நன்ருகப் பரிசோதனை செய்துபார்க்க வேண்டுமென்றும் சுவாமிகள் கட்டளையிட்டிருந்தார். மார்கரெட்டும் அந்த நிபந்தனைக்குத் தன்னை உட்படுத்திகொண்டாள். விவேகானந்த சுவாமிகளைச் சந்தித்தான பிறகு லண்டனில் வேதாந்த விசாரம் செய்தவர்கள் ஒரு சிறு சங்கமாகக் கூடினர். தத்துவ விசாரம் செய்வதும் ஆத்ம சாதனங்கள் புரிவதும் அவர்களின் நோக்கமாயிற்று. அந்த ஸத் சங்கத்தவர்களுக்கிடையில் மார்கரெட்நோபில் முக்கியமான இடம் பெற்றிருந்தாள்.

நான்கு ஆண்டுகளுக்கு மேல் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் வேதாந்தக் கோட்பாடுகளைப் பரப்பிவந்த விவேகானந்த சுவாமிகள் இப்பொழுது தாய்நாட்டுக்குத் திரும்பிச்சென்ருர். இலங்கையிலிருந்து இமயம்வரையில் அவருக்கு அற்புதமான வரவேற்பு அளிக்கப்பட்டது. ஆனால் அவர் துவக்கு

வதற்கிருந்த இயக்கத்துக்குப் பணம் கொடுப்பார் யாரும் ஆங்குத் தென்படவில்லை. மேல்நாடுகளிலிருந்து அவர் திரட்டியெடுத்துச் சென்றிருந்த சிறு தொகையைக் கொண்டு கல்கத்தாவில் எளியமுறையில் மடாலயம் ஒன்றை அவர் துவக்கிவைத்தார். இந்தியாவில் வெவ்வேறு இடங்களில் தவம்புரிந்து கொண்டிருந்த தம் குரு சகோதரர்களையெல்லாம் அந்தப் புதிய மடாலயத்துக்கு அவர் வரவழைத்தார். தம் சொந்த சிஷ்யர்களையும் அதே இடத்தில் அவர் திரட்டினார். அவர்கள் அனைவரும் ஒன்றுகூடி ஓர் ஆத்மீக இயக்கத்தைத் துவக்குவதன் அவசியத்தையும் சுவாமிகள் அவர்களுக்கு எடுத்துப் புகட்டினார். பிறர் நலத்துக்காகப் பாடுபடுதற்கு நிகரான தபசும் ஆத்ம சாதனமும் இல்லை என்பதையும் அத்துறவியர்களுக்கு அவர் விளக்கிக் காட்டினார். விவேகானந்த சுவாமிகள் வகுத்து வைத்த வாழ்க்கை முறைக்குக் குரு சகோதரர்களும் சிஷ்யர்களும் முற்றிலும் ஒருப்பட்டனர். இதுவரையில் அவர்கள் வாழ்ந்து வந்திருந்த வாழ்க்கையைவிட அது மிகச்சிறந்தது ஆகும். விபத்து ஒன்று அப்பொழுது கல்கத்தாவில் நேர்ந்தது. நூற்றுக்கணக்கானபேர் பிளேக் நோய்க்கு உட்பட்டு மடியலாயினர். இன்னும் சில இடங்களில் பஞ்சம் வந்து பட்டினி போட்டுப் பொதுமக்களைத் துடைத்துக்கொண்டிருந்தது. விவேகானந்த சுவாமிகள் துவக்கிய துறவியர் சங்கத்தின் மனவுறுதியைச் சோதிப்பதற்கென்றே அந்த விபத்துக்கள் தோன்றினபோலத் தென்பட்டன. உடனே கஷ்ட நிவாரண

வேலைசெய்ய அந்தச் சங்கம் ஆரம்பித்தது. மரணத்துக்கு அஞ்சாது பிளேக் நோயாளிகளுக்குப் பணிவிடை செய்வது ஒரு பக்கம்; பஞ்சத்தில் மடிபவர்களுக்குக் கஞ்சி காய்ச்சிக் கொடுத்து உயிர் காப்பாற்றுவது மற்றொரு பக்கம். ஆருயிர்ப்பணியை ஆண்டவன் பணியாகக் கருதி இங்ஙனம் சமுதாய சேவை நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இலண்டனில் இருந்த மார்கரெட் நோபிலுக்குத் தபால்மூலம் இச்செய்திகள் எட்டிக்கொண்டிருந்தன. தன் குருநாதர் மடம் ஒன்றைத் துவக்கிவிட்டார் என்பதைக்கேட்டு அவள் மட்டில்லா மகிழ்ச்சி கொண்டாள். அந்த மடத்தைச் சேர்ந்த துறவியர்கள் பிளேக் நோய் நிவாரணம், பஞ்சத்தில் வருந்தியவர்க்குக் கஞ்சி கொடுத்தல் முதலிய பணிவிடைகளைச் செய்து வருகிறார்கள் என்பதைக்கேட்டு அவளுடைய ஊக்கம் பன்மடங்கு அதிகரித்தது. இங்கிலாந்திலிருந்த பத்திரிகைகளில் அவள் இங்ஙனம் வெளியிட்டாள்:

"புதியதொரு துறவியர் சங்கம் தோன்றியிருக்கிறது. இதற்கு நிகரானது இதுவரையில் உலகில் வந்ததில்லை. கிறிஸ்தவர்கள், மகமதியர்கள், ஹிந்துக்கள் ஆகிய அனைவரும் இதில் இடம் பெறுகின்றனர். புத்தர் காலத்துக்குப் பிறகு இப்பொழுது இந்தியாவில் நிகழ்கிற அற்புதம் இது. பொதுமக்கள் நன்மைக்காக இந்தச் சங்கம் பாடுபடுகிறது. ஒரு மாதத்தில் பதினாயிரம் பேர் பஞ்சத்தினின்று பாதுகாக்கப்பட்டனர். கொஞ்சம் கூழ் மனிதனைக் கூற்றுவன்

கையிலிருந்து பிடுங்கிக்கொண்டு வந்துவிடுகிறது. தாராளமாகப் பொருளுதவி செய்யுங்கள். நம் நன்கொடை இப்பொழுது முற்றிலும் தேவை."

பள்ளிக்கூடத்து ஆசிரியையாயிருந்ததுபோன்று சமுதாய சேவையிலும் மார்கரெட் எலிஸபெத் நோபிள் பெரிதும் கருத்துச் செலுத்தி வந்தாள். இந்தியாவில் கஷ்டப்பட்ட மக்களுக்காகவென்று அவள் வெளியிட்டிருந்த விண்ணப்பத்துக்கு ஆங்கிலேயர் பலர் செவிசாய்த்தனர். தாராளமாக நன்கொடைகள் அவளிடம் அனுப்பப்பட்டன. அவைகளையெல்லாம் ஒரு நிதியாகத் திரட்டி அவள் சுவாமி விவேகானந்தருக்கு அனுப்பிவைத்தாள்.

ஆனால் நாள் ஏற ஏறத் தான் இந்தியாவுக்கே போய்விட வேண்டுமென்ற அவா மார்கரெட்டுக்கு மிகுதியாக உண்டாயிற்று. அவள் சுவாமிகளுக்கு எழுதிய கடிதத்தில் அடங்கியிருந்த கருத்தாவது:

"இந்திய மக்களுக்கு நான் எவ்விதத்திலாவது பயன்படுவேனா என்பதைப்பற்றி வெளிப்படையாகவும் தெளிவாகவும் எனக்கு எடுத்துச்சொல்லுங்கள். இந்தியாவுக்கே வந்துவிட வேண்டுமென்று நான் விரும்புகிறேன். வாழ்க்கைப்பயனை நான் அடைவது எங்ஙனம் என்பதை இந்தியாதான் எனக்குப் புகட்டியாக வேண்டும்."

இந்தியாவின் நிலைமை

இதற்கு விடையாக விவேகானந்த சுவாமிகள் எழுதியதாவது:

"நீ இந்தியாவுக்கு வந்து விஷயங்களை நேரில் பார்த்து அறிந்துகொள்ளத் தீர்மானித்திருக்கின்ருய். வெளிப்படையாக ஒரு விஷயத்தை உனக்குத் தெரிவித்து விடுகிறேன். இந்தியாவுக்காகப் பணி விடை செய்வதில் உன்னுடைய வாழ்வு பெருவாழ்வு ஆகும் என்பதில் எனக்கு நம்பிக்கை மிக உண்டு. இந்தியாவில் பெண்பாலர்க்கிடையில் பணிவிடை ஆற்றுதற்கும் இன்றைக்குப் பெண்சிங்கம் போன்ற மாது ஒருத்தி வேண்டும். இந்தியாவானது இப் பொழுது க்ஷீணதசை அடைந்திருக்கிறது. வீரம் படைத்துள்ள பெண்டிர்களை இக்காலத்தில் காண முடியாது. ஆனல் நிச்சயமாக எதிர்காலத்தில் அவர்கள் தோன்றி வருவார்கள். இப்போதைக்குச் சீரிய பாங்கில் வினையாற்றுதற்கு வெளிநாடுகளிலிருந்து வீர மாதர்களை வரவழைத்தாகவேண்டும். நீ கல்வி மிகக் கற்றவள்; இந்தியாவுக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்ற மனப்பூர்வமான எண்ணம் உனக்கு உண்டு. நீ தூய்மைக்கு இருப்பிடம். உள்ளன்போடு மன்னுயிர்களை நீ நேசிக்கின்ருய். நீ உறுதியான உள்ளம் படைத்தவள். இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக உன் உடலில் வீர ரத்தம் (Celtic blood) ஓடிக்கொண்டிருக்கிறது. எனவே ஈண்டு ஆற்றுதற்கிருக்கும் அரும் பெரும் செயலுக்கு நீயே தகுதி வாய்ந்தவள்.

"பின்பு இங்குக் கஷ்டங்கள் பல உள. இந்நாட்டில் மக்கள் படும் துயரம், அவர்கள் கொண்டுள்ள மூடநம்பிக்கை, அவர்கள் துய்க்கும் அடிமைத்தனம்

ஆகியவைகளைப்பற்றி நீ இப்பொழுது ஒன்றும் அறிந்திலாய். அணிந்துகொள்ளுதற்குப் போதியவளவு ஆடைகள் இல்லாமையினால் பாதி நிர்வாணமாயிருக்கும் ஆடவர்களுக்கும் மகளிர்களுக்குமிடையில் நீ இங்கு வாழ்ந்திருக்கவேண்டும். ஜாதி வேற்றுமையைப்பற்றியும் ஒருவரிடத்து மற்றொருவர் ஒதுங்கி இருப்பதைப்பற்றியும் இம் மாந்தரிடத்து விபரீதமான எண்ணங்கள் உண்டு. அச்சத்தால் அல்லது வெறுப்பால் வெள்ளைக்காரர்களிடமிருந்து அவர்கள் விலகியோடுவார்கள். இனி, வெள்ளைக்காரர்களோ இவர்களை முற்றும் வெறுக்கின்றனர். இந்நாட்டவர்க்குப் பணிவிடை செய்ய நீ வந்தால் உன்னைப் பைத்தியக்காரியென்று வெள்ளையர்கள் கருதுவார்கள். உன் செயல்களை யெல்லாம் சந்தேகத்தோடு அவர்கள் கண்காணிப்பார்கள்.

"இந்தியாவின் சீதோஷ்ண ஸ்திதி பயங்கரமானது. இங்குக் குளிர்காலம் என்பது உன் ஊரில் உள்ள கோடைக்காலம் போன்றிருக்கும். தென்னிந்தியாவிலோ எப்பொழுதும் வெயில் கொளுத்திக் கொண்டிருக்கும். பெரிய நகரங்கள் நீங்கலாக ஏனைய இடங்களில் ஐரோப்பிய வசதிகளில் ஒன்றையும் நீ காணமாட்டாய். இத்தனைவிதமான இடைஞ்சல்களுக்கிடையில் இங்கு நீ பணிவிடை செய்ய விரும்புவாயாகில் உன்னை நான் வரவேற்கிறேன்; பன்முறை கூவியழைத்து வரவேற்கிறேன். எனக்கு இங்கே செல்வாக்கு மிக இருக்கிறதென்று நீ கற்பனை செய்துகொள்ள வேண்டாம். மக்கள் ஏதோ என்பால்

வைத்துள்ள சிறிய மதிப்பை நீ ஆற்றுதற்கிருக்கும் சேவையின் பொருட்டுப் பயன் படுத்திக்கொள்ள லாம்.

"இத்தகைய செயலிலே இறங்குதற்கு முன்பு நீ நன்ருய் நினைத்துப் பார்க்கவேண்டும். ஒருவேளை உன் முயற்சியில் நீ தோல்வியடைந்துவிட்டாலோ அல்லது உனக்குச் சலிப்புத்தட்டிவிட்டாலோ அதைக் குறித்து நான் ஏமாற்றம் அடைந்துவிடமாட்டேன். நீ இந்தியாவுக்குப் பணிவிடை செய்தாலும் சரி; செய் யாமல் விட்டுவிட்டாலும் சரி. நீ வேதாந்தக் கோட் பாடுகளை ஏற்றுக்கொண்டாலும் சரி; ஏலாது புறக் கணித்துவிட்டாலும் சரி. என்னைப் பொறுத்தவரை யில் என் உயிர் இருக்கும் பரியந்தம் நான் உனக்கு உதவிசெய்வேன். யானையின் தந்தங்கள் வெளியே வருகின்றன; பிறகு உள்ளே போவதில்லை. நல்லான் ஒருவன் கொடுத்துள்ள உறுதிமொழியைத் திருப்பி எடுத்துக்கொள்ள மாட்டான். என் உதவி யாண் டும் உனக்கு உண்டு என்று நான் உறுதி கூறுகி றேன். பிறகு எச்சரிக்கையொன்று உனக்குச் செய் கிறேன். தன் கையே தனக்கு உதவி என்னும் பாங் கில் இங்கு நீ வாழ்ந்திருக்க வேண்டும். பிறர் ஆதர வில் இங்கு நீ வாழ்ந்திருக்க விரும்பவேண்டாம்."

இந்தியாவுக்கு யாத்திரை

இந்தப் பாங்கில் விவேகானந்த சுவாமிகள் மார்க ரெட்டுக்குக் கடிதம் எழுதியனுப்பினர். இது அவளை உற்சாகப்படுத்தியது. இந்தியாவுக்குப் போக வேண்டுமென்று தீர்மானப்படுத்திக் கொண்டாள்.

ஆனால் தனது தீர்மானத்தை உடனே யாரிடமும் தெரிவிக்கவில்லை. அமைதியாக அதற்கு ஏற்பாடுகள் ஆய்க்கொண்டிருந்தன. தான் நடாத்திவந்த பள்ளிக்கூடத்தைத் தன் தங்கை மே நோபிளிடம் ஒப்படைத்தாள். அதை ஒழுங்காக நடத்துதற்குவேண்டிய பயிற்சியையும் தன் உடன் பிறந்தவளுக்கு அளித்து வந்தாள். பெற்ற தாய்க்கும் உடன்பிறந்த சகோதரிக்கும் சகோதரனுக்கும் வேண்டிய பராமரிப்பை அளித்து வந்தாள் மார்கரெட். அக்குடும்பத்துக்கு அவள்தான் தலைவியாக இருந்து வந்தாள் எனலாம். இனி, தன் சீரிய நோக்கத்தைப்பற்றியும், உற்றுரை விட்டுப் பிரிந்துபோகவேண்டிய அவசியத்தைப்பற்றியும் தாயிடம் சொல்லியாகவேண்டும். அது பெருந்துன்பத்துக்கு ஏதுவான செயல். ஆயினும் அமைதியாகவும் உறுதியாகவும் மார்கரெட் விஷயத்தை எடுத்துத் தாய்க்கு விளக்கிச் சொன்னாள். தெய்வாதீனமாகத் தாய் மேரி நோபிள் அதைக் குறித்துத் துயரப்படவில்லை. "இறைவா, உன் திருவுளம் அங்ஙனம் இருக்குமாயின் என் குழந்தையை உனக்கு ஒப்படைக்கிறேன்." அன்று சொன்ன அந்தப் பிரார்த்தனையை இன்று திரும்பவும் நினைவுக்குக் கொண்டுவந்தாள். தன் கணவன் சாமுவேல் நோபிள் இறுதிக் காலத்தில் சொல்லிவைத்துவிட்டுப் போனதையும் இப்பொழுது நினைவுக்குக்கொண்டுவந்தாள். "மகளே, உன் விருப்பப்படிசெய்" என்ற ஆசீர்வாதம் தாயின் வாயினின்று வெளியாயிற்று. மார்கரெட்

டுக்கு மனம் குளிர்ந்தது. ஏனைய ஆயத்தங்களை அவள் தீவிரமாகச் செய்து முடித்தாள்.

குறித்த நன்னாளும் வந்தது. குடும்பத்தாரும் சில நண்பர்களும் சேர்ந்து இரண்டு மூன்று வண்டிகளில் துறைமுகத்துக்குப் புறப்பட்டார்கள். அப்பொழுது மழை கொட்டிக் கொண்டிருந்தது. பிரிவு ஆற்றாத உணர்வு ஒருபுறம்; குளிர் மற்றொருபுறம். எனவே எல்லாரும் நடுங்கிக்கொண்டு சென்றனர். மார்கரெட் கப்பல் ஏறியாய்விட்டது. அது புறப்படும் வரையில் தாயும், உடன்பிறந்தவர்களும், சிநேகிதர்களும் துறை முகத்து மேடையிலேயே நின்று கொண்டிருந்தனர். நீராவிக் கப்பல் நகர்ந்தது. மார்கரெட் கப்பல் தட்டில் நின்றுகொண்டு தன் உற்றாரைப் பார்த்த வண்ணமா யிருந்தாள். அப்பொழுது அவள் முகத்தில் எழிலும் புதிய சோபையும் மிளிர்ந்தன. இனி, அவள் அவர் களுக்குச் சொந்தமல்லள். ஆனால் அவளுடைய அலகிலா அன்பு யாண்டும் அவர்களுக்குச்சொந்தமா யிற்று. மூடுபனியில் கப்பல் மறைந்தது. தான்நாடிச் சென்ற ஞான ஒளியினிடத்து மார்கரெட் தன் கருத் தைச்செலுத்தினாள். விவேகானந்த சுவாமிகள் எழு திய நிறைமொழிக் கடிதம் அவள்கையில் இருந்தது: "யானையின் தந்தங்கள் வெளியேவருகின்றன. பிறகு உள்ளே போவதில்லை. நல்லான் ஒருவன் கொடுத் துள்ள உறுதிமொழியைத் திருப்பியெடுத்துக் கொள்ளமாட்டான். என் உயிர் இருக்கும் பரியந்தம் நான் உனக்கு உதவி செய்வேன்."

5. தீக்ஷை பெறுதல்

இந்தியத் தாய்

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் ஸ்ரீ சாரதா தேவியை மணந்திருந்தார். ஆனால் அவர்கள் இருவரும் இவ்வுலகத்தவர்போன்று இல்வாழ்க்கையில் ஈடுபடவில்லை. ஞான வாழ்க்கையில் ஒன்றுபட்டிருப்பது அவர்களின் குறிக்கோள் ஆயிற்று. துறவறத்துக்குரிய வாழ்க்கையையே அவர்கள் கடைப்பிடித்திருந்தனர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் காலமான பிறகு நெடுங்காலம் அன்னை சாரதா தேவியார் வாழ்ந்திருந்தார். தம் அருள் செல்வர்களுக்கும் செல்வியர்களுக்கும் பக்தியையும் ஞானத்தையும் நல்கியது அவருடைய வாழ்க்கைச் செயலாயிற்று. தம் ஞானத்தாய் அன்னை சாரதா தேவியாரின் அனுக்கிரகத்தைப் பெற்றபின்பே அமெரிக்கா போவது போன்ற அரும்பெருஞ் செயல்களில் விவேகானந்த சுவாமிகள் இறங்கலானார்.

மார்கரெட் எலிஸபெத் நோபிள் தன் தாய்நாட்டைத் துறந்துவிட்டு இந்தியாவுக்குப் புறப்பட்டு வந்தாள். இந்தியாவைத் தன் சுவீகாரத் தாய் நாடாகக் கருதவேண்டும் என்பது அவள் மனதில் கொண்டிருந்த எண்ணம். இந்நாட்டின் நிலைமையை நேரில் வந்து பார்ப்பதற்கு முன்பே அப்படி அவள் எண்ணியது ஓர் அலாதியான துணிச்சல் ஆகும். அதற்குத் தக்க காரணமும் இருந்தது. விவேகானந்த சுவாமிகளைக் குருவாக ஏற்றுக்கொண்ட பிறகு அவருடைய

தாய்நாட்டைத் தனது சுவீகாரத் தாய் நாடாகக் கருதவேண்டியதுதானே முறை! அத்தகைய பக்தி ததும்பிய மனப்பாங்குடன் அவள் கல்கத்தா வந்து சேர்ந்தாள். அவளை உடனே அன்னை சாரதாதேவியாரிடம் அழைத்துச் செல்வது விவேகானந்தருடைய கடமையாயிற்று. அந்தச்சந்திப்பு ஒரு சரித்திர பூர்வமான நிகழ்ச்சியாகும். மேல்நாட்டுப் பண்புக்கு இருப்பிடம் மார்கரெட் என்பவள்; இந்தியப் பண்பின் உச்சநிலை அன்னை சாரதாதேவியார். தயங்கிக்கொண்டு மார்கரெட் அன்னையின் முன்னிலையில் வந்து நின்றாள்.

"மகளே, அருகில் வந்து அமர்ந்திரு" என்ற அமுதமொழி அன்னையின் வாயினின்று வெளியாயிற்று. மெய்ம்மறந்தவளாய் மார்கரெட் பக்கத்தில் சென்று உட்கார்ந்தாள். அவளுடைய தலையைத் தடவிக்கொடுத்தார் அன்னையார். நீங்காத தொடர்பும் அப்பொழுதே உண்டாய்விட்டது. மார்கரெட் ஆங்கிலத்தில் மொழிந்தாள். அன்னையார் வங்காளத்தில் பேசினார். ஒருவரை ஒருவர் அறிந்துகொண்டார்கள். அன்பினுக்கும் உண்டோ புறமொழி என்னும் அடைக்குந் தாழ்!

வேதாந்த பாடம்

அமெரிக்காவினின்றும் இங்கிலாந்தினின்றும் இப்பொழுது விவேகானந்த சுவாமிகளிடம் வந்துள்ள சிஷ்யர்கள் ஏழுபேர் ஆவார்கள். அவர்களுள் மார்கரெட் அறிவுத்திறமைமிக வாய்க்கப்பெற்றவள் என்றால் அது மிகையாகாது. நாள்தோறும் காலையில்

இரண்டுமணி நேரம் விவேகானந்த சுவாமிகள் அவர்களுக்கு வேதாந்த பாடம் நடத்திவந்தார். தங்களுடைய அறிவைச் சரியாகப் பயன்படுத்தாதவர்களுக்குச் சந்தேகம் உண்டாவதில்லை. ஆனால் யார் சந்தேகங்களை ஏராளமாகக் கிளப்புகிறார்களோ அவர்கள் புகட்டப்படும் விஷயங்களை ஆழ்ந்து எண்ணிப்பார்க்கிறார்கள் என்பது வெளியாகிறது. மார்கரெட்டுக்குப் புதிய புதிய சந்தேகங்கள் நாள்தோறும் வந்து கொண்டே இருக்கும். அவைகளையெல்லாம் அதி அற்புதமாக விளக்குதற்கு விவேகானந்த சுவாமிகள் முன்வருவார். சிஷ்யர்கள் கிளப்பிய சந்தேகத்துக்கு மேல் அதிகமான சந்தேகங்களை அவரே கிளப்பிவிடுவார். பிறகு அவைகளுக்கெல்லாம் தக்க விளக்கங்களை அவர் எடுத்து வழங்கும்போது கேட்போரது மனதில் தெளிவுமிக உண்டாகும். முன்பு தாமே ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரிடம் சிஷ்யனாகச் சென்றிருந்தபொழுது சந்தேகங்களை ஏராளமாகக் கிளப்பியவர் அவர். விவாதங்களையும் ஏராளமாகச் செய்தவர் அவர். அப்படி அலசி ஆராய்ந்து ஞானத்தெளிவடைந்தவர் அவர். ஆதலால் மற்றவர்களுடைய ஐயத்தையும் அகற்றுதற்கு அவரே முற்றிலும் தகுதி வாய்ந்தவர். அந்த ஞானவிசாரம் முழுதையும் இப்பொழுது மார்கரெட் ஏற்றுவந்தாள்.

ஞானாசாரியர் ஒருவருடைய பிறந்ததின விழாவை இந்திய மக்கள் என்ன பாங்கில் கொண்டாடுகிறார்கள் என்பதைக் காணும் வாய்ப்பு மார்கரெட்டுக்குக் கிடைத்தது. ஸ்ரீ ராமகிருஷ்ண பரம

ஹம்சரின் பிறந்த நாள் விழா ஆண்டுதோறும் சிறப் படைந்து வந்தது. சுவாமி விவேகானந்தர் அமெரிக் காவினின்று திரும்பி வந்திருந்தமையால் அதன் பெருமை அவ்வாண்டில் மேலும் அதிகரித்தது. திறந்த மைதானம் ஒன்றில் அழகியதொரு கொட்டகை அமைக்கப்பட்டது. பரமஹம்ச தேவரின் திருவுரு வப்படம் அதனுள் அலங்கரித்து வைக்கப்பட்டது. அப்படத்தின் வாயிலாக அவருக்கு வழிபாடு செலுத் தப்பட்டது. அப்பொழுது அவர் திருமேனி தாங்கி ஆங்கு எழுந்தருளியிருப்பதுபோன்று பக்தர்கள் உணர்ந்தார்கள். அன்பர்கள் பலர் ஆங்கு அமர்ந் திருந்து தியானம் பண்ணினார்கள். வேறு பலர் இன்னிசைக் கருவிகளின் துணைகொண்டு அவரைப் போற்றி மனமுருகிப் பாடினார்கள். மற்றும் பலர் பஜனை பண்ணினார்கள். ஆனந்த பரவசமடைந்தவர் களாக இன்னும் பலர் தாண்டவமாடினார்கள். இத்த கைய காட்சிகளை மார்கரெட் தன் தேசத்தில் கண்டது கிடையாது. திருவிழாவில் நடைபெற்ற மற்றொரு காட்சி வெளிநாட்டவர்களுக்கு வியப்பூட்டியது. அமுது சமைத்து அது ஆயிரக்கணக்கான பேருக்கு அன்புடன் அளிக்கப்பட்டது. ஏழையர், பணக்காரர், உயர்ந்த ஜாதியார், தாழ்ந்த ஜாதியார் என்ற வேற் றுமையின்றி இறைவன் பெயரால் அவர்கள் பக்தி விசுவாசத்துடன் புசித்தனர். கடவுளின் பெயரால் இந்தியாவில் நிகழும் நிகழ்ச்சிகள் அலாதியானவை என்பதை மார்கரெட் அறிந்துகொண்டாள்.

இத்திருவிழா நிகழ்ந்த பிறகு மாதம் ஒன்று கடந்து சென்றது. மார்கரெட்டுக்கு ஞான தீக்ஷை செய்து வைக்கவேண்டிய காலமும் அணுகியது. 1898ஆம் ஆண்டு மார்ச் மாதம் 29ஆம் தேதியன்று அப்புனிதச் சடங்கு நிறைவேறியது. அதற்காக அவள் ஒருநாள் முழுதும் பட்டினியிருந்து மௌனமாகப் பிரார்த்தனை பண்ணவேண்டியதாயிற்று. ஞான குருவாகிய விவேகானந்த சுவாமிகள் அதற்கேற்ற பூஜை ஒன்றைச் செய்து முடித்தார். தம் எதிரில் மார்கரெட்டை அமர்ந்திருக்கச் செய்து ஆழ்ந்து தியானத்தில் மூழ்கினார். அப்பொழுது அவள் மனத்தகத்து ஞான விளக்கேற்றி வைக்கப்பட்டது போன்று உணர்ந்தாள். புதிய ஞானப் பிறப்பு எடுத்ததற்கு அறிகுறியாக நெற்றியிலே திருநீறு பூசப்பட்டது. சிஷ்யை ஜபம் செய்யவேண்டிய திருநாமம் ஓதப்பட்டது. பிறகு நிவேதிதை என்னும் புதிய தீக்ஷாநாமம் அவளுக்கு அளிக்கப்பட்டது. கடவுளுக்குப் படைக்கப்படும் பொருள் நிவேதனம் என்று அழைக்கப்படுகிறது. நிவேதிதை என்பது கடவுளுக்குப் படைக்கப்பட்டவள் எனப் பொருள்படுகிறது.

முப்பத்தோர் ஆண்டுகளுக்கு முன்பு மார்கரெட் மண்ணுலகில் பிறந்தபொழுது, ஈன்றெடுத்த தாய் அவளை இறைவனுக்கு ஒப்படைப்பதாகப் பிரார்த்தனை பண்ணினாள். அப்பொழுது வெறும் எண்ணமாயிருந்தது இப்பொழுது முற்றிலும் மெய்யாய்விட்டது. நிவேதிதை என்று அவளுக்கு

அமைந்தா தீக்ஷாநாமமும் முற்றிலும் பொருத்தமானதே. பரம்பொருளை சாக்ஷாத்கரித்துள்ள பரமாச்சாரியராகிய விவேகானந்த சுவாமிகள் அவளுக்கு ஞான குருவாக வாய்த்தது அவள் பெற்ற பாக்கியமாகும். பழைய பெயர், பழைய ஊர், பழைய வாழ்க்கை முறை ஆகிய யாவும் புறக்கணிக்கப்பட வேண்டியவை. அவைகளின் ஞாபகமே இனி மனதை விட்டுப் போய்விடவேண்டும். புதிய பெயர், புதிய வாழ்வு,புதிய சூழ்நிலை, புதிய சொரூபம்—ஆகியவைகளை இப்பொழுது எடுத்தாய்விட்டது. முயன்றால் மனிதன் துவிஜன்—இருபிறப்பாளன் ஆகக்கூடும் என்பதன் கருத்து இதுவே. வெறும் சடங்கின் வாயிலாக ஒருவன் இரு பிறப்பாளன் ஆய்விடமுடியாது. வாழ்க்கை முறையே மேலானதாக மாறியமைகின்றபொழுது ஒரு மனிதன் இரு பிறப்பாளன் ஆகின்றான். இப்பொழுது சகோதரி நிவேதிதைக்குப் புதிய பிறப்பு வந்துவிட்டது. ஞான குருவிடம் தன்னை ஒப்படைக்குமளவு ஞான குருவின் மூலமாக தெய்வத்தின் அருள் தனக்குக் கிட்டுமென்பதை அப்பொழுது அறியலானாள்.

சமுதாயத்துக்கு அறிமுகம்

சகோதரி நிவேதிதை ஆத்ம சாதனங்கள் புரிந்ததும் ஆத்ம பரிபாகம் அடைந்து வந்ததும் ஒரு பக்கம். இனி, அவளை இந்திய சமுதாயத்துக்கு அறிமுகப்படுத்தி வைப்பது அவசியமாயிற்று. அதற்கு வேண்டிய ஏற்பாட்டை விவேகானந்த சுவாமிகள் செய்து வைத்தார். கல்கத்தாவில் ஸ்டார் தியேட்டர்

என்ற கொட்டகை பிரசித்தி பெற்றது. ஆயிரக்கணக்கான பேர் அதில் அமர்ந்திருக்க இடவசதியுண்டு. குறிப்பிட்ட ஒரு நாளன்று அங்குப் பொதுக்கூட்டம் போடப்பட்டது. ஒருவர் உட்காருதற்கிருந்த நாற்காலியில் இரண்டுபேர் நெருங்கி உட்காருகின்ற பாங்கில் மக்கள் அக்கொட்டகையில் குழுமியிருந்தனர். எள் விழ இடமில்லையென்று சொன்னால் மிகையாகாது. கூடியிருந்த அத்தனைபேரும் தங்களுக்கிடையில் அடங்கிய குரலில் பேசிக்கொண்டிருந்தனர். சந்தைக்கடை இரைச்சலை எட்ட இருந்து கேட்பது போன்று இருந்தது அந்த ஒலி.

குறித்த வேளையில் விவேகானந்த சுவாமிகளும் சகோதரி நிவேதிதையும் இன்னும் சில பிரமுகர்களும் மேடையின் மீது பிரசன்னமானார்கள். ஆரவாரம் அக்கணமே அடங்கிவிட்டது. தான் மார்கரெட் நோபிலாக இருந்தகாலை மேடையின் மீது பலதடவைகளில் அவள் பேசியிருக்கிறாள். ஆனால் இவ்வளவு பெரிய ஜனக்கூட்டத்தை ஒரு கொட்டகைக்குள் அவள் பார்த்ததேயில்லை. பெருங்கூட்டத்தைப் பார்த்துப் பயந்துபோய்விடுபவர் பலர் உண்டு. பேசமுடியாது அவர்களுக்கு நா வறண்டு போய் விடும். அத்தகைய பீதி சகோதரி நிவேதிதைக்கு உண்டாகவில்லை. ஆச்சரியம் ஒன்றை அவள் ஆங்குக் காணலானாள். ஆங்கிலேயர் யாரும் அக்கூட்டத்துக்கு வரக்கிடையாது. மாதிரிக்குக்கூட ஒரு மேல்நாட்டான் இல்லை! இனி, இந்தியர்களுள் பெண்பாலர் யாரையும் அங்குக் காண இயலவில்லை. ஆடவர்

தலைகளே கூடம் முழுதிலும் நிறைந்திருந்தன. விதவிதமான தலைப்பாகைகள்—அவைகளுக்கு விதவிதமான நிறங்கள்—விதவிதமானகுல்லாய்கள் அன்னவர்களால் அணியப்பட்டிருந்தன. அத்தனை பேர் கண்களும் மேடையின்மீது உட்கார்ந்திருந்த மேல் நாட்டு உருவத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தன. வேற்றூரை ஏறிட்டுப் பார்ப்பதுஐரோப்பிய நல்லொழுக்கத்துக்கு ஒவ்வாதது. ஆனால் சகோதரி நிவேதிதை அதைக் குறித்து மனக்கசப்பு அடையவில்லை. இந்த நூதனக் காட்சியை அமைதியாகப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவளை அறிமுகப்படுத்துதற்கு விவேகானந்த சுவாமிகள் எழுந்து நின்றார். பெருங் கரகோஷம்; பிறகு அமைதி. சுருக்கமாகச் சுவாமிகள்சொன்னதாவது: "இந்தியாவுக்கு இங்கிலாந்து பல நன்கொடைகளை வழங்கியிருக்கிறது. அந்த நன்கொடைகளுள் சகோதரி நிவேதிதையை முக்கியமாகக் குறிப்பிடலாம். இந்தியப் பெண்மக்களுக்கிடையில் பணிவிடையாற்ற அவள் முன்வந்துள்ளாள். இந்தியாவைத் தன் தாய் நாடாக அவள் ஏற்றுக்கொண்டிருக்கிறாள். நம் உற்றார் உறவினர்களில் ஒருத்தியாக அவளை ஏற்றுக்கொள்ளுதல் நம் கடமையாகின்றது."

இந்தப் பாங்கில் சுவாமிகள் அறிமுகம் செய்துகொண்டிருக்கையில் கூட்டத்தில் கேட்டுக்கொண்டிருந்தவர்களின் முகக்குறியைச் சகோதரி நிவேதிதை உய்த்துணர்ந்து கொண்டிருந்தாள். கேட்டவர்கள்

உள்ளத்தில் உதித்தஐயமாவது: "இவள் இங்கிலாந்தைப் புறக்கணித்துவிட்டு இந்தியாவுக்கு ஏன் வர வேண்டும்? ஒருவேளை இவள்கிறிஸ்தவமதப் பிரச்சாரம் பண்ணுபவளாய் இருக்கக்கூடுமோ? இந்தியாவின் சிறப்பியல்புகளைப் பாராட்டுவது போன்று வெளிக்குக் காட்டிக்கொண்டு, மறைமுகமாக இந்தியர்களிடத்து மதமாற்றத்தை உண்டுபண்ண இவள் இங்கேவந்திருக்கின்றாளா?" மக்களுக்கிடையில் இத்தகைய ஐயங்கள் உண்டாயிருக்குமாகில் அதில் வியப்பொன்றுமில்லை.

இந்தியாவில் முதல் பேச்சு

அப்பெருங் கூட்டத்துக்கிடையில் பேசுதற்கு சகோதரி நிவேதிதை எழுந்து நின்றாள். தெள்ளிய மொழியிலே, அனைவர்க்கும் கேட்கும்படியாக உரத்த குரலிலே அவள் பகர்ந்ததாவது:

"மிகப் பூர்வீகத்திலேயே பண்பாடு அமைந்துள்ளது உங்கள் நாகரிகம். கடந்த ஆறுயிரம் ஆண்டுகளாக அது அழிந்துபட்டுப் போகாது நீங்கள் அதைப் பாதுகாத்து வந்திருக்கிறீர்கள். ஆத்மஞானப் பொக்கிஷம் அனைத்துக்கும் உறைவிடம் உங்கள் நாடு. அதன் பெருமையை முன்னிட்டு அதற்குக் குற்றேவல் புரிய நான் இங்கு வந்துள்ளேன். பணிவிடை பண்ணுவதில் எனக்குப் பேர் ஆர்வம் உண்டு. என் ஊக்கத்தையும் ஆற்றலையும் இந்த நாட்டுக்கு ஒப்படைத்துவிட நான் விரும்புகிறேன். இந்தியாவின் ஞானப் பொக்கிஷம் இங்கிலாந்துக்

குப் பெரிதும் பயன்படும். அங்குள்ள மக்களுடைய மனப்பான்மையையே அது முற்றிலும் மாற்றிவிட வல்லது. விவேகானந்த சுவாமிகள் இங்கிலாந்துக்கு வருவதற்கு முன்பு இந்தியாவைப்பற்றி அவர்கள் விபரீதமான எண்ணம் கொண்டிருந்தனர். கிறிஸ்தவமதப்பிரச்சாரகர்கள் புகட்டியதை எல்லாம்அவர்கள் நம்பி வந்தார்கள். அரசாங்க உத்தியோகஸ்தர்கள் தங்கள்போக்கில் இந்தியாவைச் சிறுமைப்படுத்திப் பேசி வருகிறார்கள். ராணுவத் துருப்புகள் தங்களுக்கேற்றபாங்கில் இந்தநாட்டைப்பற்றிப்பேசி வருகிறார்கள். உலகம் சுற்றி வரும் பிரயாணிகளும் தேச சஞ்சாரிகளும் தங்களுக்கேற்ற கட்டுக்கதைகளைப் பரப்பி ஆரவாரம் செய்கின்றனர். இத்தனை பேரும் இந்த நாட்டைப்பற்றி விபரீதமான கருத்துக்களை வெளியிடுகிறார்களேயொழிய இதன் சிறப்புக்களைப்பற்றிப் பேசுவார் யாருமில்லை. ஐரோப்பா இப்பொழுது செல்வத்தில் மூழ்கிக் கிடக்கிறது. எளிய வாழ்க்கையிலும் உயர்ந்த எண்ணத்திலுமே இன்பம் நிறைந்துள்ளது என்னும் கோட்பாட்டை இந்தியாவினின்று ஐரோப்பா அறிந்துகொள்ளும் காலம் ஒன்று வரும்"—இங்ஙனம் நிவேதிதை பேசி முடித்தாள். கூட்டத்தினின்று நீண்டதொரு கரகோஷம் கிளம்பியது. அவள் கூற்றுக்கு அத்தனை பேரும் ஆமோதிப்பும் ஆதரவும் தந்ததற்கு அது அறிகுறியாகும். நிவேதிதைக்குப் பெருமகிழ்ச்சி உண்டாயிற்று. அத்தனைபேர் உள்ளத்தையும் தனக்

குச் சொந்தமாக்கிக்கொண்டதாக அவள் உணர்ந்தாள்.

அவளுடைய பேச்சுக்குப் பின்னுரை பகரவேண்டிய அவசியம் உண்டாயிற்று. அதற்காக விவேகானந்த சுவாமிகள் எழுந்திருந்தார். இரண்டு முக்கியமான கருத்துக்களை அவர் வெளியிட்டார்: "மேல்நாட்டு நாகரிகம் கிரேக்கர்களுடைய நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டது. தங்கள் திறமையைச் செயலில் விளக்கிக் காட்டுதலும் தங்கள் வாழ்வை மேலும் மேலும் விரிவடையச் செய்தலும் அவர்களுடைய நோக்கமாகும். மனிதர் மட்டுமல்லர், இயற்கையில் அனைத்திடத்தும் இக்கோட்பாட்டுக்குச் சான்றுகள் காணலாம். தன்னை நன்கு விளக்கிக் காட்டவல்லது எதுவோ அது மேன்மையடைகிறது. இந்தியர்களாகிய நம்மிடத்து மேலாம்கருத்துக்கள் இருக்கின்றன. ஆனால் அக்கருத்துக்களை விளக்கிச் சொல்லவே நம்மில் பலருக்குத்தெரியாது. சொல்லிலும் எழுத்திலும் விளக்கினால் போதாது. செயலில் விளக்குவது மிகமிக அவசியமாகிறது. அப்படிச் செய்யுமளவு நம் நாடு மேன்மையுறும். மற்றவர்கள் அடைந்துள்ள மேன்மையை நாமும் அடையலாம். ஒவ்வொரு சிறு செயலிலும் நம்மை நாம் விளக்கிக் காட்டிக்கொண்டு வருவதே அதற்கு உற்ற உபாயமாகும். இரண்டாவதாக நம்மிடத்து சுயநம்பிக்கை மிக உண்டாக வேண்டும். எதையும் சாதிக்க எனக்கு இயலும் என்னும் உறுதி கொண்டிருப்பது சுயநம்பிக்கையாகும். சுயநம்பிக்கை

கொண்டிருப்பவனுக்கே தெய்வ நம்பிக்கை வருகிறது. நம்பிக்கை வளர்கின்ற அளவு ஆர்வம் வளர்கிறது. நம்பிக்கை வளர்கின்ற அளவு ஆற்றல் வளர்கிறது. உறுதியான நம்பிக்கை நமக்கு வந்துவிடுகின்ற பொழுது நற்காலமும் நமக்கு வந்துவிடுகின்றது. பண்டு ஒருகாலத்தில் நாம் பெற்றிருந்த மேன்மையை மீண்டும் நாம் பெற்றாகவேண்டும்." இங்ஙனம் சுவாமிகள் முடிவுரை சொல்லிமுடித்தார். கூட்டத்தினின்று வெளியே வந்த பிறகு நிவேதிதையின் சொல்வன்மையை விவேகானந்த சுவாமிகள் முற்றிலும் பாராட்டினார். இந்தியப் பொதுமக்களுக்கிடையில் மேலாம் கருத்துக்களைப் பரப்புதல் என்னும் சீரிய செயல் அன்றுமுதல் சகோதரி நிவேதிதைக்கு அதிகரித்துக் கொண்டே வந்தது.

இந்தியப் பெண்மக்களோடு இணக்கம்

இதற்கிடையில் நற்குடியில் பிறந்து நல்லொழுக்கத்தில் உறுதியாக நின்றுவந்த தாய்மார்களோடு நிவேதிதை நெருங்கிப் பழகிவந்தாள். வைதிக வாழ்வு வாழ்ந்துவந்த வனிதைகள் வேற்றாரோடு எந்தவிதமான தொடர்பும் வைத்துக்கொள்வதில்லை. இனி வெளிநாட்டாரைப்பற்றிப் பேசவே வேண்டியதில்லை. நெருங்கிய சொந்தக்காரர்களோடு உறவாடி வீட்டுக்குள்ளேயே வாழ்ந்திருப்பதுதான் அவர்கள் கண்டறிந்த உலகம். வட இந்தியாவில் இந்தக் கட்டுப்பாடு இன்னும் அதிகமாக இருந்தது. அவர்களுக்கிடையில் இடம்பெற்று அவர்களுடைய சிறப்பு

இயல்புகளை அறிந்துகொள்ள வேண்டிய அவசியம் சகோதரி நிவேதிதைக்கு உண்டாயிற்று. அவர்களுடைய சீரிய வாழ்வுக்கும் இன்னல் உண்டாகாதபடி இன்னும் முன்னேற்றம் அடைதற்கு அவர்கள் புதிய வாழ்க்கைத் திட்டங்களை என்ன பாங்கில் கையாள வேண்டும் என்பதையும் அறிந்துகொள்ளவேண்டிய அவசியம் அவளுக்கு உண்டாயிற்று. அன்னை சாரதா தேவியாரோடு அவள் நெருங்கிய இணக்கம் வைத்தது அதற்கெல்லாம் திறவுகோல் போன்று ஆயிற்று. மேல்நாட்டு மங்கை ஒருத்தியைத் தம் சொந்தச் செல்வியாக அன்னையார் ஏற்றுக்கொண்டார். ஜாதி வேற்றுமை ஒன்றுக்கும் ஆங்கு இடமில்லை. அவளைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு அன்னையார் உணவு அருந்துகிறார். அன்னையாருக்கென்று ஆயத்தப்படுத்திய அமுது அவளுக்கும் சரிசமனாகப் பரிமாறப்படுகிறது. இப்படியெல்லாம் ஊரார் தங்களுக்கிடையே பேசிக்கொண்டனர். வைதிக ஆசாரத்துக்கு இது ஒவ்வாதது எனினும் அன்னையார் செயலுக்குத் தடைசொல்ல யாரும் முன்வரவில்லை. சிறிது சிறிதாக அன்னையார் செயலைப் பின்பற்ற மற்ற மங்கையரும் ஒருப்பட்டனர். சகோதரி நிவேதிதைக்கு இங்ஙனம் வைதிக ஹிந்து குலப்பெண் மக்களுடன் கூடியிருந்து ஹிந்துமத ஆசாரப்படி வாழ்வு வாழுதற்கு ஏற்ற சூழ்நிலை தானாக வந்தமைந்தது.

6. மலைவாசம்

நாட்டுக்கே ஒரு புதுமை

கோடையின் வெப்பம் நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. விவேகானந்த சுவாமிகளின் ஐரோப்பிய சிஷ்யர்கள் அத்தகைய வெக்கையைத் தங்கள் வாழ்நாளில் கண்டதில்லை. இந்தியாவுக்கு வந்த முதல் வருஷத்திலேயே வெயிலின் கொடுமைக்கு அவர்களை ஆளாக்கச் சுவாமிகள் விரும்பவில்லை. ஆதலால் அவர்களை இமயமலையில் உள்ள அல்மோரா என்னும் ஊருக்கு அழைத்துச் செல்ல அவர் தீர்மானம் செய்தார். அதற்கு வேண்டிய ஏற்பாடும் விரைவில் ஆயிற்று. மே மாதத்தின் மையம் வந்துவிட்டது. வட இந்தியாவின் முதிர்வேனில் அப்பொழுதுதான் துவங்குகிறது.

மேல்நாட்டுச் சிஷ்யர்களும் இந்தியச் சிஷ்யர்களும்புடைசூழ ஓர் இரவு இருப்புப்பாதைவண்டியில் விவேகானந்தர் கல்கத்தாவினின்று புறப்படுவதற்கு ரயில்வே நிலையத்துக்கு வந்து சேர்ந்தார். அந்த ரயில் வண்டி நிலையமோ அல்லும் பகலும் பிரயாணிகளின் பெருங்கூட்டத்துக்குப் பெயர் பெற்றது. நடை உடை பாவனைகளில் வெவ்வேறு வகைப்பட்ட ஆடவர்களும் மகளிர்களும் போவதும் வருவதுமாயிருப்பார்கள். மூட்டை முடிச்சுக்களோ அவர்களின் உடலில் ஒரு பகுதி போன்று தலையின்மீது தங்கியிருக்கும். மகளிர் இடுப்பில் சிசுக்கள் உறங்கிக் கொண்டு அல்லது ஓலமிட்டுக் கொண்டிருக்கும்.

ரயில்வே நிலையத்தில் பார்த்த பக்கமெல்லாம் பிரயாணிகள் படுத்துக்கொண்டும் உட்கார்ந்து கொண்டும் இருப்பார்கள். அவர்களுடைய சாமான்கள் தாறுமாறாகத் தரையெங்கும் பரப்பி வைக்கப்பட்டிருக்கும். ஒழுங்குப்பாடு ஒன்றைத்தான் காணமுடியாது. குழப்பம் நிறைந்த அந்தக் கும்பலை நிவேதிதை பார்த்து வியந்தாள். பின்பு இவர்கள் கொடுத்த காட்சியைக் காண்பதற்கு ஒரு பெரிய கூட்டம் அங்கே கூடிவிட்டது. நாலைந்து சந்நியாசிகள், அவர்களோடு வெள்ளைக்காரர் சிலர்! இத்தகைய விநோதத்தை அந்தக் காலத்தில் இந்தியாவில் யார்தான் எதிர் பார்த்தார்கள்! கற்றவரும் மற்றவரும் வியப்போடு இந்தத் திருக்கூட்டத்தைச் சுற்றிலும் நின்று கொண்டு ஒவ்வொருவரையும் கூர்ந்து கவனித்துப் பார்த்தார்கள். ரயில் வண்டியில் ஏறி இவர்கள் புறப்பட்டுச் சென்று மறையும் வரையில் பிரயாணிகள் இப்புதுமையைக் கண்டு கொண்டிருந்தனர்.

இமயத்தின் மகிமை

உலகில் உள்ள மலைகளுள் உயரத்திலும் நீளத்திலும் அகலத்திலும் மிகப்பெரியது இமயமலை. அதில் வெவ்வேறு பகுதிகளுக்கு வெவ்வேறு பெயர்கள் அமைந்துள்ளன. அல்மோரா என்னும் பெயர் பெற்றது ஒரு பகுதி. அதன் அடிவாரத்துக்கு இவர்கள் வந்து சேர்ந்தார்கள். இனி, மலையின்மீது அவர்கள் செய்த பயணம் அலாதியானது. வண்டிகள் போவதற்கான வசதிகள் அக்காலத்தில் செய்யப்படவில்லை.

வெறும் நடைபாதைகள் மட்டும் அமைந்திருந்தன. நடக்க இயலாதவர்கள் சிவிகையில் சுமந்தெடுத்துச் செல்லப்பட்டனர். கூலியாட்களும் குதிரைகளும் சாமான்களைச் சுமந்து வந்தனர். வழியில் ஆங்காங்கு பிரயாணி விடுதிகள் அமைக்கப்பட்டிருந்தன. சகோதரி நிவேதிதைக்கு இது ஒரு புது உலகமாகத் தென்பட்டது. கூலியாட்களின் உழைப்பு, உற்சாகம், கபடமற்ற வாழ்வு ஆகியவைகளை அவள் ஆழ்ந்து கவனித்து வந்தாள். மனிதனுடைய தேவைகளை எவ்வளவு தூரம் குறைத்துவிட முடியும் என்பதையும், சொற்ப உடைமைகளை வைத்துக்கொண்டு மனிதன் மகிழ்வுடன் நிறைவாழ்வு வாழலாம் என்பதையும் இங்கே அவள் கண்கூடாகப் பார்த்தாள். பறவைகளின் இனிய ஓசைகள் அக்கூட்டத்தில் இருந்த அனைவருக்கும் ஆனந்தத்தை ஊட்டின. முன்பு கண்டிராத மரம் செடி கொடிகள், பூ வகைகள் ஆகியவை நிவேதிதை போன்றவர்களுக்குக் குதூகலத்தை உண்டுபண்ணின.

மலைப்பிரதேசத்தில் இரவில் பிரயாணிகள் விடுதிகளில் தங்கியிருப்பது ஒரு நூதனமான அனுபவம் ஆகும். மூட்டை முடிச்சுக்களை அவிழ்த்துத் தாற்காலிகமாக இடவசதிகள் செய்து கொள்வதில் ஒரு திருப்தி. கூலியாட்கள் அடுப்பு மூட்டுவதும், தண்ணீர் கொண்டு வருவதும், சமைப்பதும், உண்பதும், உவகையளிக்கும் செயல்களாகும். பின்பு அவர்கள் இரவில் நெடுநேரம் கவலையற்றுப் பாடிக்கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய மற்றொரு செயல். கண்ணெதிரே

நெடுந்தூரத்துக்கு அப்பால் பனிக்கட்டி மலைத் தொடர் தென்படுகிறது. வெள்ளிமலை போன்று நள்ளிரவிலும் அது ஒளிர்கிறது. இமயமலைப் பிரதேசத்தில் இரவில் ஆழ்ந்த அமைதி மனதுக்கு வருகிறது. அதற்கு நிகரான தூய அனுபவத்தை உலகில் வேறு எங்கும் பெறமுடியாது. விவேகானந்த சுவாமிகளின் மேல்நாட்டுச் சிஷ்யர்கள் இந்தியாவுக்கு வந்ததன் பயனாக அந்த அரிய அனுபவத்தை இப்பொழுது பெற ஆரம்பித்தனர்.

அல்மோராவுக்குப் போகும் வழியில் நைனித்தால் என்னும் கோடைக்கால வாசஸ்தலம் ஒன்று இருக்கிறது. சுவாமிகளின் திருக்கூட்டம் அங்கே சில நாட்கள் தங்கியிருப்பதற்காக முன்னமே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கேத்திரி மஹாராஜா சுவாமிகளின் சிஷ்யர் ஆவார். அவருக்கு நைனித்தாலில் ஒரு மாளிகையுண்டு. அதில் சுவாமிகளையும் அவருடைய சிஷ்யர்களையும் எழுந்தருளப் பண்ணுதற்கு அவர் அவா மிகக்கொண்டிருந்தார். அந்த வாய்ப்பு இப்பொழுது அவருக்குக் கிட்டிற்று. வரும் விருந்தினரை தெய்வத்துக்கு ஒப்பாகக் கருதி வரவேற்பது இந்தியப் பண்பு ஆகும். இப்பண்பில் ஆழ்ந்து ஊறியவர் கேத்திரி மஹாராஜா. அவருடைய மாளிகைக்கு எழுந்தருள்பவரோ, நெடுநாளைக்கு முன்பே தம்மை ஆட்கொண்டருளிய விவேகானந்த சுவாமிகள். வைதிகச் சடங்குகளோடு கூடிய பக்திபூர்வமான வரவேற்பு அவருக்கும் உடன் வந்தவர்களுக்கும் நிகழ்ந்தது.

மேல் நாட்டவர்களுக்குக் காணக்கிடைக்காத காட்சி அது. இந்தியப்பண்பின் முக்கியமான ஒரு பகுதியை இங்கே அவர்கள் காணலாயினர். அவர்களுக்கு நடந்த உபசாரங்களும், அன்பும், மரியாதையும் என்றைக்கும் மறக்க முடியாதவைகளாயிருந்தன.

பாபிகளிடத்தில் கருணை

நைனித்தால் என்னும் ஊருக்கு அம்பிகை முக்கியமான தேவதையாவாள். ஆங்கு அடர்ந்த மரச்சோலைகளுக்கிடையில் அவ் அம்பிகைக்கு அழகியதொரு சிறு கோயில் கட்டுவிக்கப்பட்டுள்ளது. அக்கோயிலினுள் வழிபாட்டுக்காகச் சுவாமிகள் அழைத்துச் செல்லப்பட்டார். புற மதத்தினருக்கும் வெளிநாட்டவர்களுக்கும் அக்கோயிலின் எல்லைப் புறத்துக்குள் நுழைய அனுமதியில்லை. ஆனால் சுவாமிகளின் சிஷ்யர்கள் ஆனதால் அவருடன் வந்திருந்த மேல்நாட்டவர்கள் அன்புடனும் ஆதரவுடனும் உள்ளே அழைத்துச் செல்லப்பட்டனர். சுவாமிகளைப் பின்பற்றி அவர்களும் அங்கே வந்தனை வழிபாடுகள் செய்தனர். ஹிந்துக்களுக்குக் கோயிலைத் துப்புரவாக வைத்துக் கொள்ளத் தெரியாது என்று அவர்கள் ஆங் ஙுகித்தனர். ஆனால் பக்தி விசுவாசத்தில் அவர்கள் யாருக்கும் பின்வாங்கியவர்கள் அல்லர் என்பதும் அவர்களுக்கு விளங்கிற்று. கோயிலைவிட்டு சுவாமிகள் வெளியே வந்தபொழுது எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று திடீரென்று நேர்ந்தது. அலங்காரமாக ஆடையாபரணங்கள் அணிந்திருந்த இரண்டு விலைமாதர்கள் சுவாமிகளின் பாதத்தைத் தொட்டு

வணங்க முன் வந்தனர். கேத்திரி சமஸ்தானக் காவலாளர் கூச்சல்போட்டு அவர்களை அப்புறம் விரட்டி ஓட்டினர். நிலைமையை அறிந்துகொண்ட சுவாமிகளோ தம் அருகில் வந்து வணங்க அவ்வேசியர்களுக்கு அனுமதி கொடுத்தார். இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த சகோதரி நிவேதிதைக்குப் பளிச்சென்று ஏசுநாதருடைய ஜீவிதத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி ஞாபகத்துக்கு வந்தது. வேசி ஒருத்தியைக் கல்லால் அடித்துக் கொன்றுவிட வெறிபிடித்த கூட்டம் ஒன்று தீர்மானம் செய்தது. தங்கள் தீர்மானத்தை அவர்கள் ஏசுநாதரிடம் தெரிவித்தார்கள். அவரும் அதற்குச் சம்மதம் கொடுத்தார். ஆனால் நிபந்தனை ஒன்றை அவர்களுக்கிடையில் அவர் செருகினார். அவள் பாபம் பண்ணியது போன்று தான் ஒரு பாபமும் பிறந்ததுமுதற்கொண்டு பண்ணியது கிடையவே கிடையாது என்ற உறுதிகொண்டிருப்பவன் முதலில் அவளைக் கல்லால் அடிக்கட்டும் என்பது அவர் போட்ட நிபந்தனையாகும். அப்படிப்பட்ட தகைமை தன்னிடத்து உண்டு என்று உறுதிப்படுத்த எவனும் முன்வரவில்லை. பிறரிடத்துக் குற்றம் காண்பதைவிடத் தன் குற்றத்தையே குணப்படுத்துவது மேல் என்பது கோட்பாடு. ஏசுநாதர் படைத்திருந்த கருணை விவேகானந்தரிடத்திலும் இருந்ததை நிவேதிதை நோக்கினாள்.

அல்மோராவிலும் காஷ்மீரத்திலும்

கடைசியாக அவர்கள் அல்மோராவுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கே சில தினங்கள் தங்கி

யிருக்கத் திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. இரண்டு மூன்று வீடுகளும் வாடகைக்கு அமர்த்தப்பட்டன. பேலூர் மடத்தில் நடந்தபடி சிஷ்யர்களுக்குப் பாடமும் பயிற்சியும் ஈண்டு அளிக்கப்பட்டன. நாள் தோறும் காலையில் வேதாந்தப்பாடம் புகட்டப்படும். அதைத் தொடர்ந்து சம்பாஷணைகள் நிகழும். குறிப்பிட்ட நேரங்களில் தியானப் பயிற்சி நடைபெறும். நீண்ட தியானங்களுக்கு இரவு வேளை இமாசலத்தில் முற்றிலும் பொருத்தமானதாயிருந்தது. குளிர்ப் பிரதேசங்களிலேயே பிறந்து வளர்ந்திருந்த மேல் நாட்டவர்களுக்கு அல்மோரா வாசம் முற்றிலும் உகந்ததாயிருந்தது.

இமயமலையின் மேற்குப் பகுதியில் இருப்பது காஷ்மீரம். அதை இந்தியாவின் பூங்காவென்று பகர்ந்தால் போதாது. உலகம் முழுதுக்குமே காஷ்மீரம் அழகியதொரு நந்தவனமாகும். இமயமலையைப் பார்க்காதவர்கள் இந்தியா முழுதையும் பார்த்தவர்கள் ஆக மாட்டார்கள் என்பது ஒரு கோட்பாடு. இனி, காஷ்மீரத்தைப் பார்க்காதவர்கள் இமயமலை முழுதையும் பார்த்தவர்கள் ஆகமாட்டார்கள் என்பது மற்றொரு கோட்பாடு. அத்தகைய அழகிய பூங்காவைப் பார்ப்பதற்கு விவேகானந்த சுவாமிகளின் மேல்நாட்டுச் சிஷ்யர்கள் ஆயத்தமானார்கள். அல்மோராவினின்று சமவெளிப் பிரதேசத்துக்கு இறங்கி வந்து, பிறகு காஷ்மீரத்தை நோக்கி அவர்கள் பயணம் போனார்கள். இருப்புப்பாதை வண்டிப் பயணம் முற்றுப் பெற்றன பிறகு மாட்டுவண்டி

யிலேயே அவர்கள் மலைப்பிரதேசத்தின் பகுதிகளில் போய்க்கொண்டிருந்தனர். வழி நெடுக அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் ஒன்று இருந்தது. இந்தியாவில் ஒவ்வொரு மாகாணத்துக்கும் தனிச் சிறப்பு ஒன்று உண்டு. அவர்கள் பிரயாணம் போன பஞ்சாபிலும் காஷ்மீரத்திலும் உள்ள சிறப்புகளை சுவாமிகள் இப்பொழுது கண்கூடாக அவர்களுக்கு விளக்கிக் காட்டினர்.

கடைசியாக அவர்கள் காஷ்மீரத்துக்குத் தலைமைப்பட்டணமாயிருக்கும் ஸ்ரீ நகர் போய்ச் சேர்ந்தார்கள். அது வனப்பு மிக வாய்ந்த ஊர். தடாகங்கள் பல ஆங்கு இருக்கின்றன. படகுகள் போன்று அதில் மிதக்கும் வீடுகள் கட்டி வைத்திருக்கிறார்கள். அப்படி மிதக்கும் வீடுகளில் வாசம் செய்வது ஸ்ரீநகருக்கு வந்தவர்கள் செய்யும் செயல்களுள் மிக முக்கியமானது. தம் மேல் நாட்டுச் சிஷ்யர்களுடன் விவேகானந்த சுவாமிகளும் அங்ஙனம் மிதக்கும் வீடு ஒன்றில் வாசம் செய்து வந்தார்.

இந்தியாவில் உள்ள முக்கியமான சிவக்ஷேத்திரங்களில் ஒன்று அமரநாதம். அது காஷ்மீரத்தின் வட பாகத்தில் இமயமலையின் உயர்ந்த பகுதியில் இருக்கிறது. பனிக்கட்டியால் ஆகிய குகை ஒன்றனுள், பனிக்கட்டியால் ஆகிய சிவலிங்கம் ஒன்று ஆங்கு இருக்கிறது. ஆண்டுதோறும் ஆவணிமாதம் பௌர்ணமியன்று ஒரே ஒருநாளில் மட்டும் அங்குச் சிவ வழிபாடு நடைபெறுகிறது. அந்த ஒருநாள் தரிசனத்துக்காக சுமார் ஆயிரம் பேர் வருஷத்துக்கு ஒரு

தடவை அங்கே யாத்திரை போவார்கள். 1898ஆம் ஆண்டில் காஷ்மீரத்தில் இருந்த விவேகானந்த சுவாமிகளும் அந்த யாத்திரையில் கலந்துகொள்ள எண்ணம் கொண்டார். அவருடைய மேல்நாட்டுச் சிஷ்யர்கள் அந்தக் கடினமான யாத்திரைக்குத் தகுதி வாய்ந்தவர்கள் அல்லர். ஆனால் சகோதரி நிவேதிதை ஒருத்திமட்டும் அந்த யாத்திரையைச் செய்துமுடிக்க உறுதிகொண்டாள். வழியில் உள்ள வசதிக்குறைவு களையும், அதனால் விளையும் கஷ்டங்களையும் சமாளித் துக்கொள்ள அவள் தீர்மானம் செய்துவிட்டாள். விவேகானந்த சுவாமிகளுக்கு அதைக்குறித்து மிக மகிழ்ச்சி. ஏனென்றால் இந்தியாவுக்கென்றே தன்னை ஒப்படைத்திருப்பவள் முற்றிலும் இந்திய மாது ஆய் விடவேண்டும். உடல் வசதியில் யாண்டும் கருத்து வைத்திருப்பது ஒவ்வாது. அந்த க்ஷேத்திர யாத் திரையில் உண்டாகும் இன்னல்களையெல்லாம் அமைதி யாகப் பொறுத்துக்கொள்ளுதல் அவசியமாகிறது. அது ஓர் அலாதியான ஆத்ம சாதனம்.

அமரநாத யாத்திரை

குறித்த நாளன்று யாத்திரிகர்கள் புறப்பட்டார் கள். அது ஒரு நூதனமான நிகழ்ச்சி. கூடாரவாசம் செய்யும் பட்டணம் ஒன்று நகர்ந்துபோவதுபோன்று இருந்தது அத்திருக்கூட்டம். இரவுதோறும் புதிய இடத்துக்கு அது மேல்நோக்கிப் போய்விடும். கடை கண்ணிகளும் கூடவே போய்க்கொண்டிருந்தன. அந் தப் பெருங்கூட்டத்தில் சகோதரி நிவேதிதை ஒருத்தி

மட்டும் புறநாட்டில் பிறந்தவள். அதைக் குறித்து யாத்திரை வாசிகளுக்கிடையில் ஆக்ஷேபம் கிளம்பியது. அவள் இப்பொழுது ஹிந்துமதத்தைத் தழுவியிருக்கிருள் என்பதையும், ஜகத்குருவாகிய விவேகானந்த சுவாமிகளுக்கு அவள் சிஷ்யை என்பதையும் காஷ்மீர சமஸ்தானப் புரோகிதர்கள் முதலாயினேர் எடுத்துப் புகட்டியபொழுது பாமரருக்கு ஒருவாறு சமாதானம் உண்டாயிற்று. அதன் பிறகு மற்ற மாதர்கள் நிவேதிதையைப் பார்க்கும்பொழுதெல்லாம் புன்சிரிப்புடன் தலையசைப்பார்கள். ஆனல் பேசுதற்குப் பொதுமொழியில்லை!

ஆவணிப் பௌர்ணமியன்று யாத்திரைவாசிகள் குகைக்கோயிலை அணுகிவிட்டனர். ஆராதனைக்கு அனைவரும் ஆயத்தம் ஆயினர். விவேகானந்த சுவாமிகளுக்கு உலக ஞாபகம் அனைத்தும் அகன்றுபோய் விட்டது. சிவசாயுஜ்யத்தில் அவர் மனது மறைந்து விட்டது. தாமே நடமாடும் சிவம் ஆய்விட்டார். ஆனந்தப்பரவசநிலையில்அவர் திளைத்திருந்தார். வழிபாட்டுக்குரிய கிருத்தியங்களைப் பொம்மை போன்று அவருடைய உடல் செய்து வந்தது. பனிக்கட்டிக்கிடையில் தேங்கியிருந்த தடாகத்தில் அவருடைய உடல் நீராடியது. ஒற்றைவஸ்திரம் மட்டும் பிறகு அணியப்பட்டது. மேனி முழுதும் திருநீறு பூசப்பட்டது. சிவ நாமத்தை நாவு ஓதிக்கொண்டிருந்தது. சிவலிங்கத்தின் எதிரில் வந்து சரீரம் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தது. பிறகு லிங்கத்தைத் தழுவிக்

கொண்டு வந்தனை வழிபாடு நடந்தது. யந்திரம் போன்று உடல் இக்கிரியைகளில் ஈடுபட்டிருந்தது. உள்ளமோ இறைவன் என்னும் ஆனந்தக்கடலில் கலந்துவிட்டது.

சகோதரி நிவேதிதைக்கு விஷயங்களை விளக்கிச் சொல்லுதற்கு இப்பொழுது யாருமில்லை.ஏனென்றால் சுவாமி விவேகானந்தர் சிவானந்த போதத்தில் பிரபஞ்சத்தையெல்லாம் மறந்த நிலையில் இருந்தார். மற்றவர்கள் குகையினுள் என்ன பாங்கில் வழிபாடு செய்தார்களோ அதே பாங்கில் நிவேதிதையும் ஏதோ தனக்குத் தெரிந்த முறையில் சிவ வழிபாடு செய்தாள். கூட்டத்தில் கலந்துகொண்டு மற்றவர்களோடு அவளும் வெளியே வந்து நின்றாள். சிறிது நேரத்துக்குப் பிறகு சுவாமிகளும் வெளியே வந்தார். இப்பொழுது அவருடைய மனது உலக ஞாபகத்துக்குக் கொஞ்சம் கீழே இறங்கி வந்திருந்தது. ஆனால் வாய்விட்டு எதையும் பேசுகிற பான்மை இன்னும் அவருக்கு வரவில்லை. சிறிதுநேரத்துக்குப் பிறகு அவர் பகர்வாராயினர்: "அமரநாதனுடைய முன்னிலையில் மரணத்துக்கு அப்பால் உள்ள பெருவாழ்வை நான் உணரலானேன்."

"சுவாமி, நீங்கள் பகர்வது ஒன்றும் எனக்கு விளங்கவில்லை" என்றாள் நிவேதிதை.

"இந்த ஸ்தலத்துக்கு நீ யாத்திரை வந்தது வீண் போகாது. நாளடைவில் எல்லாம் உனக்கும் விளங்கும்" என்றார் சுவாமிகள்.

வாய்ப்பேச்சில் அதிகம் விருப்பம் வைத்திருந்த நிவேதிதைக்கு இப்பொழுது பேச்சு பெரிதும்

அடங்கிவிட்டது. அமரநாதத்தினின்று திரும்பிப் போய்க்கொண்டிருந்தபொழுது அவள் பெரிதும் சிவ தியானத்தில் இருந்தது போன்று மௌனமுற்றிருந்தாள். சுவாமிகளுடைய மனதில் பெரும்பகுதி இன்னும் அதீத நிலையில் சிவ சன்னிதியிலேயே இருந்து வந்தது. யாத்திரை போனவர்கள் ஸ்ரீநகருக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்கள். அவர்களுடைய வருகையை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இதர மேல்நாட்டு சிஷ்யர்களுக்கு இப்பொழுது மகிழ்ச்சி மிக உண்டாயிற்று, மீண்டும் அவர்கள் ஒன்றுகூடி மிதக்கும் வீட்டில் வாழ்ந்திருந்து ஆத்ம சாதனங்கள் புரிந்து வந்தனர்.

விவேகானந்த சுவாமிகளின் திருக்கூட்டம் காஷ்மீரத்துக்கு வந்து மூன்று மாதங்கள் ஆய்விட்டன. இனி அவர்கள் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட வேண்டிய அவசியம் உண்டாயிற்று. மேல்நாட்டு சிஷ்யர்களில் சிலர் வட இந்தியாவில் உள்ள மற்ற ஊர்களைப் பார்க்கப் புறப்பட்டனர். விவேகானந்த சுவாமிகள் தனியாகச் சில ஊர்களுக்குப் போக வேண்டியிருந்தது. ஆங்காங்கிருந்த அவருடைய அன்பர்கள் அவரது வருகையை எதிர்பார்த்திருந்தார்கள். சகோதரி நிவேதிதை தனியாகக் கல்கத்தாவுக்குப் புறப்பட்டுப் போனாள். அவள் வாழவேண்டிய வாழ்க்கைமுறை எத்தகையது, அவள் ஆற்ற வேண்டிய பணி யாது என்பதையெல்லாம் பற்றி ஒருவாறு தீர்மானம் செய்தாய்விட்டது. இனி அதை எல்லாம் நடைமுறையில் கொண்டு வருவதுதான் பாக்கியிருந்தது.

7. ஆருயிர்ப்பணி

ஞானத் தாயும் சேயும்

காஷ்மீரத்திலிருந்து கல்கத்தாவுக்குத் திரும்பி வந்ததும் சகோதரி நிவேதிதை நேராக அன்னை சாரதா தேவியார் வீட்டுக்குச் சென்றாள். அவள் அப்படிச் செய்தது முற்றிலும் உசிதமானது. தாய் வீட்டுக்குப் போவதுதானே புதல்விகளுக்குப் பொருந்தியது? அன்னையாரும் அவளை ஆதரவுடன் வரவேற்றுத் தம் சொந்தச் செல்வியாகத் தம்முடன் வைத்துக்கொண்டார். ஆராய்ச்சிக்குரிய அதிசயங்கள் இரண்டை ஈண்டுக் காணலாம். முன்பு ஏதோ சில நாட்களில் சிறிது நேரத்துக்குத் தம்முடன் இருந்து தமது ஆசீர்வாதத்தைப் பெற்றுச் சென்ற மேல்நாட்டு மாது ஒருத்தி இனி அல்லும் பகலும் தம்முடனே வாழ்ந்திருப்பதற்கு அன்னையார் அனுமதி கொடுத்தது முதல் அதிசயம். நடை உடை பாவனையிலும் பழக்க வழக்கங்களிலும் வேறுபட்டிருப்பவளைத் தங்களுக்கு உரியவளாக வீட்டுக்குள் வைத்துக் கொள்வது கடுமையான வைதிக வாழ்வு வாழ்ந்து வருபவர்களுக்கு எவ்வளவு கஷ்டமானது என்பது சொல்லாமலே விளங்கும். ஆனால் அத்தகைய கஷ்டம் ஒன்றும் அன்னையார் கூட்டத்தில் இருந்த மாதர்களுக்குத் தோன்றவில்லை. இனி, மேல் நாட்டு முறையில் வாழ்க்கை வாழ்ந்திருந்த நிவேதிதைக்கு ஏற்ற வசதி ஒன்றும் அன்னையார் வீட்டில் கிடையாது. உட்காருவதற்கு நாற்காலியில்லை; வசிப்பதற்

குத் தனி அறையில்லை; படுப்பதற்குக் கட்டில் இல்லை; உண்பது கரண்டியில் எடுத்தல்ல; இந்தியர் வழக்கத்துக்கு ஒப்ப உணவைக் கையால் பிசைந்தெடுத்தே அருந்தவேண்டும். இச்செயல் ஒன்றும் சங்கடமானதாகச் சகோதரி நிவேதிதைக்குத் தோன்றவில்லை. சில நாட்களில் இவை யாவற்றையும் பழகியாய் விட்டது! மனமுண்டானால் இடமுண்டு என்னும் கோட்பாட்டுக்கு இந்திய சகோதரிகளும் மேல் நாட்டுச் சகோதரியும் எடுத்துக்காட்டு ஆயினர். அவர்கள் ஒத்திருந்து ஓர் இலட்சியத்துக்காக வாழும் பயிற்சி கொஞ்ச காலத்துக்கு நடந்தேறியது.

சகோதரி நிவேதிதை ஆற்றுதற்கான பணிவிடைகள் பல இருந்தன. வெவ்வேறு இடங்களுக்குக் கடிதங்கள் எழுதுவது, புத்தகங்கள் வாசிப்பது, பார்க்க வரும் பலருக்குப் பேட்டி கொடுத்துச் சீரிய விஷயங்களைப்பற்றி உரையாடுவது—இவைபோன்ற அலுவல்களைச் செய்தற்கு அன்னையார் வீட்டில் இடவசதி போதாது. எனவே சகோதரிக்காகவென்று பக்கத்தில் மற்றொரு வீடு வாடகைக்கு அமர்த்தப்பட்டது. வாடகையும் மிகச் சொற்பமானது. சகோதரிக்கு அது முற்றிலும் பிடித்தமானதாய் இருந்தது. அவளுடைய அலுவல்களுக்குத் தகுந்தபடி அங்கே வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. ஐரோப்பியர்களுடைய கல்கத்தா வாசத்துக்கும் சகோதரி நிவேதிதையினுடைய கல்கத்தா வாசத்துக்கும் ஒருவிதமான தொடர்பும் கிடையாது. இவள் வசித்து வந்த பாக்பஜார் என்னும் பகுதிக்கு ஐரோப்பியர் யாரும்

தலைகாட்ட மாட்டார்கள். கறுப்பு மனிதர் வாழ்ந்து வந்த பகுதியில் அவர்களுக்கு வேலையொன்றுமில்லை. சகோதரி நிவேதிதையோ தன்னை முற்றிலும் இந்தியாவுக்கு உரியவளாகவே கருதி வந்தாள்.

இதற்குள் சுவாமி விவேகானந்தரும் காஷ்மீரத்திலிருந்து கல்கத்தாவுக்குத் திரும்பி வந்து சேர்ந்தார். கல்கத்தாவிலிருந்து ஐந்து மைல் தூரத்திலிருந்த பேலூர் மடத்தில் அவர் வசித்து வந்தார். அவரைத் தரிசிப்பதற்கும் அவரோடு முக்கியமான பல விஷயங்களைப் பற்றிப் பேசுதற்கும் வாரத்துக்கு ஒரு நாள் சகோதரி நிவேதிதை பேலூர் மடத்துக்குப் போவாள். அத்தகைய தினங்களில் வேதாந்த பாடம் அவளுக்குப் புகட்டப்படும், பின்பு, நவீன பௌதிக சாஸ்திரங்களில் உடற்கூறு நூல், தாவர நூல், அனுபவ போதனை நூல் (Physiology, Botany, Practical Pedagogy) போன்ற நூல்களில் அவள் மற்றவர்களுக்குப் பாடம் நடத்துவாள். அப்பொழுது பேலூர் மடத்தில் இருந்த சந்நியாசிகளும் பிரம்மச்சாரிகளும் அத்தகைய சாஸ்திரங்களை அவளிடமிருந்து கற்று வந்தார்கள். தனக்குத்தெரிந்ததை எடுத்துப் பிறருக்குப் புகட்டுவதும் பிறரிடமுள்ள ஞானத்தைத் தான் ஏற்றுக் கொள்ளுதலும் கற்றோர்க்கிடையில் நிகழும் அரிய செயலாகும். அது இங்குக் கண்கூடாகத் தென்படுவதாயிற்று.

பணிவிடை இறுமாப்பைப் போக்குகிறது

மற்றுமொரு முக்கியமான மாறுதலைப் பேலூர் மடத்தில் விவேகானந்த சுவாமிகள் கொண்டு வந்

தார். இடைக்காலத்து இந்தியர்கள் அவரவர் ஜாதிக்கேற்ற தொழில்களைச் செய்து வந்தனர். கக்கூஸ் கூட்டுவது போன்ற தொழிலை மேல் ஜாதியார்கள் செய்யமாட்டார்கள். இழிதொழில்கள் என்று அவைகள் புறக்கணிக்கப்பட்டன. பின்பு, தோட்டத்தில் வேலை செய்வதில் கல்விமான்கள் கலந்து கொள்ள மாட்டார்கள். அவர்களுடைய பாண்டித்தியத்துக்கு அது பொருந்தாது என்பது அவர்களிடத்திருந்த தப்பெண்ணமாகும். பேலூர் மடத்தில் பயிற்சிபெற்று வந்த சந்நியாசிகளும் பிரம்மச்சாரிகளும் கக்கூஸ் கூட்டுவதிலிருந்து கோவிலில் பூஜை செய்வது ஈருக எல்லாவிதமான பணிவிடைகளையும் செய்து பழக வேண்டும் என்னும் கோட்பாட்டை அவர் நடைமுறைக்குக் கொண்டு வந்தார். பிறகு தாமே எல்லாவிதமான குற்றேவல்களையும் தேவாராதனைபோன்று செய்து வந்தார். சகோதரி நிவேதிதை பேலூர் மடத்துக்கு வந்த நாட்களில் அத்தகைய பணிவிடைகள் இன்னும் தீவிரமாகச் செய்யப்படும். ஏனென்றால் தன் தேசத்தில் அவள் பெற்றிருந்த பயிற்சிகளையெல்லாம் இங்கு அவள் செய்து காட்டுவாள். இங்ஙனம் கீழ்நாட்டுப் பண்பும் மேல் நாட்டுப் பண்பும் பேலூர் மடத்தில் சமரசம் பெற்று வந்தன.

கல்கத்தாவில் பாக்பஜாரில் சகோதரி நிவேதிதைக்கு அமைந்திருந்த வீடு ஓர் ஒடுங்கிய சந்தில் இருந்தது. சந்தும் வளைந்து வளைந்து போனது. சுகாதாரத்துக்கு அது அவ்வளவு பொருத்தமான இடம் அல்ல. ஆயினும் அத்தகைய இடத்தில் வசித்திருந்து

மக்களுக்குச் சுகாதாரம் புகட்டித் தருவதைத் தன் பொறுப்பாக சகோதரி கருதி வந்தாள். அந்தச் சந்தில் வசித்திருந்த குடும்பத்தார் அனைவர்க்கும் அவள் இப்பொழுது அறிமுகமாயிருந்தாள். நெருங்கிய உறவும் அவர்களுக்கிடையில் உண்டாகி வந்தது. முதியோர்கள் அவளைத் தங்கையென்று அழைப்பார்கள். வயதில் சிறியவர்கள் அவளை அக்காவென்று கூப்பிடுவார்கள். சிறுவர்களும் சிறுமிகளும் அவளிடம் சொந்தம் பாராட்டி ஓடுவார்கள். வீடு வாசல்களைச் சுத்தமாய் வைத்திருக்கும் பாடத்தைச் சிறிது சிறிதாய் அவள் அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுக்குப் புகட்டி வந்தாள்.

மரணத்தோடு பழகுதல்

இதற்கிடையில் கல்கத்தாவில் இரண்டாம் தடவையாக பிளேக்நோய் தோன்றியது. மக்கள் அதைக் குறித்து அடைந்த அச்சம் கொஞ்ச நஞ்சமன்று. நோய்வாய்ப்பட்டவனை வீட்டில் படுக்க வைத்து விட்டு மற்றவர்கள் உயிர்தப்பிப் பிழைக்க வெளியூர்களுக்குக் கிளம்பி விடுவார்கள். உற்றார் உறவினர் என்கின்ற பாந்தமெல்லாம் அப்போது பறந்தோடி விடும். அவரவர்க்கு அவரவர் உயிர் பெரியது. நாள் தோறும் நூறுபேருக்குக் குறையாமல் கல்கத்தாவில் பிளேக்நோயால் மடிந்தனர். பயந்துபோய் வெளியூர்களுக்கு ஓடிய கூட்டத்தைக் கணக்கிட முடியாது. இந்த நெருக்கடியில் விவேகானந்த சுவாமிகளும் அவருடைய குரு சகோதரர்களும் என்ன செய்வ

தென்று ஆலோசனை செய்தனர். அந்த ஆலோசனைக் கூட்டத்தில் சகோதரி நிவேதிதை முக்கியமான இடம் பெற்றிருந்தாள். பிளேக் நோய் நிவாரண முகாம் ஒன்று துவக்க வேண்டுமென்றும், நோயாளி களை அங்குக் கொண்டு வந்து வைத்து சிகிச்சை செய்யவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. அந்த முகாமுக்கு சகோதரி நிவேதிதை தலைமை வகிப்பதாகவும் ஏற்பாடாயிற்று. பேலூர் மடத்து சந்நியாசிகளும் பிரம்மச்சாரிகளும் மரணத்துக்கு அஞ்சாது அதில் பாடுபட முன் வந்தனர்.

கல்கத்தாவில் கல்லூரி மாணுக்கர்களுக்கிடை யில் இரண்டு மூன்று பொதுக்கூட்டங்கள் போடப் பட்டன. அதில் விவேகானந்த சுவாமிகளும் சகோ தரி நிவேதிதையும் விஷயங்களை எடுத்துக்கூறினர். அந்த நெருக்கடியான வேளையில்அவரவர் படிப்பைக் கவனித்துக்கொண்டிருப்பதைவிடப் பிளேக் நோயில் வருந்தும் பிணியாளருக்குப் பணிவிடை செய்ய முன் வருவது முக்கியமான கடமையென்று மாணுக்கர் களுக்குப் போதிக்கப்பட்டது. அவர்களும் நூற்றுக் கணக்கானபேர் தொண்டர் படையாகத் திரண்டு பணிபுரிய முன் வந்தனர். வீடுவீடாகச் சென்று அகப்படுகிற நோயாளிகளைப் பிளேக்நோய்நிவாரண முகாமுக்குத் தூக்கிச்சென்றனர். துறவியர் தலைமை யின் கீழ் நோயாளிகளுக்குத் தக்க பராமரிப்புகள் செய்யப்பட்டன. டாக்டர்கள் காட்டித்தந்தபடி அவர் களுக்குச் சிகிச்சை முறைகள் கையாளப்பட்டன. தொண்டர் படையின் மற்ருெருபகுதி வீதிவீதியாய்ச்

சென்று குப்பை கூளங்களைக் கூட்டி வண்டி வண்டியாய் அப்புறப்படுத்தியது. நோய்க்குப் பிறப்பிடம் அழுக்கு என்பது பொதுமக்களுக்கு எடுத்துப் புகட்டப்பட்டது. சகோதரி நிவேதிதை ஒவ்வொரு பகுதியிலும் ஓடியோடி வேலை செய்து கொண்டிருந்தாள். தொண்டர்களோடு கூடிக்கொண்டு தானே வேலை செய்தாள். அதிகாலையிலிருந்து நள்ளிரவு வரையில் ஓய்வின்றி அவள் உழைத்துவந்தாள். அவள் படைத்திருந்த ஆற்றல்களையெல்லாம் பொது நலத்துக்குப் பயன்படுத்துதற்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. மரணத்தோடு போர்புரிவது போன்றிருந்தது அவள் சலிக்காது செய்த சேவை. அமரநாதத்தில் விவேகானந்த சுவாமிகள் பெற்ற சிவஞானத்தின் உட்கருத்து இப்பொழுது ஒருசிறிதளவு சகோதரிநிவேதிதைக்கு விளங்கிற்று. மரணமிலாப் பெருவாழ்வு யாருக்குக் கிட்டுகிறது? மரணத்துக்கு அஞ்சுபவர்களுக்கு அது கிட்டுவதில்லை. மரணத்தை மகிழ்வோடு ஏற்றுக் கொள்ள யார் ஆயத்தமாயிருக்கிறாரோ அவருக்கு மரணமிலாப் பெருவாழ்வு வாய்க்கிறது. மரணத்தோடு நட்புக்கொள்கிற பெருவாய்ப்பு இப்பொழுது பிளேக் நோய் நிவாரணத் தொண்டர்களுக்குக் கிடைத்திருந்தது. அவர்கள் ஆற்றி வந்த பணிவிடையைப் பார்த்து விவேகானந்த சுவாமிகள் மகிழ்ச்சி மிகக் கொண்டிருந்தார்.

பெண் கல்வி

பெண் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம் ஒன்று துவக்கி வைக்க சகோதரி நிவேதிதை ஆர்வம் மிகக்

கொண்டிருந்தாள். கல்வித்துறையில் பணியாற்றுதற்கென்றே அவள் இந்தியாவுக்கு வந்தாள். வந்தநாள் முதற்கொண்டு அதைப்பற்றியே அவள் எண்ணிக் கொண்டிருந்தாள். தனது குருநாதரிடம் அதைப்பற்றிய பேச்சும் சந்தர்ப்பம் வாய்க்கும்பொழுதெல்லாம் கிளம்பும். எல்லாம் தக்க தருணத்தில் வந்தமையும் என்றும், ஒன்றுக்கும் அவசரப்படவேண்டாம் என்றும் அவர் அமைதியூட்டி வந்தார். தக்க தருணம் இப்பொழுது வந்தமைந்தது. குறிப்பிட்ட ஒருதினத்தன்று பள்ளிக்கூடமும் துவக்கப்பட்டது. அதை அன்னை சாரதாதேவியாரே வந்து துவக்கிவைத்தார். அதற்கு நிகரான பாக்கியம் அந்தப் பள்ளிக்கூடத்துக்கு ஒருநாளும் வாய்க்கமுடியாது. சுவாமி விவேகானந்தரும் அப்பொழுது அங்கு வந்திருந்தார். பள்ளிக்கூடத்தை என்ன பாங்கில் நடாத்துவது என்று சகோதரி நிவேதிதை தன் குருநாதரிடம் கேட்டாள். "அதை நீ பள்ளிக்கூடத்துக் குழந்தைகளிடமிருந்தே கற்றுக்கொள்வாய்" என்று விவேகானந்த சுவாமிகள் விடை விடுத்தார். குழந்தைகளிடமிருந்து ஆசிரியை எப்படிக் கல்வித் திட்டத்தைக் கற்றுக் கொண்டாள் என்று சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

அக்காலத்தில் சிறுமிகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புகிற பழக்கம் ஹிந்துக்களிடையில் இல்லை. தேடிப்பிடித்து மூன்று சிறுமிகளைப் பள்ளிக்கூடத்துக்குக்கொண்டு வந்தார்கள். மூவரும் நாணமே வடிவெடுத்திருந்தார்கள். யாராவது அவர்களைத் திரும்பிப் பார்த்தால் உடனே முகத்தை இருகைகளாலும்

முடிக்கொள்வார்கள். அக்குழந்தைகளுடன் யாரா வது பேச முயன்றால் கண்களில் கண்ணீர் ததும்பும்; முகத்தில் சலிப்புத்தட்டும். ஆனால் அவர்கள் பள்ளிக் கூடத்தைவிட்டு ஓட்டம் பிடிக்கவில்லை! நாளடைவில் இன்னும் சில குழந்தைகள் அங்குக்கூடினர். ஆனால் குறிப்பிட்ட வேளைக்கு அவர்கள் பள்ளிக்கூடத்துக்கு வருவதில்லை. காலையிலிருந்து பிற்பகலுக்குள்ளாகத் தங்களுக்குத் தோன்றிய வேளையில் இரண்டொருவ ராக வந்து சேர்வார்கள். சில வேளைகளில் கிழவி ஒருத்தி ஒரு குழந்தையைக் கொண்டுவந்து விடு வாள். இன்னும் சில வேளைகளில் தாய் ஒருத்தி தன் கடைசிக் குழந்தையை இடுப்பில் இடுக்கிக்கொண்டு மூத்த குழந்தையைக் கையைப் பிடித்துப் பள்ளிக்கு அழைத்துவருவாள். மேல்நாட்டில் போன்று குறித்த வேளைக்குப் பள்ளிக்கூடத்துக்குப் போவது என் பதை அக்காலத்து இந்தியப் பொதுமக்கள் அறிந் திலர். குழந்தைகள் எந்த வேளைக்குப் பள்ளிக்கூடத் துக்கு வர மனம் கொண்டார்களோ அந்த வேளைக்கு அவர்களை வரவேற்க அவள் சம்மதம் கொடுத்தாள். சகோதரி நிவேதிதை கற்றுக்கொண்ட முதல் பாடம் இது.

எந்தமுறையில் பள்ளிக்கூடத்தை நடத்துவது என்று சகோதரி சுவாமிகளிடம் கேட்டாள். குழந்தை களே அதை அவளுக்குப் புகட்டிவிடும் என்று சுவாமி கள் விடைகொடுத்திருந்தார். அதன் பொருள் முழு தும் நிவேதிதைக்கு இப்பொழுது புரிந்தது. பயந்து கொண்டு ஒரு பெண்குழந்தை வந்தது. பேசுதற்கு

அஞ்சுகிற மடந்தைகளாய் சிலசிறுமிகள் உட்கார்ந்து கொண்டிருந்தனர். விளையாடுவது பெருங்குற்ற மாகும் என்று வேறு சில சிறுமிகள் அசைவற்று அமர்ந்திருந்தனர். மேற்பார்வையில்லாது அவர்கள் பொறுப்பில் விட்டுவிட்டால் ஒரு குழந்தையின் கை வளையலை மற்றொருத்தி தொட்டுப்பார்ப்பது, ஒருத்தி பாவாடையை இன்னொருத்தி தடவிக்கொடுப்பது, ஒருத்தி தலைமுடியை வேறுஒருத்தி ஒழுங்குப்படுத்து வது—இப்படி பரஸ்பர நட்பும் பணிவிடையும் உரு வெடுக்கலாயின. ஒரு சட்டி நிறையப் பிசைந்த களி மண் அவர்களுக்கிடையில் கொண்டுவந்து வைக்கப் பட்டது. அதினின்று அவர்கள் உருவங்கள் பண்ண ஆரம்பித்தனர். ஓர் உருவம் குழந்தையென்று கரு தப்பட்டது. அதற்குப் பாலூட்டுவது, தாலாட்டுவது போன்ற செயல்கள் இயல்பாகத் தோன்றலாயின. வேறு சில களிமண் வடிவங்கள் தெய்வங்களாகக் கருதப்பட்டன. அவைகளுக்குக் களிமண்ணாலான மலர்கள் சாத்தப்பட்டன. களிமண்ணாலான உணவு படைக்கப்பட்டது. பிறகு அதை எடுத்துப் பிரசாத மாக எல்லார்க்கிடையிலும் வழங்கினார்கள். அதை அவர்கள் ஏற்று உண்பது போன்று பாசாங்கு செய் தார்கள். இதையெல்லாம் சகோதரி நிவேதிதை கவ னித்துக்கொண்டிருந்தாள். தான் இப்போது என்ன செய்யவேண்டும் என்பதை அக்குழந்தைகளிடத் திருந்தே கற்றுக்கொண்டாள். அவர்களுக்கு விருப்ப மான விளையாட்டின் மூலமாகச் சிறிது சிறிதாகப்

பாடங்கள் துவங்கின. பாடங்கள் நடைபெறுகின்றனவென்று அச்சிறுமிகளுக்குத் தெரியாது. விளையாட்டு நடந்துகொண்டிருக்கிறது என்று அவர்கள் எண்ணினார்கள்.

பள்ளிக்கூடத்தின் பொருளாதார நிலை மிகவும் விசித்திரமாயிருந்தது. காஷ்மீர் மஹாராஜா நன்கொடையாகக்கொடுத்த எண்ணூறு ரூபாய் மூலதனமாயிருந்தது. சிறுமி ஒருத்தி மாதத்துக்கு ஒரு ரூபாய் சம்பளம் கட்டவேண்டும் என்ற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்குமேல் இனி எந்த விதத்திலும் அதை உயர்த்தமுடியாது. ஏனென்றால் அந்தச் சம்பளமே சரியாய் வருவது கிடையாது. அதைப்பற்றி அளவுக்குமீறி வற்புறுத்தினால் குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கே வரமாட்டார்கள்! சில வேளைகளில் கந்தல் துணிகளை அணிந்துகொண்டு வரும் சிறுமிகளுக்குப் புதிய உடை தைத்துக்கொடுக்கவேண்டிய அவசியம் உண்டாயிற்று. பள்ளிக்கூடத்துக்கு வரும் சிறுமிகளின் எண்ணிக்கை சிறிது சிறிதாக அதிகரித்து வந்தது. கைவசம் இருந்த தொகையோ விரைவில் குறைந்து வந்தது. போதிய அளவு பணம் கிடைத்தால் பள்ளிக்கூடத்தை வெற்றிகரமாக நடத்திவிடலாம் என்ற நம்பிக்கை சகோதரி நிவேதிதைக்கு உண்டாயிற்று. விசேஷ நாட்களிலெல்லாம் அன்னைசாரதா தேவியார் பள்ளிக்கூடத்துக்கு வந்து குழந்தைகளுக்குத் தின்பண்டம் வழங்கியும் அவர்களை உற்சாகப்படுத்தியும் சென்றார்.

பொதுமக்களுக்கு அறிவுரைகள்

கல்கத்தாவில் முக்கியமான இடங்களில் சகோதரி நிவேதிதை பொதுமக்களுக்காகவென்று இடையிடையே அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்துவதுண்டு. அதனுல்அறிவாளர் பலரைச் சந்திப்பதற்கும் அவர்களோடு தொடர்புகொள்ளுதற்கும் சந்தர்ப்பங்கள் வாய்த்தன. சகோதரி சந்தித்த அறிவாளர்களுள் இரண்டு மூன்றுபேரை முக்கியமாகக் குறிப்பிடலாம். கவிஞர் ரவீந்திரநாத தாகூர் நிவேதிதையின் பிரசங்கங்களைக் கேட்கச் செல்வதுண்டு. அப்பொழுதே அவர் ஒரு கவிஞராக விளங்கினர். எனினும் அவருக்கு உலகப்பிரசித்தி இன்னும் வரவில்லை. சகோதரி நிவேதிதையின் பள்ளிக்கூடத்தை இடையிடையே வந்து அவர் பார்வையிடுவார். கல்வியைப் பற்றி அவர்களுக்கிடையில் அடிக்கடி பேச்சு எழும். நிவேதிதையின் கல்வித்திட்டங்களைக் கவிஞர் முற்றிலும் பாராட்டினர். ஒரே ஒரு கொள்கையில் அவர்களுக்கிடையில் பலத்த அபிப்பிராய வித்தியாசம் வந்துவிட்டது. ரவீந்திரநாத தாகூர் தமது புதல்வி ஒருத்திக்கு ஆரம்பப் படிப்பை ஆங்கிலத்திலேயே புகட்டித்தரவேண்டுமென்று நிவேதிதையை வேண்டிக்கொண்டார். சிறு குழந்தைகளுக்குத் தாய்மொழியில்தான் ஆரம்பப் படிப்பு அமையவேண்டுமென்று சகோதரி நிவேதிதை தடை சொன்னுள். ஆங்கில மாது ஒருத்தி ஆங்கிலப் படிப்புக்கு அப்படித் தடை சொல்லுவது தமக்கு ஆச்சரியமாயிருந்ததென்று

தாகூர் மறுப்புக் கூறினர். தனது ஆக்ஷேபத்துக்குத் தக்க காரணங்களை சகோதரி நிவேதிதை எடுத்துக் காட்டினள்: குழந்தை ஒன்றுக்குத் தாய்ப்பால் போன்றது தாய்மொழி. வங்காளத்துக் குழந்தையொன்று வங்காளத்துப் பெண்ணாகவே வளரவேண்டும். அது ஆங்கிலப் பெண்ணாக மாறிவிடலாகாது. தாய்மொழியில் தேர்ச்சியடைந்த பிறகு ஆங்கிலம் கற்கலாம். குழந்தைப் பருவத்திலேயே மொழியை மாற்றிவிட்டால் நுண்ணறிவு வளர்ச்சிக்குத் தடையுண்டாகும். அவரவர்க்குச் சொந்தமாயுள்ள நல்லியல்பை அழித்துவிடாது பிறரிடமுள்ள நலனை ஏற்றுக்கொள்ளவேண்டும். அதற்கேற்ற பருவம் வரும்வரையில் காத்திருப்பதும் அவசியம். இப்படியெல்லாம் நிவேதிதை விளக்கிச் சொல்லியும் ரவீந்திரருக்குச் சமாதானம் வரவில்லை. இருவருக்குமிடையில் அபிப்பிராய வித்தியாசம்தான் இருந்தது. ஆனல் அதை முன்னிட்டு அவர்களுக்கிடையில் மனக்கசப்பு உண்டாகவில்லை. சகோதரி நிவேதிதையின் சீரிய கருத்துக்கள் பலவற்றை ரவீந்திரநாத தாகூர் ஏற்றுக்கொண்டார் என்றே இயம்பலாம். நெடுநாளைக்குப் பிறகு 'கோரா' என்ற கதைப் புத்தகம் ஒன்றை ரவீந்திரநாததாகூர் எழுதினர். அக்கதையில் அமைந்துள்ள முக்கியமான பாத்திரத்துக்கு நிவேதிதையின் சிறப்புக்களையெல்லாம் அமைத்து அவர் எழுதியிருக்கிருர்.

பெரியோர்களைச் சந்தித்தல்

பிறகு ரவீந்திரநாத தாகூர் மூலமாக அவருடைய தந்தையாராகிய தேவேந்திரநாத தாகூரை சகோதரி

நிவேதிதை சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது அவருக்கு வயது மிக முதிர்ந்துவிட்டது. இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு விவேகானந்த சுவாமிகள் தாம் மாணுக்களுக இருந்தபோது அப்பெரியவரைத் தரிசித்தார். அவருடைய ஆசியையும் அப்பொழுதே நிரம்பப்பெற்றிருந்தார். எதிர்காலத்தில் நரேந்திரன் ஒரு யோகி ஆவான் என்று அவர் வேதவாக்குப் போன்று விளம்பியிருந்தார். நாளடைவில் தேவேந்திரநாத தாகூருக்கு மஹரிஷி என்ற பட்டமும் வந்தது. அவருடைய ஆயுளின் அந்திய காலத்தைக் கடவுள் வழிபாட்டிலேயே அவர் கழித்து வந்தார். அத்தகையவர் நிவேதிதைக்கு அன்புடனும் ஆதரவுடனும் வரவேற்பு அளித்தார். இந்திய வழக்கத்துக்கு ஒப்ப அவருடைய பாதத்தைத் தொட்டு நிவேதிதை வணங்கினுள். சீரிய கருத்துக்கள் பலவற்றைப்பற்றி அவர்கள் அளவளாவிப் பேசினுர்கள். நிவேதிதை சுவாமி விவேகானந்தருக்கு சிஷ்யையாய் அமைந்திருப்பதைக்குறித்து மஹரிஷி பெருமகிழ்வு தெரிவித்தார். நிவேதிதையின் வாழ்வு இந்தியாவுக்குரிய பெரு நிவேதனம் ஆகவேண்டுமென்று அவர் மனமார ஆசீர்வதித்தார்.

மஹரிஷி தேவேந்திரநாத தாகூர் குடும்பத்தில் இன்னும் இரண்டுபேரோடு சகோதரி நிவேதிதை நெருங்கிய தொடர்புகொண்டிருந்தாள். அவர்களுள் ஒருத்தி சரளகோசால் என்பவள். மாதர் முன்னேற்றத்துக்காகப் பாடுபடுதலில் அவளுக்கு ஊக்கம் மிக இருந்தது. அந்த இயக்கத்தில் அவளுக்கும் நிவே

திதைக்குமிடையில் கருத்துஒற்றுமை மிக இருந்தது. ஆனால் மதக்கோட்பாட்டில் அவர்களுக்கிடையில் வேற்றுமையே அதிகமாக இருந்தது எனலாம். விக்கிரக ஆராதனை கூடாது என்பது மாது சரளகோசாவின் கொள்கை. மற்றும் மனதில் எண்ணுகிற எண்ணமே ஒரு விதமான விக்கிரகமென்றும், அதன் துணையால்தான் மக்கள் ஆத்ம வளர்ச்சியில் முன்னேற்றமடைய முடியும் என்றும் நிவேதிதை நிரூபித்து வந்தாள். சரளகோசால் கொண்டிருந்தது பிரம்மோ சமாஜத்தின் கொள்கை. நிவேதிதை கொண்டிருந்தது ஹிந்துமதக் கொள்கை.

சுரேந்திரநாத தாகூர் என்பவர் சகோதரி நிவேதிதையோடு பழகி வந்த மற்றொரு பிரமுகர் ஆவார். ரவீந்திரநாத தாகூரின் தமையனார் பிள்ளை இவர். அப்பொழுது இவருக்கு வயது இருபத்தாறு. வாலிபன் ஒருவனிடத்து இருக்கவேண்டிய துணிவு எல்லாம் இவரிடம் இருந்தது. இந்தியாவினிடம் இவருக்குத் தேசாபிமானம் மிக இருந்தது. இந்தியாவில் பயிர்த்தொழிலைப் பற்றிய புள்ளி விவரங்களையெல்லாம் பற்றி இவர் நன்றாக ஆராய்ந்திருந்தார். மழை பெய்யாவிட்டால் வருகிற கஷ்டம், மழை மிகைபடப் பெய்தால் வருகிற கஷ்டம், வேலையாட்கள் வேலை செய்யாது நின்று விட்டால் வருகிற சங்கடம் ஆகியவைகளை இவர் ஓர்ந்து ஆராய்ந்திருந்தார். சகோதரி நிவேதிதை இவருக்குக் கொடுத்திருந்த நிர்மாணத் திட்டம் என்றைக்கும் பயன்படக்கூடியது. ஏரிகளி

லும் குளங்களிலும் நீரைத் தேக்கிவைப்பது, அந் நீரை வாய்க்கால் வழியாகப் பூமிகளுக்கு எடுத்துச் செல்வது போன்ற திட்டம் மழைபெய்யாது பொய்க்கும் காலத்துச்கு உதவும். நிலவளம் குறைந்துபட்டுப்போகாது காப்பது அழியாச் செல்வமாகும். அதற்கெல்லாம் மேலாகப் பூமியில் பாடுபடுகின்றவர்களுக்கு எல்லாவிதமான வசதிகளையும் செய்து கொடுக்கவேண்டும். அவர்களுக்குக் குடியிருக்க நல்ல வீடுகள் தேவை. மிகைபட்ட குத்தகையையோ, வாரத்தையோ அவர்களிடமிருந்து வசூலிக்கலாகாது. அவர்களின் குழந்தைகளுக்கு வேண்டிய கல்வியைக் கொடுப்பது முற்றிலும் அவசியம். பண்ணையாட்களில் வயது முதிர்ந்தவர்களுக்குப் போதிய உணவும் பாதுகாப்பும் அளிப்பது மிராசுதாரின் கடமையாகும். இவையாவும் நிலம் படைத்திருப்பவர்கள் எக்காலத்திலும் கையாள வேண்டிய கோட்பாடுகளாகும்.

சகோதரி நிவேதிதை உறவாடிய பேரறிஞருள் ஜகதீச சந்திரவசு மிக முக்கியமானவர் ஆவார். கல்கத்தா ராஜதானிக் கல்லூரியில் அவர் ஒரு பௌதிக விஞ்ஞானப் பேராசிரியராக இருந்தார். பௌதிக விஞ்ஞான ஆராய்ச்சித் திறமை அவருக்கு மிக இருந்தது. அதில் அவருக்கு உற்சாகம் அளித்து, வசதிகள் செய்து கொடுத்திருந்தால் புதிய உண்மைகளையெல்லாம்அவர் கண்டுபிடித்திருப்பார். ஆனால் அரசாங்கத்தார் அவருக்கு முட்டுக் கட்டைகள் பல போட்டனர். உத்தியோகத்தில் அவரைக் கீழ்நிலைக்குக் கொண்டு

வந்து விட்டனர். தமது உரிமையைத் திரும்பவும் பெறுதற்கு அவர் மூன்று வருஷம் வழக்காடவேண்டியதாயிற்று. அத்தகையவருக்குச் சகோதரி நிவேதிதையுடன் பழக்கம் ஏற்பட்டது. பௌதிக விஞ்ஞானத்தைப் பற்றியே அவர்களுக்கிடையில் நீண்ட பேச்சுக்கள் நடக்கும். ஆராய்ச்சிக்கு வேண்டிய வசதிகளை அக்காலத்திய அரசாங்கத்தார் செய்து கொடுக்கவில்லையெனினும் ஜகதீச சந்திரவசுவுடைய வீட்டில் சிறியதோர் ஆராய்ச்சி சாலையை அமைத்துக்கொள்ளும்படி சகோதரி நிவேதிதை அவருக்கு உற்சாகம் ஊட்டினள். இங்கிலாந்தில் இருந்த பௌதிக விஞ்ஞானிகள் சிலருக்கு அவள் கடிதங்கள் எழுதினள். ஜகதீச சந்திரருக்குத் தேவையாயிருந்த நுண் கருவிகள் சிலவற்றை அவர்களிடமிருந்து வரவழைத்துக் கொடுத்தாள். அதன் பிறகு அவருடைய ஆராய்ச்சி ஆழ்ந்தும் விரைந்தும் நடைபெற்றது.

ஜகதீச சந்திரவசு கண்டறிந்த சில நுட்பமான பௌதிக உண்மைகளை விளக்கி அவர் ஒரு கட்டுரை எழுதினர். அக்கட்டுரையைப் புறக்கணிக்கிற பாங்கில் அக்காலத்திய ஆங்கில அரசாங்கம் நடந்துகொண்டது. இந்த நெருக்கடியில் சகோதரி நிவேதிதை உதவிக்கு வந்தாள். அக்கட்டுரையின் பிரதிகளை இங்கிலாந்தில் இருந்த முக்கியமான பௌதிக விஞ்ஞானிகளுக்கு அவள் அனுப்பி வைத்தாள். அவர்களுடைய அபிப்பிராயங்களை வெளியிடும்படியும் அவள் வேண்டிக்கொண்டாள். அத்துடன் அவளுடைய முயற்சி

நின்றுவிடவில்லை. அமெரிக்காவில் மிஸஸ் புல் என்ற கிழவி ஒருத்தி இருந்தாள். அவளும் விவேகானந்த சுவாமிகளின் சிஷ்யை ஆவாள். அவளுக்கு சுவாமிகள் தீரமாதா என்ற தீக்ஷா நாமம் சூட்டியிருந்தார். தீரமாதாவுக்கு நிவேதிதை இந்தக் கட்டுரையின் பிரதிகளை அனுப்பிவைத்துக் கடிதம் எழுதினாள். அமெரிக்காவிலிருந்த பௌதிக விஞ்ஞானிகளிடம் தீரமாதா அக்கட்டுரையைக் கொண்டு போனாள்.

இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் இருந்த பௌதிக விஞ்ஞானிகள் ஜகதீச சந்திரவசுவை ஒரு பேரறிஞராக அங்கீகரித்தார்கள். அதன் பிறகு ஜகதீச சந்திரவசுவுக்கு முட்டுக்கட்டை போட இந்தியாவிலிருந்த ஆங்கில அரசாங்கத்துக்கு இயலவில்லை. ஆராய்ச்சிக்கு அவருக்குத் தேவையாயிருந்த வசதிகளையெல்லாம் அரை மனதுடன் அரசாங்கத்தார் செய்து கொடுத்தார்கள். ஜகதீச சந்திரவசுவுடைய ஆராய்ச்சி பிறகு உச்சநிலைக்குப் போய்விட்டது. செடி, புல், பூண்டு ஆகியவற்றிலும் உயிர் இருக்கிறது என்பதை அவர் நிரூபித்துக் காட்டினார். பிறகு கல்லில் உயிர் இருக்கிறது என்பதையும் நிரூபித்துக் காட்டினார். பௌதிக விஞ்ஞான உலகம் இவருடைய ஆராய்ச்சியை முற்றிலும் அங்கீகரித்துக் கொண்டது. இவருக்கு "ஸர்" பட்டம் வழங்கப்பட்டது. இதற்கெல்லாம் மறைமுகமாகத் துணைபுரிந்தவள் நிவேதிதையாவாள். ஆயுள்காலம் முழுதும் அவர்கள் நெருங்கிய நண்பர்களாயிருந்து வந்தனர்.

8. மீண்டும் மேல்நாடுகளில்

உற்றுரை மீண்டும் சந்தித்தல்

சூழ்நிலைகளை அனுசரித்து வேலைத் திட்டத்தில் மாறுதல்களைக் கொண்டுவருவது பல தடவைகளில் அவசியமாகிறது. அப்படித் திருத்தியமைக்கின்றவர்களுக்கே வெற்றி கிடைக்கிறது. நிவேதிதைக்கு இப்பொழுது அத்தகைய நெருக்கடி வந்தது. பள்ளிக் கூடத்தை நடாத்துதற்குப் பணம் போதவில்லை. விவேகானந்த சுவாமிகள் மற்றுமொருமுறை அமெரிக்காவுக்கு வந்தாகவேண்டுமென்று அழைப்புகள் வந்துகொண்டிருந்தன. தமது வேதாந்த இயக்கத்தை வலியுறுத்துதற்கு அவர் அவ்வழைப்புக்குச் செவிசாய்க்க வேண்டிய அவசியம் உண்டாயிற்று. சகோதரி நிவேதிதையும் அவருடன் புறப்பட்டு வர வேண்டுமென்று அமெரிக்க அன்பர்கள் வற்புறுத்தினர். அவளுடைய பள்ளிக்கூடத்து நிர்வாகத்துக்குப் போதிய நிதி அமெரிக்காவில் அகப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தார்கள். இலண்டனில் இருந்த தனது தாயையும் உடன் பிறந்தவர்களையும் பார்த்து அவர்களுக்கு உற்சாகம் ஊட்டவேண்டிய அவசியம் ஒரு பக்கம் வந்தமைந்தது. விவேகானந்த சுவாமிகளும் தம்முடன் சுவாமி துரியானந்தர் என்ற குரு சகோதரரையும் சகோதரிநிவேதிதையையும் அழைத்துச் செல்லத் தீர்மானித்தார். புறப்படுவதற்கு முந்திய நாள் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் வசித்து வந்த தக்ஷிணேசுவர ஆலயத்துக்குச் சென்று வழி

பாடு செய்துவிட்டு வந்தார்கள். 1899ஆம் வருஷம் ஜூன் மாதத்தில் மூவரும் கல்கத்தாவினின்று கப்பல் பிரயாணத்தைத் துவக்கினார்கள். கடல் காற்று விவேகானந்த சுவாமிகளுக்கு நல்ல ஆரோக்கியத்தைக் கொடுத்தது.

தென்மேற்குப் பருவக்காற்றும் மழையும் சேர்ந்து உக்கிரத் தாண்டவமாடுகிற காலம் அது. கடல் முழுதும் கிடுகிடுத்திருந்தது. விர்விர் என்று காற்று வீசிற்று. படலம் படலமாக மழைத்தாரை பொழிந்தது. கடலில் குதித்தெழுந்த அலைகள் கப்பல் தட்டை வந்து எட்டின. நிலை குலைந்த பாங்கில் கப்பலும் நிதானமாக நீர்ப்பிரளயத்தினுள் நுழைந்து போய்க் கொண்டிருந்தது. பிரயாணிகள் யாரும் தங்கள் அறைகளினின்று வெளியே தலைகாட்ட முடியவில்லை. புறவுலகில் இருந்த இத்தகைய கொந்தளிப்புக்கிடையில் இம் மும்மூர்த்திகளும் அவரவர் அறையில் அமைதியே வடிவெடுத்தவர்களாயிருந்தனர். துரியானந்த சுவாமிகள் அல்லும் பகலும் ஆழ்ந்து தியானம் பண்ணிக்கொண்டிருந்தார். சுவாமி விவேகானந்தரும் சகோதரி நிவேதிதையும் நூல்கள் எழுதும் வேலையில் மூழ்கியிருந்தனர். சமுத்திர யாத்திரையை நன்கு பயன்படுத்திய மூவரும் ஜூலை மாதம் 31ஆம் தேதி இலண்டன் போய்ச் சேர்ந்தார்கள்.

இவர்களுடைய வருகையை சகோதரி நிவேதிதையின் தாயார் மேரி நோபிள் ஆவலோடு எதிர்பார்த்திருந்தார். தமது அருமைப் புதல்வி மார்க

ரெட்டுக்கு அளித்த அதே அன்பார்ந்த வரவேற்பு சுவாமிகள் இருவருக்கும் அளிக்கப்பட்டது. தங்கள் வீட்டில் இடவசதி போதாமையால் சுவாமிகள் இருவருக்கும் அருகில் பெரிய அறை ஒன்று வாடகைக்கு அமர்த்தப்பட்டது. இதற்குள்ளாக சுவாமிகளின் சிஷ்யைகள் இரண்டு பேர் அமெரிக்காவினின்று இலண்டன் வந்துசேர்ந்தார்கள். சுவாமிகளை விரைவில் சந்திக்கவேண்டும் என்ற அவா அவர்களை அங்ஙனம் தூண்டிற்று. அன்னவர்களும் நோபிள் குடும்பத்துக்கு அறிமுகம் செய்யப்பட்டார்கள். மார்கரெட்டினுடைய தங்கை மே என்பவளும், தம்பி ரிச்மாண்டு என்பவனும் இவர்கள் அனைவருக்கும் குற்றேவல் புரிவதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்தனர். சுவாமிகளோடு நெருங்கிப் பழகப் பழக நோபிள் குடும்பத்தாருக்கு மகிழ்ச்சி மிக உண்டாயிற்று. ஏசுகிறிஸ்து எத்தகையவராக இருந்திருக்கக் கூடும்என்பதைச் சுவாமி விவேகானந்தரின் பேரியல்பினின்று அவர்கள் ஒருவாறு அறிந்துகொண்டனர். அத்தகைய சான்றோரிடம் மார்கரெட் தனது வாழ்க்கையை ஒப்படைத்திருப்பது கிடைப்பதற்கரிய வாய்ப்பு என்று அவர்கள் கருதினர்.

சுவாமிகள் இருவரும் இலண்டனில் அதிகநாள் தங்கியிருக்க இயலவில்லை. விரைவில் அவர்கள் அமெரிக்கா போய்ச் சேர வேண்டியது அவசியமாயிற்று. ஆகஸ்ட் மாதம் 17 ஆம் தேதியன்று அமெரிக்க சிஷ்யைகள் இருவருடன் அவர்கள் பிரயாண

மாயினர். மார்கரெட்டின் தங்கை மே என்பவளுக்கு செப்டம்பர் மாதத்தில் மணம் முடித்துவைக்க ஏற்பாடாயிருந்தது. அப்பொழுது தமக்கை மார்கரெட்டும் வீட்டில் இருக்கவேண்டும் என்பது தாயாரின் விருப்பம். எனவே மார்கரெட் இன்னும் சில வாரங்கள் இலண்டனில் இருக்கவேண்டியது அவசியமாயிற்று. விவாகச் சடங்குகளுக்குக் குடும்பத்தார் பலர் அயர்லாந்தினின்று வந்திருந்தனர். தங்கையின் திருமணம் இனிது நிறைவேறியது. அதற்காக வென்று மார்கரெட் செய்யவேண்டிய ஏற்பாடுகளையும் பணிவிடைகளையும் திறம்படச் செய்து முடித்தாள். உற்றார் உறவினரிடம் அன்பு காட்டியதற்கிடையில் மனபரிபாகத்தில் அவள் ஒரு தீவிரமான துறவி. எனவே தனது கடமையைச் செய்துமுடித்ததும் அவளும் அமெரிக்காவுக்குப் புறப்பட்டாள்.

அமெரிக்கா வாசம்

விவேகானந்த சுவாமிகளின் அடியார்களாகிய இரண்டு மூன்று மாதர்கள் அமெரிக்காவில் நியூயார்க் துறைமுகத்தில் வந்து காத்துக்கொண்டிருந்தார்கள். சகோதரி நிவேதிதை கப்பலைவிட்டு இறங்கியதும் அவர்கள் அவளை எதிர்கொண்டு அழைத்துத் தங்கள் இருப்பிடம் சென்றனர். விசாலமான தோட்டத்தினுள் அமைந்திருந்த அந்த விடுதி மிகப் பெரியதாயிருந்தது. தங்குவதற்கான அறைகள் பல அதன்கண் இருந்தன. விவேகானந்த சுவாமிகளும் அவருடைய சிஷ்யர்களும் சிஷ்யைகளும் வெவ்வேறு

அறைகளில் தங்கியிருந்தனர். தனக்குரிய இடத்தை சகோதரி நிவேதிதையும் பெறலானுள்.

குரு சிஷ்ய இணக்கம் இப்பொழுது மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. அவர்கள் வசித்திருந்த வீட்டின் பெரியகூடத்தில் குறிப்பிட்ட வேளைகளில் எல்லாரும் கூடுவார்கள். ஒரு நாற்காலியின் மீது விவேகானந்த சுவாமிகள் பத்மாசனம் போட்டு அமர்ந்து கொள்வார். பின்பு பாடம் துவங்கும். அது சிஷ்யர்கள் அனைவருக்கும் பொதுவானது. என்னும் சுவாமிகளின் அருள்நோக்கம் பெரிதும் நிவேதிதையின்பால் திரும்பும். அவருடைய மேல்நாட்டு சிஷ்யர்களுள் நிவேதிதை முதன்மை வகித்தது சொல்லாமலே எல்லாருக்கும் விளங்கிற்று. சுவாமிகளின் சீரிய செய்திகளையும் கருத்துக்களையும் உலகெங்கும் எழுத்தின் மூலமாக விளக்குதற்குத் தெய்வாதீனமாக வாய்த்தவள் அவள்.

அவர்கள் வாழ்ந்துவந்த மாளிகையின் தோட்டத்தில் ஒரு நாள் காலையில் விவேகானந்த சுவாமிகள் இங்குமங்கும் உலாவிக்கொண்டிருந்தார். சிங்கம் ஒன்று கூண்டுக்குள் அடைபட்டிருக்கும்போது இங்கும் அங்கும் நடமாடுவது போன்றிருந்தது அவர் கொடுத்த காட்சி. அவரைத் தரிசிப்பதற்காக சகோதரி நிவேதிதை அங்குச் சென்ருள். அப்பொழுது சுவாமிகள் இரண்டொரு முக்கியமான கருத்துக்களை அவளுக்குத் தெரிவித்தார்: "மனது எப்பொழுதும் வெளியுலகிலேயே திரிந்துகொண்டிருப்பது சரி

யன்று. உலகத்தவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக அவர்கள் செய்கின்ற செயல்களைப் பார்த்து, 'மிகநன்று' என்றும் 'அற்புதமானது' என்றும் பகர்ந்து பழகுங்கால் மனதின் கூர்மை மழுங்கிப் போய்விடுகிறது. பொருள் சேராத சொற்களைச் சொல்லிப் பழகலாகாது. வெளியுலகில் சஞ்சரிப்பதைவிட மனது அதிகமாக அந்தர்முக திருஷ்டியில் போகவேண்டும்.

ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து

என்பது கோட்பாடு. யாருடைய மனது உள் முகமாகப் போய்ப் பழகுகிறதோ அவனுக்கு ஆத்மசக்தி மிக உண்டாகிறது. 'என் பேச்சுக்கு யார் செவி சாய்ப்பார்கள் ?' என்ற சந்தேகம் ஆத்மசக்தி படைத்திருப்பவனுக்கு உண்டாவதில்லை. அவன் நிறைமொழி படைத்தவன் ஆகிறான். வஜ்ராயுதத்துக்கு ஒப்பான வல்லமை அவனுடைய வாக்குக்கு வருகிறது. மற்றொரு விஷயம். நல்லது ஏதேனும் ஒன்றை எடுத்துச் சொல்லுதற்கு யாராவது ஒருவன் வருவானாகில் அவனுக்குச் செவி கொடுப்பதற்கும் உலகில் யாரோ சிலர் காத்துக்கொண்டிருக்கின்றனர். நீ ஆற்றல் படைத்தவள் ஆகவேண்டும். அது உனக்கு முடியுமா ?''—இங்ஙனம் சுவாமிகள் அவளுக்கு உபதேசித்து அருளினார்.

இனிது இனிது ஏகாந்தம் இனிது என்னும் கோட்பாடு தோன்றியுள்ளது. ஆனால் அது யாருக்கு

இனிது என்பது கேள்வி. சான்றோர்க்கு அது இனிதே. மனதை முற்றிலும் கட்டி ஆள்பவர்க்கு அது இனிதே. ஆனால் மனதை அடக்கி வைத்திருக்கத் தெரியாதவர்களுக்கு ஏகாந்தத்திலும் கொடியது வேறு ஒன்றுமில்லை. நரகத்தில் தள்ளிச் சித்திரவதை பண்ணுவதுபோன்று அது மனிதனைத் துன்புறுத்தும். பரிபக்குவம் அடைந்திருப்பவர்களைச் சோதித்துப் பார்ப்பதற்குஅவர்களை ஏகாந்தத்தில் விட்டுவிட வேண்டும். அத்தகைய ஆய்வு சகோதரி நிவேதிதைக்கு உண்டாயிற்று. பதினைந்து நாளைக்குஅவள் யாரையும் பார்க்காமலும் யாருடனும் பேசாமலும் தனித்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையை அவள்மீது சுவாமி விவேகானந்தர் சுமத்தினார். கடவுள் சிந்தனையிலும் உயர்ந்த கருத்துக்களைக் குறித்து வைத்தலிலும் அவள் காலத்தைக் கழிக்கவேண்டியதாயிற்று. மகிழ்வுடன் அந்தச் சோதனைக்கு அவள் உட்பட்டாள். ஏகாந்தமாய் இருந்துகொண்டு அன்னை பராசக்தியின் வழிபாட்டில் அவள் மூழ்கியிருந்தாள். இரண்டு அல்லது மூன்று தினங்கள் கழிந்தன. அதன்பிறகு அவளுக்கு ஓர் அரிய ஞான அனுபவம் உண்டாயிற்று. தனக்கும் அன்னை பராசக்திக்கும் இடையில் நிகழ்ந்த சம்பாஷணையாக அவள் அதைக்குறித்து வைத்தாள்.

அவளுடைய ஏகாந்தவாசம் முற்றுப்பெறும் தறுவாயில் சுவாமி விவேகானந்தர் வந்து கதவைத் தட்டினார். கதவும் திறக்கப்பட்டது. அப்பொழுது அவர்

உயர்ந்ததொரு கருத்தை அவளுக்கு உபதேசித் தருளினார்: "எல்லாருக்கும் பரமகுருவாய் இருப்பவர் சிவன். கல்லால விருக்ஷத்தின்கீழ் தக்ஷிணா மூர்த்தியாய் எழுந்தருளியுள்ளார். அக்ஞானத்தை அகற்றுவது அவருடைய அரும்பெரும் செயல். வினைப்பயனையெல்லாம் ஆத்மசாதகன் கடவுளிடம் ஒப்படைத்து விடவேண்டும். இல்லையேல் நல்வினையும் பிறவிக்கு வித்தாய்விடும். முதுமையில் தங்கள் வாழ்வைக் கடவுளுக்கு ஒப்படைக்கின்றவர்கள் முக்தியடைகிறார்கள். இளமையிலேயே தங்கள் வாழ்வைக் கடவுளுக்கு ஒப்படைக்கின்றவர்கள் பாக்கியவான்கள். அதற்கு நிகரான நிவேதனம் வேறுஒன்றுமில்லை. இறைவன் அருளால் அவர்களே உலகுக்கு உகந்த ஆச்சாரியர்கள் ஆகின்றனர்."

சகோதரி நிவேதிதை அமெரிக்காவுக்குச் சென்ற தன் முக்கியமான நோக்கம் கல்கத்தாவில் தான் துவக்கிய பெண் பாடசாலைக்குப் பணம் திரட்டுதலேயாம். அந்த அலுவலில் இறங்குதற்கு அவள் தனது குருநாதர் விவேகானந்த சுவாமிகளின் ஆசியை வேண்டி நின்றாள். அவரும் சகோதரியை மனமார ஆசீர்வதித்து அனுப்பினார். அப்பொழுது அவர் புகட்டிய புத்திமதியானது நிதி திரட்டுவோர் அனைவருக்குமே நன்கு பயன்படக்கூடியதாம். செல்வம் எவ்வளவைச் சேகரிக்கின்றோம் என்பது முக்கியமானதல்ல. எத்தகைய மனப்பான்மையுடன் அதைத் தேடுகிறோம்; எதற்காக அதைப் பிரித்தெடுக்கிறோம்;

திரட்டியெடுத்துத் திரவியத்தை எப்படிச் செலவு செய்கிறோம்?—என்பன மிக முக்கியமான கேள்விகளாகும். தனக்காகவென்று யாசகமாகப் பொருளை ஏற்பது இகழ்ச்சி. ஓர் உயர்ந்த இலட்சியத்துக்காக வென்று அதைச் சேகரிப்பது நல்ல ஆத்மசாதனமாகிறது. பொருள் கொடுப்பவரிடம் அடிமைப்படுகிற பாங்கில் நாம் நடந்துகொள்ளலாகாது. நன்கொடை வழங்க மறுக்கின்றவர்களிடத்து நமக்கு அலட்சிய புத்தி உண்டாகலாகாது. அமைதியான உன்னத நிலையில் மனதை யாண்டும் வைத்திருப்பது நமது குறிக்கோள். இக்கருத்துக்களையெல்லாம் சகோதரி நிவேதிதை நன்கு கிரகித்துக்கொண்டாள். ஆயினும் குபேரநாடு ஆகிய அமெரிக்காவில் போதிய அளவுக்குப் பொருள் உதவி கிடைக்கவில்லை. எனினும் நிவேதிதையின் ஊக்கம் மட்டும் சிறிதேனும் தளரவில்லை.

9. குருநாதரின் மறைவு

ஐரோப்பாவில் சிறிது காலம்

ஏதேனும் ஒரு காரியத்தை நிறைவேற்றுதற்கு வெளிநாடு சென்றிருக்கிற மனிதன் ஒருவன் தன் ஊர் திரும்பும்வேளை வரும்பொழுது எஞ்சியிருக்கும் சிறிய அலுவல்களை விரைந்து முடிக்கிறான். அப்படித் துரிதப்படுத்துதற்கிடையில் அவனுடைய மனதில் பெரும் பகுதி வியவகாரங்களினின்று விலகிக்கொள் கிறது. விவேகானந்தசுவாமிகளுக்கு வந்திருந்த மன நிலையும் அத்தகையது. இவ்வுலகம் என்னும் வெளி நாட்டினுள் வந்தவர் அவர். அறநெறி பிடித்தொழுகு தல் என்னும் நல்லியக்கத்தைத் துவக்கி வைத்தல் அவருடைய கடமையாயிற்று. அமெரிக்காவில் அவ ருக்கு அப்பணி முடிந்துவிட்டது. இந்தியாவில் அவ ருடைய வேலையில் இன்னும் கொஞ்சம் பாக்கி. அதன் பொருட்டு அவர் விரைந்து சென்றுகொண்டி ருந்தார். அதை சகோதரி நிவேதிதை நன்கு அறிந்து கொண்டாள். அதற்கேற்ற பாங்கில் அவளும் தன் குருநாதருக்குச் செய்யவேண்டிய அறப்பணிவிடை களைச் செவ்வனே செய்து வந்தாள்.

தம்முடன் இந்தியாவினின்று வந்திருந்த துரியா னந்த சுவாமிகளை அமெரிக்காவில் அறப்பணியில் அமர்ந்திருக்கும்படி அவர் செய்து வைத்தார். பிறகு தம் சிஷ்யர்களும் சிஷ்யைகளும் அடங்கிய ஒரு சிறு கூட்டத்துடன் அவர் பாரீஸ் நகரத்துக்குப் புறப்பட்டார். அக்கூட்டத்தில் சகோதரி நிவே

திதையும் ஒருத்தி. பாரிஸ் நகரில் சுவாமிகள் ஆற்ற வேண்டிய அரும்பணி ஒன்று இருந்தது. உலகில் உள்ள சமயங்களின் தோற்றம், வளர்ச்சி ஆகியவை களை ஆராய்ச்சி செய்தற்கென்றே பாரிஸ் நகரில் ஒரு மகாநாடு கூட்டப்பட்டிருந்தது. ஹிந்து மதத்தின் வரலாற்றைப்பற்றி அம்மகாநாட்டில் பேசவேண்டிய பொறுப்பு சுவாமி விவேகானந்தருக்கு உண்டா யிற்று. அதை நிறைவேற்றுவதற்காக அவர் அங்கே மூன்று மாதம் தங்கியிருந்தார். அப்பொழுது சகோ தரி நிவேதிதைக்கு இரண்டுவிதமான அரிய வாய்ப் புகள் கிடைத்தன. ஹிந்து மதத்தின் வரலாற்றைப் பற்றி விரிவாக விவேகானந்த சுவாமிகளிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொண்டது முதல் வாய்ப்பு. மகா நாட்டுக்காக அந்நகரிலே கூடியிருந்த பேரறிஞர் பல ரைச் சந்தித்து அவர்களுடன் சீரிய விஷயங்கள் பல வற்றை ஆராய்ச்சி செய்தது இரண்டாவது வாய்ப்பு ஆகும்.

பாரிஸ் நகர் மகாநாடு ஒருவிதத்தில் திருப்திகர மாக நிறைவேறியது. அதன் பிறகு ஐரோப்பாவி லுள்ள சில இடங்களைப் பார்த்துவிட்டு சுவாமி விவேகானந்தர் இந்தியாவுக்குத் திரும்பத் தீர்மானம் செய்தார். ஐரோப்பியச் சுற்றுப்பிரயாணத்துக்காக வென்று ஒரு சிறு கூட்டம் ஒன்று சேர்ந்தது. அதில் பலதரப்பட்ட ஆடவரும் மகளிரும் இருந்தனர். சிலர் மேலாம் இயல்பு படைத்திருந்த மேன்மக்கள். வேறு சிலர் கீழாம் இயல்பு படைத்தவர்கள். அக்கார

ணத்தை முன்னிட்டு சுவாமி விவேகானந்தர் அக்கூட்டத்துடன் சுற்றுப்பிரயாணம் செய்வது உசிதமல்ல என்று சகோதரி நிவேதிதை எடுத்து இயம்பினாள். அதற்குச் சமாதானமாக சுவாமிகள் செப்பியது சிந்தனைக்குரிய கூற்று ஆகும். இவ்வுலகில் நல்லவர் இருப்பது போன்று கெட்டவர்களும் இருக்கின்றனர். அதை முன்னிட்டு இவ்வுலகில் வாழ்ந்திருக்க நாம் மறுத்துவிடுகிறோமா? ஓர் இருப்புப்பாதை வண்டித்தொடரில் நல்லவர்கள் பயணம் போவது போன்று கெட்டவர்களும் பயணம் போகின்றனர். கெட்டவர்கள் போவதை முன்னிட்டு ரயில் வண்டிப் பயணத்தை நாம் விலக்கி வைத்துவிடுகின்றோமா? ஒரே வண்டிக்குள் நல்லவர்கள் இருப்பது போன்று கெட்டவர்களும் இருக்கின்றனர். அதனால் அவ்வண்டியில் போகாது நாம் ஒதுங்கிக்கொள்கிறோமா? ஓர் ஊரைப்பார்ப்பதற்கு நல்லவர்கள் போவதுபோன்று கெட்டவர்களும் போகின்றனர். கெட்டவர்கள் போவதை முன்னிட்டு அவ்வூர்ப்பயணத்தை நாம் நிறுத்தி விடுகின்றோமா? இக்கருத்துக்களை எல்லாம் கேட்ட பின் மேலும் தடை எதுவும் சொல்ல நிவேதிதைக்கு இயலவில்லை. சுவாமிகளின் பரந்த பாங்கை எண்ணிப் பார்த்துவிட்டு அவள் வாளாவிருந்து விட்டாள்.

ஐரோப்பாக் கண்டத்தில் விவேகானந்த சுவாமிகள் செய்த சுற்றுப்பிரயாணத்தில் கலந்துகொள்ள சகோதரி நிவேதிதைக்கு இயலவில்லை. ஏனென்றால் அவள் உடனே இங்கிலாந்துக்குச் சென்று கவனிக்க

வேண்டிய முக்கியமான அலுவல் ஒன்று இருந்தது. ஜகதீச சந்திரவசு என்னும் பௌதிக விஞ்ஞானி யின் வல்லமையை அங்கீகரிக்க அக்காலத்திய ஆங் கில அரசாங்கம் மறுதலித்தது. இந்தியா அப் பொழுது அடிமை நாடாயிருந்ததே அதற்குக் காரண மாயிற்று. ஆனல் சகோதரி நிவேதிதையின் முயற்சி யால் அவருக்கு ஓரளவுக்கு பௌதிக விஞ்ஞானி களுக்கிடையில் அங்கீகாரம் கிடைத்திருந்தது. இப் பொழுது அவர் தம் மனைவியுடன் பாரிஸ் நகரத் துக்கு வந்திருந்தார். இங்கிலாந்தில் இருந்த விஞ் ஞானிகளுக்கிடையில் அவரை அறிமுகப்படுத்தி வைப்பது நிவேதிதையின் பொறுப்பாயிற்று. ஒவ் வொரு படித்தரத்திலும் அரசாங்கம் முட்டுக்கட்டை போட்டுக்கொண்டே வந்தது. அதையெல்லாம் முறையாகச் சமாளித்துக்கொண்டு ஜகதீச சந்திர வசுவை அவள் விஞ்ஞானியர் சங்கத்தில் சேர்த்து விட்டாள். அறிஞரை அறிஞர் உலகம் போற்று மன்றோ! ஜகதீச சந்திரவசு செய்திருந்த அரிய விஞ் ஞான ஆராய்ச்சிகளுக்கு உலகப் பிரசித்தி வந்து விட்டது.

அப்பொழுது இங்கிலாந்தில் நேர்ந்த மற்றொரு நிகழ்ச்சியும் குறிப்பிடத்தக்கது. சகோதரி நிவே திதை கல்கத்தாவில் துவக்கியிருந்த பெண் பாட சாலைக்குப் பொருள் உதவி வேண்டுமென்று கூறி அவள் இரண்டு மூன்று கட்டுரைகளை இங்கிலாந்தில் சில பத்திரிகைகளில் வெளியிட்டிருந்தாள். நன்

கொடைகளும் ஒருவாறு திருப்திகரமாகவே வரலாயின. ஆனால் இங்கிலாந்தில் இருந்த கிறிஸ்தவ மதப்பிரசாரகர்களுக்கு அது சிறிதேனும் பிடிக்கவில்லை. அவர்கள் எதிர்ப்பிரசாரம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். கல்லையும் மண்ணையும் கடவுள் என்று வைத்து வணங்குகின்ற கறுப்பு மனிதர்களுடன் உறவாடி மார்கரெட் கெட்டுப்போய்விட்டாள் என்றும், அவளுடைய பைத்தியக்காரத்தனத்துக்கு யாரும் ஆதரவு கொடுக்கலாகாதென்றும் பாதிரிமார்கள் தடை செய்தனர். அதற்கு விடையாக Lambs among wolves — 'ஓநாய்களுக்கிடையில் ஆட்டுக்குட்டிகள்' என்னும் கட்டுரை ஒன்றை நிவேதிதை வெளியிட்டாள். அச்சிறு நூல் இன்றைக்கும் அகப்படக்கூடியது. மதத்தின் பெயரால் யாருக்கும் குறுகிய மனப்பான்மை வரலாகாது என்பது அதன் உட்கருத்து ஆகும்.

பழையபடி இந்தியாவில்

இனி, நிவேதிதை நார்வே தேசத்தில் மூன்று வாரங்கள் ஏகாந்த வாசத்தில் கழித்துவிட்டு இங்கிலாந்திற்கு வந்து சில வாரங்கள் தங்கியிருந்தாள். பிறகு தனது சுவீகாரத் தாய்நாடாகிய இந்தியாவுக்குப் புறப்பட்டாள். 1901ம் வருஷம் நவம்பர் மாதம் அவள் கல்கத்தா வந்து சேர்ந்தாள். தன் குருநாதரைச் சந்திக்க ஆவலுடன் சகோதரி நிவேதிதை பேலூர் மடம் போய்ச் சேர்ந்தாள். சுவாமி விவேகானந்தரைச் சந்தித்த சந்தோஷம் ஒரு பக்கம்;

அவருடைய திருமேனியானது மெலிந்து கிடந்ததைக் கண்டு வருத்தப்பட்டது மற்ருெரு பக்கம். குரு சிஷ்ய இணக்கமோ ஒப்பு உயர்வு அற்றது. அதன் இனிமை யையும் மகிமையையும் எதனேடும் சீர்தூக்க முடி யாது. சகோதரி நிவேதிதையின்மீது சுவாமி விவே கானந்தரின் கருணை மழை இப்பொழுது பன்மடங்கு அதிகமாகப் பொழிந்துகொண்டிருந்தது. அவரு டைய அந்திய காலம் அணுகிவிட்டதே அதற்குக் காரணம் என்பதை அப்பொழுது யாரும் அறிந்திலர்.

இதற்கிடையில் இந்திய தேசிய காங்கிரஸ் அவ் வாண்டில் கல்கத்தாவில் கூடியது. இந்தியாவின் பல மாகாணங்களிலிருந்து தேசியத் தலைவர்கள் அங்கே வந்திருந்தனர். அவர்களில் பெரும்பான்மை யோர் சுவாமி விவேகானந்தரைச் சந்திப்பதற்காகப் பேலூர் மடத்துக்கு ஓயாது வந்துகொண்டிருந்தனர். தேசியப்பிரச்னைகள் பலவற்றைப்பற்றிஅவர்களோடு பேசவேண்டிய பொறுப்பு சுவாமிகளுடையதாயிற்று. சகோதரி நிவேதிதையினுடைய பொறுப்பும் அதற்கு நிகராகவே இருந்தது என்று இயம்புவது மிகையா காது. ஏனென்ருல் அவள் பெற்றிருந்த அரசியல் ஞானம் வேறு யாருடைய ஞானத்துக்கும் குறைந்த தன்று. இந்தியாவின் மீது அவள் கொண்டிருந்த அபிமானமோ இந்திய மக்களுடையதைவிடப் பன் மடங்கு ஆழ்ந்ததாயிருந்தது. என்னென்ன பிரச்னை களை என்னென்ன பாங்கில் நீக்கி வைக்கவேண்டும் என்பதை அவள் தெளிந்த பாங்கில் அறிந்திருந்

தாள். விவேகானந்த சுவாமிகளின் கருத்துக்க ளெல்லாம் பெரிதும் அவள் வாயினின்றே வெளியா யின எனலாம். இங்ஙனம் அவ்வாண்டில் நிகழ்ந்த காங்கிரஸ் மகாசபையின் ஆலோசனைக் குழுபோன்ற ஒன்று அமைதியாக பேலூர் மடத்தில் நிகழ்ந்து கொண்டிருந்தது. சகோதரி நிவேதிதை வழங்கிய கருத்துக்களை அறிஞர் பலர் ஊக்கத்துடன் ஏற்றுக் கொண்டனர்.

தான் துவக்கியிருந்த பள்ளிக்கூடம் சகோதரி நிவேதிதைக்கு உயிர் போன்றது. இந்தியாவுக்குத் திரும்பி வந்தானதும் அப்பள்ளிக்கூடத்தைப் புதுப் பிப்பது அவளுடைய முதல் கடமையாயிற்று. இப் பொழுது அதற்குப் பெண் குழந்தைகள் அதிகம் பேர் வர ஆரம்பித்துவிட்டனர். அதில் பணியாற்றுதலைக் குறிக்கோளாகக் கொண்டிருந்த மகளிர் சிலர் சகோ தரி நிவேதிதையுடன் தோழிமார்களாகச் சேர்ந்து கொண்டனர். பள்ளிக்கூடத்து அலுவல்கள் படிப்படி யாக விரிவடைந்து வந்தன. சில நாட்களில் விவேகா னந்த சுவாமிகள் தாமே அப்பள்ளிக்கூடத்தை நேரில் வந்து பார்வையிடுவார். ஒவ்வொருதடவையும் அவ ருடைய வருகையானது சகோதரி நிவேதிதைக்குப் புத்துயிர் ஊட்டி வந்தது. தான் கொண்டிருந்த இலட் சியத்துக்கு முழு மனதோடு தன் உடல் பொருள் ஆவியையெல்லாம் அவள் உவந்து அளித்துவந்தாள்.

இனி, சுவாமி விவேகானந்தர் நெடுநாள் திருமேனி தாங்கி இம்மண்ணுலகில் வாழ்ந்திருக்க

மாட்டார் என்பதை நிவேதிதை நன்கு அறிந்து கொண்டாள். எனவே அவரிடமிருந்து தான் பெற வேண்டிய அருள் பிரசாதத்தையெல்லாம் அவள் விரைவில் ஏற்று வந்தாள். குறிப்பிட்ட நாட்களில் கல்கத்தாவில் தனது பள்ளிக்கூடத்தினின்று அவள் பேலூர் மடத்துக்குப் புறப்பட்டுப் போவாள். பிறகு ஏதேனும் ஒரு விதத்தில் அவள் தன் குருநாதருக்குச் சிறிது நேரம் குற்றேவல் புரிந்து வருவாள். அதற்கிடையில் தான் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்களைச் சுருக்கமாகக் கேட்டுத் தெரிந்து கொள்வாள். சுவாமிகளுக்கு அதிகமாகத் தொந்தரவு கொடுக்கலாகாது என்ற எண்ணத்துடன் அவ்விடத்தைவிட்டு விரைவில் புறப்பட்டுவிடுவாள். இங்ஙனம் தன் குருநாதரைத் தரிசிப்பதற்குக் கிடைத்த வாய்ப்பையெல்லாம் அவள் நன்கு பயன்படுத்தி வந்தாள்.

அதிகாலையில் எழுந்திருந்து நித்திய அனுஷ்டானங்களையும் வந்தனை வழிபாடுகளையும் முடித்துக் கொள்வது நிவேதிதையின் வழக்கம். 1902ஆம் வருஷம் ஜூலை மாதம் 5ஆம் தேதி அதிகாலையில் அவளுடைய வழிபாடு முடிவு பெறுதற்கு முன்பே அவசரமான கடிதம் ஒன்று அவள் கைக்கு நீட்டப்பட்டது. அவளும் சிறிது பரபரப்புடன் அதைப் பிரித்துப் படித்துப் பார்த்தாள்:— "இரவு ஒன்பது மணிக்கு சுவாமி விவேகானந்தர் உடலத்தை ஒதுக்கி விட்டு மஹா சமாதியடைந்துவிட்டார்." நிவேதிதைக்

குச் சிறிதேனும் மனத்தளர்ச்சி உண்டாகவில்லை. திடுக்கிடக்கூடிய இச்செய்தியை அமைதியாக ஏற்றுக்கொண்டாள். உடனே பேலூர் மடத்துக்குப் புறப்பட்டுப் போனாள். படுக்கவைத்திருந்த திருமேனிக்குக் கொஞ்சநேரம் விசிறி வீசினாள். பாதமிரண்டும் தன் முடிமீது படும்படி முழந்தாளிட்டு வணங்கினாள். அத்திருமேனிக்கு அவள் செய்த இறுதி வழிபாடு அது. சில மணி நேரங்களில் அந்த யாக்கை தீக்கு இரையாயிற்று. எந்த இலட்சியத்துக்காக விவேகானந்த சுவாமிகள் தன்னை ஆயத்தப்படுத்தினாரோ அந்த லட்சியத்தில் இன்னும் பன்மடங்கு அதிகமாக ஈடுபடத் தீர்மானம் செய்துகொண்டு சகோதரி நிவேதிதை அமைதியாகக் கல்கத்தாவுக்குத் திரும்பினாள்.

10. அரசியல் இயக்கம்

என் செயலுக்கு நானே பொறுப்பாளி

சகோதரி நிவேதிதை தூய வாழ்வே வடிவெடுத்தவளாக இருக்கவேண்டுமென்று விவேகானந்த சுவாமிகள் மிக வற்புறுத்தினர். ஆனால் வாழ்க்கையில் அவள் எத்துறையில் தன் ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும் என்ற நியதியை அமைக்கவில்லை. தான் விரும்பிய துறையில் அல்லது துறைகளில் அவள் பணியாற்றலாம். செய்யும் பணிவிடைகளையெல்லாம் சர்வேசுவரனுடைய ஆராதனையாகச் செய்யவேண்டும். அப்பணிவிடைகள் உலகுக்கும் நன்கு பயன்பட வேண்டும். இதுவே விவேகானந்த சுவாமிகள் நிவேதிதைக்கு வகுத்துக் கொடுத்த திட்டம்.

இந்தியாவானது அக்காலத்தில் அரசியல் துறையில் அடிமைப்பட்டிருந்தது. தனது அடிமைத்தனத்தை அறிந்துகொள்ள முடியாத அவ்வளவு அக்ஞான இருளில் அது மூழ்கிக் கிடந்தது. சகோதரி நிவேதிதை அயர்லாந்தில் பிறந்தவள். அயர்லாந்து அக்காலத்தில் இங்கிலாந்துக்கு அடிமைப்பட்டிருந்தது. ஆனால் சுதந்திரப் போராட்டம் அங்கே துவங்கிவிட்டது. இந்தியாவுக்கோ அக்காலத்தில் அதைப்பற்றிய உணர்ச்சியுங்கூட உண்டாகவில்லை. அந்த உணர்ச்சியை உண்டுபண்ணுவது தன் கடமை என சகோதரி நிவேதிதை கருதினள். அப்பொழுது ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்துக்குத் தலைவராக இருந்த

சுவாமி பிரம்மானந்தரிடம் தன் கருத்தை அவள் தெரிவித்தாள். அவர்களுக்கிடையில் அதைப்பற்றி அபிப்பிராய பேதம் உண்டாயிற்று. ஸ்ரீராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்தவர்கள் எக்காரணத்தை முன்னிட்டும் அரசியல் இயக்கத்தில் கலந்துகொள்ளலாகாது என்பது பிரம்மானந்த சுவாமிகளின் தெள்ளத் தெளிந்த தீர்மானம். சகோதரி நிவேதிதைக்குக் கல்வித்துறை ஒன்றிலேயே சமுதாய சேவைக்குப் போதுமான வாய்ப்பு இருந்தது என்று சுவாமிகள் சொன்னார். அது முற்றிலும் உண்மையென்று சகோதரி ஒத்துக்கொண்டாள் எனினும் தனது அரசியல் ஞானமும் அரசியல் அனுபவமும் இந்தியாவுக்குப் பயன்படாது வீண்போகலாகாது என்பது அவளுடைய துணிபு. இதைப்பற்றி அவர்களுக்கிடையில் நீண்ட சம்வாதம் அமைதியாக நிகழ்ந்தது. எனினும் இருவருக்குமிடையில் கருத்து ஒற்றுமை உண்டாகவில்லை. மடத்துத் தலைவரிடம் சகோதரி நிவேதிதை இறுதியாகப் பணிவுடன் ஒரு வேண்டுகோள் செய்துகொண்டாள். "சுவாமி, என்னை மன்னித்தருளுங்கள். நான் எச்செயலைச் செய்தாலும், சுவாமி விவேகானந்தரின் சிஷ்யை என்னும் புனிதமான வாய்ப்புக்கு இழுக்கு வராது பார்த்துக்கொள்வது என் கடமை. இந்தியாவின் நலத்தைத் தவிர வேறு எதுவும் என் கருத்தில் இல்லை. இனி என் செயலுக்கு நானே பொறுப்பாளி என்பதை அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் தெரிவித்துவிடுகிறேன்."

இக்கூற்றுக்குப் பிரம்மானந்த சுவாமிகள் தடையொன்றும் சொல்லவில்லை. அவர் மௌனமுற்று இருந்துவிட்டார். பிறகு சகோதரி நிவேதிதைக்கு அவர் ஆசிகூறி அனுப்பி வைத்தார். இரண்டொரு நாளில் சமாசாரப் பத்திரிகைகளில் சகோதரியின் வாக்குமூலம் வெளியாயிற்று: "இந்தியாவை என்னுடைய சுவீகாரத் தாய் நாடாகக் கொண்டவள் நான். என்னுடைய உடல் பொருள் ஆவியையெல்லாம் இந்தியாவின் பணிவிடைக்காகவென்றே ஒப்படைத்திருக்கிறேன். சுவாமி விவேகானந்தர் என்னுடைய குருநாதர். ஆனால் இனி நான் ஆற்றும் பணிவிடைகளெல்லாம் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின் அங்கத்தினள் என்னும் பொறுப்பில் அல்ல. என்னுடைய சொந்தப் பொறுப்பிலேயே அரசியல் துறையில் பணியாற்ற நான் துணிந்துள்ளேன். என் செயலுக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தார் உத்திரவாதிகள் ஆகமாட்டார்கள்."

புதிய முறையில் அரசியல் போதனை

கல்கத்தாவில் பிரசுரிக்கப்பெற்ற முக்கியமான பத்திரிகைகளிளெல்லாம் இச்செய்தி வெளியாய்விட்டது. அதன் பிறகு சகோதரி நிவேதிதைக்கு ஒரு கவலை ஒழிந்தது. இனி, தன் விருப்பப்படி நாட்டுக்கு அவள் பணிவிடை செய்ய முடியும். கற்றவர்களுக்கிடையில் தேசாபிமானத்தைப் புகட்ட அவள் தீவிரமாகப் பாடுபட்டாள். அவள் புகட்டிய அரசியல் உணர்ச்சி ஓர் அலாதியான போக்குடையது. அது அரசியல் போன்று தென்பட்ட ஆத்ம சாதனமேயாம்.

சுவாமி விவேகானந்தர் புகட்டிய வேதாந்த தத்துவம் வாழ்க்கைக்குப் புத்துயிர் ஊட்டுவதாயிருந்தது. அவருடைய அருள் சக்தியே நிவேதிதையின் வாயிலாக வெளியாவது போன்றிருந்தது. 'செயல் ஆற்ற முன் வாருங்கள்' என்று சகோதரி நிவேதிதை மக்களை உறக்கத்தினின்று தட்டியெழுப்பினாள். கும்பகர்ணன் போன்று தூங்கிக் கிடப்பவர்கள் செத்தவர்களுக்குச் சமானம். விழித்தெழுந்து நல்வினையாற்றுகின்றவர்களே வீரர்கள்.

கடவுளை வழிபடுதற்கு ஆலயத்தின்கண் எழுந்தருளப்பண்ணியிருக்கும் விக்ரகம் ஒன்றுதான் உற்ற உபாயம் என்று எண்ணவேண்டாம். விதவிதமான பாங்குகளில் உழைத்துப் பாடுபடும்படி மக்களை உற்சாகப்படுத்துவதும் அதற்கேற்ற வசதிகளைச் செய்து கொடுப்பதும் நல்ல வழிபாடு ஆகும். ஆலயங்கள் கட்டுவிப்பது போன்று தொழிற்சாலைகள் அமைத்துப் பலருக்குப் பிழைப்பதற்கான உபாயங்களைச் செய்துவைப்பது நல்ல சிவபூஜையாகும். கிரியைகள் மூலமாகக் கடவுள் ஆராதனை செய்வதற்குப் பல கோயில்கள் இருப்பது போன்று, கலைகளைப் பரப்புதற்கான கல்விச்சாலைகளைப் பெருக்குவதன் மூலம் பரம்பொருளைப் போற்றுவது மிக மேலானது. கடவுளின் பெயரால் பலர் இரந்துண்டு வாழ்கின்றனர். அதற்குப் பதிலாக அவர்கள் கடவுளின் பெயரால் உழைத்துப் பாடுபட்டுப் பொருள் சம்பாதிப்பது மேல். வைதிக வாழ்வு என்பது லௌகிகத்தில் அனைவருக்கும் நலன் தருவதாய் இருக்கவேண்டும். இப்

பாரினில் உள்ளோரைப் பெருமக்கள் ஆக்குவது எதுவோ அதுவே பாரமார்த்திக வாழ்வு. இத்தகைய சீரிய கருத்துக்களை சகோதரி நிவேதிதை மக்களுக்கிடையில் பரப்பி வந்தார்.

குருவிடம் கற்ற அரசியல் திட்டம்

அண்மையில் கல்கத்தாவில் நிகழ்ந்த தேசிய காங்கிரசுக்கு வந்திருந்த தலைவர்கள் பலருடன் அரசியல் தொடர்பு கொள்ள சகோதரி நிவேதிதை முற்பட்டார். அவர் உறவு கொண்டாடிய அரசியல் வாதிகளில் திருவாளர் கோபாலகிருஷ்ண கோகலே என்பவர் ஒருவர். சுதந்திர இயக்கத்தில் அவர் மிதவாதம் பூண்டவர். தீவிரமான நடவடிக்கை எதற்கும் அவர் ஆயத்தமாயில்லை. அதனால் அவருக்கும் சகோதரி நிவேதிதைக்கும் அபிப்பிராய வித்தியாசம் ஏற்பட்டது. அவருடைய பெருந்தன்மையையும் குணசீலத்தையும் சகோதரி பெரிதும் பாராட்டினார். ஆனால் சுதந்திரப் போராட்டத்துக்கு அவருடைய திட்டத்தில் தரம் ஒன்றுமில்லை என்பது நிவேதிதையாரின் கருத்து ஆகும். ஆனால் பாலகங்காதர திலகரின் தீவிரமான வேலைத்திட்டம் சகோதரியாருக்கு முற்றிலும் உடந்தையாயிற்று. அத்தகைய கொள்கையையே அவ்வம்மையார் பல தேசாபிமானிகளுக்கிடையில் பரப்பி வந்தார்.

சுவாமி விவேகானந்தர் தம்மிடம் பகர்ந்திருந்த அரசியல் கருத்து ஒன்று அடிக்கடி சகோதரி நிவேதிதையின் ஞாபகத்துக்கு வந்துகொண்டிருந்தது. எதிர்பாராத ஒரு முறையில் இந்தியாவுக்குச் சுதந்

திரம் திடீரென்று ஒருநாள் வந்து சேரும். அதன் பிறகு அந்த சுதந்திரத்தைக் காத்து வைப்பதுதான் மிகக் கடினமானதாயிருக்கும். சரியான பாங்கில் நாடு தன் கடமையைச் செய்து வராவிட்டால் மூன்று தலை முறைக்குள் அது பெற்ற சுதந்திரம் கனவு போன்று கை நழுவிப் போய்விடும். பெற்ற சுதந்திரத்தை வைத்து அனுபவிக்கத் தகுதியுடையதாக நாடு தன்னை ஆக்கிக்கொள்ள வேண்டும். ரஷ்யாபோன்றோ ஜப்பான் போன்றோ ஆவது இந்தியாவுக்குப் பொருந்தாது. தனது தேசிய இலட்சியத்தையே உயிர்நாடியாக இந்தியா கொண்டிருக்கவேண்டும். குறிப்பிட்ட ஒரு சாராரின் பிரதிநிதிகள் மட்டும் அதன் ஆட்சி முறையில் இடம் பெற்றால் போதாது. மக்கள் அனைவருக்கும் உரிய ஆட்சியாக அது அமையவேண்டும். மக்களுள் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற எண்ணத்துக்கு இடம் கொடுக்கலாகாது. ஜாதி வேற்றுமை என்னும் வேலி நீங்கவேண்டும். ஆனால் அந்தந்த ஜாதிக்குரிய பண்பு போய்விடலாகாது. சீருடன் அமைக்கப்பெற்றுள்ள நாட்டிலே கல்விமான்களும், போர் புரிபவர்களும், வேளாண்மையும் வர்த்தகமும் செய்பவர்களும், வேலையாட்களும் ஒரேவிதமான அந்தஸ்தைப்பெற்றுவருவது முற்றிலும் அவசியம். இத்தகைய சீரமைப்பின் பொருட்டுப் பொதுமக்கள் அனைவரும் நல்ல பாங்கில் கல்வி பெற்று வருவது அவசியமாகிறது.

இந்தியா உய்வு அடைவதற்குப் புற நாடுகளின் உதவியை எதிர்பார்க்கலாகாது. தனது சொந்த

முயற்சியைக் கொண்டே அது முன்னேற்றமடைய வேண்டும். தூங்கிக்கொண்டிருக்கிற இந்திய மக்களிடத்து உள்வலிவு ஏராளமாயிருக்கிறது. தகுந்த பாங்கில் அவர்கள் உணர்வும் விழிப்பும் பெற்று எழுந்திருக்கப் போகிறார்கள். ஆற்றல் மிகப் படைத்துள்ள எதிர்கால இந்தியாவுக்கு முன் மாதிரியாக விவேகானந்த சுவாமிகள் வந்து அமைந்துள்ளார்—இங்ஙனம் சகோதரி நிவேதிதை இந்தியாவின் மறு மலர்ச்சியைப் பற்றி எண்ணி வந்தார்.

நாடெங்கும் பிரசாரம்

இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து சகோதரி நிவேதிதைக்கு அழைப்புகள் வந்துகொண்டிருந்தன. அவரும் கீழ்வங்காளம், பீகார், ஐக்கிய மாகாணம், பஞ்சாப், பம்பாய் முதலிய மாகாணங்களில் சுற்றுப் பிரயாணம் பண்ணி அரும் பெரும் விஷயங்களை மக்களுக்கிடையில் எடுத்துப் புகட்டிவந்தார். அவரது பேச்சுக்களைக் கேட்ட அல்லது பத்திரிகைகளில் படித்த மாணுக்கர்கள் பலர் தங்களுக்கு ஏதாவது புத்திமதி கூறும்படி அவ்வம்மையாரிடம் வேண்டிக் கொண்டனர். அதற்கு அவர் "நான் சுதந்திரவாழ்வு வாழ்வதுபோன்று நீங்களும் சுதந்திரவாழ்வு வாழுங்கள். ஏதேனும் ஒருவிதத்தில் இந்தியாவுக்குத் தொண்டு புரியுங்கள்" என்று அம்மாணுக்கர்களுக்குப் புகட்டி வந்தார்.

பரோடா சமஸ்தானத்திலிருந்து சகோதரி நிவேதிதைக்கு அழைப்பு வந்திருந்தது. அவரும் ஆங்குப் புறப்பட்டுச் சென்றார். மகாராஜாவின் பிரதிநிதியாக அவரை எதிர்கொண்டு அழைக்க வந்தவர்

ஸ்ரீ அரவிந்தகோஷ் என்பவர் ஆவார். அப்பொழுது அவர் ஆங்கு ஒரு கல்லூரியின் பேராசிரியராக இருந்து வந்தார். அந்த அறிவாளருக்கும் சகோதரி நிவேதிதைக்கும் இடையில் ஏற்பட்ட இணக்கம் சரித்திரத்தில் பொறித்து வைக்கத் தகுந்தது. அரசியல் உணர்ச்சி ஸ்ரீ அரவிந்தகோஷிரிடம் பொங்கித் ததும்பிக் கொண்டிருந்தது. ஒரு புரட்சிகரமான இயக்கத்தை அவர் துவக்கிவைக்க வேண்டுமென்றும், அதற்குத் தகுந்த இடம் வங்காளமே என்றும் நிவேதிதையார் அரவிந்தருக்கு எடுத்து ஓதினர். அரவிந்தரும் அதற்குச் சம்மதம் கொடுத்தார். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைத் தாம் செய்துகொண்டிருந்ததாகவும் அவர் சகோதரியாரிடம் தெரிவித்தார். சுமார் பத்து வருஷகாலம் அவர் அரசியல்துறையில் வங்காளத்தில் பெருங் கிளர்ச்சிகளை உண்டுபண்ணி வைத்தார். பிறகு அவர் பாண்டிச்சேரிக்குச்சென்று அருள் துறையில் மக்களை ஆயத்தப்படுத்தி வந்தார். அவர் நிறுவியுள்ள ஸ்தாபனம் ஸ்ரீ அரவிந்த ஆச்ரமம் என இன்று வழங்கிவருகிறது. சகோதரி நிவேதிதையார் எடுத்து வழங்கிய கருத்துக்களையெல்லாம் அரவிந்தர் முழுமனதோடு ஏற்றுக்கொண்டார். அதன் விளைவு அவருடைய வாழ்வின்மூலம் வெளியாயிற்று.

சென்னையிலிருந்தும் சகோதரி நிவேதிதைக்கு அழைப்பு வந்திருந்தது. அவர் அங்கே புறப்பட்டுப் போனார். விவேகானந்த சுவாமிகளின் பக்தர்கள் பலர் சென்னையில் இருந்தனர். சுவாமிகளின் பிரதிநிதியாகவே சகோதரியாரை அவர்கள் கருதிவந்

தனர். அம்மையாரிடம் அவர்கள் பயபக்தி மிகக் காட்டி வந்தார்கள். சென்னையின் பல பகுதிகளில் அவருடைய சொற்பொழிவுகள் நிகழ்வனவாயின. அவற்றில் அடங்கியிருந்த கருத்தாவது: "இந்தியா வின் ஒற்றுமை யாண்டும் நிலைத்திருக்கிறது. அந்த ஒற்றுமை இன்றைக்கு இல்லையெனின் என்றைக்கும் அதை உண்டுபண்ண யாருக்கும் இயலாது. ஓர் உடலை எப்படி இரண்டு கூறுகளாகப் பிரிக்க முடியாதோ அப்படி இந்தியாவை வடநாடு என்றும் தென்னாடு என்றும் தொடர்பற்ற இரண்டு பகுதி களாகப் பிரிக்கமுடியாது. நாம் பலவீனர்கள், நாம் பிளவுபட்டுவிட்டோம், நாம் தௌர்பாக்கியசாலி கள், நாம் ஆதரவு அற்றவர்கள் ஆய்விட்டோம்—இப் படியெல்லாம் பேசுபவர்கள் உண்டு. நம்மைக் கீழ் மைப்படுத்தும் இத்தகைய கூற்றுக்களைக் காதில் வாங்கிக்கொள்ளலாகாது. புத்துயிர் என்பதும் வலிவுபடைத்த வாழ்வு என்பதும் ஒன்றேயாம்."

சென்னையிலிருந்து சகோதரி நிவேதிதை சேலத் துக்குப் போனார். அங்கே தர்மபுரியில் விவேகானந்த சங்கம் ஒன்றைத் துவக்கிவைத்தார். காங்கிரஸ் அங் கத்தினர்கள் பலரை அவர் சேலத்தில் நேரில் சந்தித் துப் பேசினார். பின்பு அங்கிருந்து அவர் திருச்சிராப் பள்ளிக்குச் சென்றார். திராவிட நாட்டின் பண்புக்கு அது உறையூர் என்பதை அவர் ஆங்கு நேரில் கண் டார். தென்னிந்திய மாதர்களுடைய நடையுடை பாவனைகளை நேரில் கண்டறியும் வாய்ப்பு அவருக்கு ஆங்குக் கிட்டியது. பின்பு அவர் சிதம்பரத்திற்குச்

சென்றிருந்தார். அங்கே கோயிலை ஆராய்ச்சி பண்ணுதலிலேயே அவர் தம் கவனத்தைச் செலுத்தினர். இடைக்காலத்தில் ஐரோப்பாவில் கட்டியிருந்த கிறிஸ்தவ தேவாலயங்களெல்லாம் சீரிய கருத்துக்களுக்கு விளக்கங்கள் என்றும் நிவேதிதையார் அறிந்திருந்தார். ஆனல் சி த ம் ப ர ம் என்னும் கோயிலோ மெய்ப்பொருளுக்கு முடிவான தத்துவ விளக்கம் என்பதை அவர் அறிந்துகொண்டார். தகுந்தவர்களுடைய உதவியை ஏற்றுக்கொண்டு கோயிலின் ஒவ்வொரு பகுதியையும் அவர் துருவித்துருவி ஆராய்ந்தார். மற்றுமோர் உண்மை தெற்றெனச் சிதம்பரத்தில் அவருடைய மனதுக்குத் தெளிவாயிற்று. வட இந்தியாவில் உரு எடுக்கும் சமய இயக்கங்கள் தென்னிந்தியாவில் அங்கீகாரம் பெற்றுன பிறகே நிரந்தரமான மதிப்பை நாடு முழுதிலும் பெறுகின்றன. அதே பாங்கில் தென்னிந்தியாவில் உருவெடுக்கும் சமய இயக்கங்கள் வட இந்தியாவில் இடம் பெற்ற பிறகே சாசுவதமான அந்தஸ்தைப் பெறுகின்றன. இந்தியா முழுதும் ஒரு நாடு என்பதற்கு இதுவும் ஓர் அத்தாட்சியாகிறது. சுவாமி விவேகானந்தரைத் தென்னிந்தியா அங்கீகரிக்காது புறக்கணித்திருக்குமாகில் ஸ்ரீராமகிருஷ்ண மடத்து இயக்கமே இந்தியா முழுதுக்கும் உரியது ஆயிருக்காது. இந்தியா முழுதுக்கும் பொதுவான அந்த இயக்கம் இன்றைக்கு உலகம் முழுதுக்கும் பொதுவானதாயிருக்கிறது.

---

11. கல்கத்தாவில் தேசியத் தொண்டு

எளிய வாழ்வு

இந்தியாவின் பல பகுதிகளைச் சுற்றிப் பார்த்தான பிறகு சகோதரி நிவேதிதை திரும்பவும் கல்கத்தாவுக்கு வந்து தமது பழைய வீட்டில் வசித்திருக்கத் தொடங்கினர். அதன் அமைப்பும் அதில் அடங்கி இருந்த தட்டுமுட்டுச் சாமான்களும் ஓர் ஏழை இந்திய மாதுவுக்குப் பொருத்தமானவைகளேயொழிய, மேல்நாட்டு வாழ்க்கை வாழும் பரம ஏழைக்கும் சிறிதும் ஒவ்வாதனவாம். வீட்டின் உட்புறமும் வெளிப்புறமும் களிமண்ணுல் பூசப்பட்டிருந்தது. ஜன்னல்களுக்கு மூங்கில் தட்டிகளே கதவுகளாய் அமைந்திருந்தன. அவைகளை மூடிவிட்டால் வீட்டுக்குள் வெளிச்சம் வரமுடியாது. நவீனமுறையில் அமைந்துள்ள கண்ணுடி ஜன்னல் கிடையாது. வீட்டுக்குள் தரையும் களிமண்ணில் அமைந்திருந்தது. அதை நாள் தோறும் சாணத்தால் மெழுகிவிடுவதுண்டு. வீட்டுக்குள் இரண்டு நாற்காலிகள், ஒரு சிறு மேசை, ஒரு கட்டில்—ஆகிய இவைகளைத் தவிர வேறு தட்டுமுட்டுச் சாமான் கிடையாது. வந்தவர்கள் உட்காருதற்குத் தரையின்மீது கோரைப்பாய் விரிக்கப்பட்டிருக்கும். மனம் கொண்டது மாளிகை என்பதற்கு இச்சிறு வீடு சிறந்ததோர் எடுத்துக்காட்டு ஆயிற்று. அதில் சகோதரி நிவேதிதை நடாத்திய நிகழ்ச்சிகள் இந்தியா முழுதுக்கும் புத்துயிர் வழங்குவனவாயின.

இந்தியாவின் பல மாகாணங்களிலிருந்த தேசாபிமானிகளுக்குக் கடிதங்கள் எழுதியது அச்சிறு

வீட்டினின்றேயாம்.உலகில் பலப்பல பிரதேசங்களில் இருந்து சகோதரியாருக்கு அறிஞர்கள் எழுதிய கடிதங்கள் அவரை நாடி அச்சிறு வீட்டிற்கு வரும். அவரைக் காண்பதற்குப் பல பிரமுகர்கள் அவ்வீடு தேடி வருவார்கள்.அறிஞர்களும் தேசாபிமானிகளும் நிவேதிதையாரோடு சம்பாஷணையில் ஆழ்ந்து மூழ்கி விடுவார்கள். நேரம் போவது அப்பொழுது அவர்களுக்குத் தெரியாது. கொள்கையிலும் வினையாற்றும் வல்லமையிலும் புதுப்பிக்கப்பட்டவர்களாக அப்பெருமக்கள் அச்சிறு வீட்டினின்று வெளியேகுவார்கள்.

ஞாயிறு சிற்றுண்டிச் சங்கம் என்பது ஒன்று நிறுவப்பட்டது. அந்தச் சங்கத்துக்கு அலுவலகமாக அமைந்தது சகோதரி நிவேதிதையின் சிறு வீடு. முறை வைத்துக்கொண்டு கல்லூரி மாணாக்கர்களில் சிலரும், முதியோர்களில் இரண்டொருவரும் ஞாயிற்றுக்கிழமைதோறும் அதிகாலையில் அலுவலகத்துக்கு வந்து சேர்வார்கள். சிறிது நேரத்துக்குள் அவர்களுக்குச் சிற்றுண்டி வழங்கப்படும். முதல் அலுவல் அது. அந்தச் சங்கத்தின் பெயருக்கு ஒப்ப அந்த வேலைத் திட்டம் நிறைவேறிவிடும்.

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்

என்பது வேதவாக்கு. நிவேதிதையார் இக்கோட்பாட்டைச் சிறிது மாற்றியமைத்தார். அவருடைய திட்டத்தின்படி முதலில் வயிற்றுக்கு வேண்டியது வழங்கப்படும். பிறகு செவிக்குணவு விதவிதமான

பாங்குகளில் அளிக்கப்படும். உடற்பயிற்சிக் குழு ஒன்றை எப்படி நடாத்துவது, கிராமங்களில் சுகாதார சேவை எப்படிச் செய்வது, கத்தி, சிலம்பம் முதலியவைகளை வீசிப்பழகுதல், குடிசைத்தொழில், கிராமத்தாருக்குப் பொது அறிவு புகட்டுதல், பகவத் கீதையின் மூலம் ஆண்மையை மக்களுக்கிடையில் புகட்டுதல், பலதரப்பட்ட சங்கங்கள் ஒன்ருெடொன்று தொடர்புகொள்ளுதல்—ஆகிய இத்தனை விஷயங்களைப் பற்றிப் பேச்சு நடக்கும். பிறகு அவைகள் உடனே நடைமுறையில் வருவதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும். ஸ்ரீ அரவிந்தகோஷ் அவர்கள் இப்பொழுது பரோடாவினின்று கல்கத்தாவுக்கு வந்துவிட்டார். சகோதரி நிவேதிதையின் கருத்துக்களையெல்லாம் செயலுக்குக் கொண்டுவர அவர் தீவிரமான முயற்சி எடுத்துக்கொண்டார். அவருடைய வேலைத்திட்டத்தின்படி இளைஞர்கள் வெவ்வேறு ஊர்களுக்குச் சென்று வெவ்வேறு பெயர்கள் தாங்கிய சங்கங்களையும் தேசிய இயக்கங்களையும் துவக்கினர்கள்.

தம்மை வந்து அணுகிய மாணக்கர்களுக்கு சகோதரி நிவேதிதை மேலும் புகட்டியதாவது: "இந்தியாவை உள்ளபடி அறிந்துகொள்கிறவர்கள் மிகச் சிலரே. நீங்கள் ஆழ்ந்து எண்ணுகிற எண்ணங்களே உங்களுடைய வாழ்க்கையைப் பற்றிய கனவுகள் ஆகின்றன. தேசாபிமானம் என்னும் எண்ணம் புத்தகங்களைப் படித்து வருவதல்ல. ஒருவனுடைய சொரூபம் முழுதையும் பிடித்து வாட்டுகிற உணர்ச்

சியே தேசாபிமானம் என அழைக்கப்படுகிறது. ஒரு மனிதனுடைய ரத்தம், எலும்பு, மஜ்ஜை முழுதும் அந்த எண்ணத்தில் ஊறிவிடுகிறது. அவன் சுவாசிக்கிற காற்று அந்த எண்ணமயமாய் விடுகிறது. அவன் காதில் விழும் ஓசை ஒலிகளெல்லாம் உள்ளத்தினுள்ளே உள்ள உணர்வுமயமாய் விடுகின்றன. அத்தகைய உணர்வு படைத்த மனிதன் வாழ்க்கையில் உயர்ந்த காரியங்களைச் சாதிக்கமுடியும். அவனுடைய கனவே பிறகு நனவாக வடிவெடுக்கும். தேசத்தைப்பற்றி அப்படி உணர்பவன் தேசாபிமானி."
இத்தகைய உணர்வுடன் கூடிய இளைஞர்கள் ஆங்காங்கு விவேகானந்த சங்கங்கள் நிறுவவேண்டும் என்பது நிவேதிதையின் வேலைத்திட்டம்.

பெண் பாடசாலை

கல்கத்தாவில் பாக்பஜார் என்னும் பகுதியில் நிவேதிதை வீதி என்பது ஒன்று உண்டு. சகோதரி நிவேதிதையின் ஞாபகார்த்தமாக அவ்வீதிக்கு அப்பெயரிடப்பட்டது. அவ்வீதியில் நிவேதிதை பெண் பாடசாலை ஒன்று இன்றைக்குப் பிரசித்தி பெற்றிருக்கிறது. அதற்கென்று அமைந்துள்ள பெரிய கட்டடம் ஒரு தேவாலயம் போன்று அழகு வாய்ந்தது. அப்பள்ளிக்கூடத்தின் நடைமுறையில் சிறப்புக்கள் சில அமைந்திருக்கின்றன. பண்புடைய பெண் கல்விக்கு ஒருவிதத்தில் அது ஓர் எடுத்துக்காட்டு ஆகும். கல்கத்தாவில் பார்ப்பதற்குரிய கல்வி ஸ்தாபனங்களில் அது ஒன்று.

ஆரம்பத்தில் அக்கல்வி ஸ்தாபனம் எத்தனைவித மான இடைஞ்சல்களுக்கிடையில்உரு எடுத்தது என் பதை இக்காலத்திய மாந்தர் அறியமாட்டார்கள். அத் தகைய பள்ளிக்கூடம் ஒன்றை நிறுவுவது அவசியமா என்பதை அறிந்துகொள்ளுதற்கு சகோதரி நிவே திதை 1898ஆம்ஆண்டு நவம்பர் மாதத்தில் மிக எளிய பாங்கில் அதைத் துவக்கிவைத்தார். 1899ஆம்ஆண்டு மே மாதம் வரையில் அது ஒருவாறு ஒழுங்காக நடாத் தப்பட்டது. பிறகு சகோதரி நிவேதிதை ஐரோப்பா, அமெரிக்கா முதலிய நாடுகளுக்குப் பொருள்திரட்டப் பிரயாணம் போக வேண்டியிருந்ததால் தாற்காலிக மாக அப்பள்ளிக்கூடம் மூடப்பட்டது. 1903ஆம் ஆண்டு பிற்பகுதியில் பள்ளிக்கூடம் மீண்டும்திறக்கப் பட்டது. அதை ஒரு புரட்சிகரமான நிகழ்ச்சி என்று சொல்லவேண்டும். ஏனென்றால் வைதிக வாழ்வு வாழ்ந்துவந்த மேன்மக்கள் கொள்கைக்கு அது முற் றிலும் முரண்பட்டது. பெண்பாலர் புத்தகங்களைத் தொட்டு வாசிக்கலாகாது என்பது அவர்களுடைய கருத்து. வெளிநாட்டவர்களோடு மாதர்கள் இணக் கம் வைக்கலாகாது என்பது மற்றொரு மௌடிகம். இத்தகைய சூழ்நிலையில் குலமக்களுக்குரிய பெண் பாடசாலையொன்று நடத்துதற்குச் சாமர்த்தியமும், சமயோசித புத்தியும், நிர்வாகத் திறமையும் ஏராள மாக வேண்டியிருந்தது.

சகோதரி நிவேதிதையின் பள்ளிக்கூடத்துக்குப் பெண்குழந்தைகளை அனுப்பிவைக்கப் பெற்றோர்கள் சம்மதம் கொடுத்தது அதைத் துவக்கியவர்க்கு முதல்

வெற்றியாகும். மேல் ஜாதியார், கீழ்ஜாதியார் ஆகிய எல்லா வகுப்பினர் குழந்தைகளும் அங்கு வருவதற்குத் தடையேற்படாதிருந்தது இரண்டாவது வெற்றியாகும். எடுத்த எடுப்பில் பாடங்களைக் கற்பிக்க சகோதரி நிவேதிதை ஆரம்பிக்கவில்லை. மாதத்தில் மூன்று அல்லது நான்கு தடவை நாடகங்கள் நடிக்கப்படும். இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்களிலிருந்து நாடகத்துக்கு வேண்டிய பகுதிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. மற்ற தினங்களில் கதாகாலக்ஷேபம் நிகழும். தாய்மார்களும் பெண்குழந்தைகளும் மட்டும் அவைகளைப் பார்க்க வரலாம். ஆடவர்களுக்கு ஆங்கு இடமில்லை. ஐதிகமாக வந்துள்ள ஆசாரத்தின்படி வாழ்ந்திருந்தவர்களுக்கு அந்நிகழ்ச்சிகள் முற்றும் உடன்பாடுடையவைகள் ஆயின. அவைகளுக்கு அவர்களும் முழு ஆதரவுகொடுத்தார்கள். சகோதரி நிவேதிதை புறநாட்டுப் பெண்ணாயிருப்பதைக் குறித்தும் அவர்களுக்குத் தடையொன்றுமில்லை. ஏனென்றால் வாழ்க்கை முறையில் அவ்வம்மையார் முற்றிலும் தங்கள் மயமாய்விட்டார். அவருடன் கொலாப் அம்மைபோன்ற மேலோர் நெருங்கிப் பழகி வந்ததே சீரிய ஒழுங்குப்பாட்டுக்கு நல்ல எடுத்துக்காட்டு ஆயிற்று. அதற்கெல்லாம் மேலாக அன்னை சாரதா தேவியார் சகோதரி நிவேதிதையைத் தம் சொந்தப் புதல்வியாக ஏற்றுக்கொண்டார். பிறகு விபரீதம் வாய்ந்த வெளி நாட்டவர் என்ற பிரச்னையை எதற்காகக் கிளப்பவேண்டும்?

சிலவாரங்கள் இங்ஙனம் கழிந்தன. இனிச் சிறிது சிறிதாகப் பள்ளிக்கூடத்து அலுவல்களைத் துவக்கியாகவேண்டும். சிறுமிகளுக்கு கைத்தையல் வேலை துவங்கியது. கைக்கு வேலை கொடுத்தான பிறகு நாவுக்கு வேலை கொடுக்கவேண்டும். அதுவும் ஆரம்பமாயிற்று. ராமப்பிரசாதர், சண்டிதாசர் போன்றவர்கள்பாடிய அருள்பாடல்களை இன்னிசையுடன் சிறுமிகள் ஓத ஆரம்பித்தனர். இங்ஙனம் உடலும் உள்ளமும் ஒத்துழைத்தன. அவர்கள் உள்ளத்தில் குடிகொண்டிருந்த அச்சம் சிறிது சிறிதாக அகன்று போயிற்று. முகமலர்ச்சி தானாக உரு எடுத்தது. அவர்களுடைய தூய நகைப்பில் தெய்விகம் திகழ்ந்தது. பாடல்களைப் பாடுவதன் மூலம் அவர்களுடைய ஞாபக சக்தி உறுதி பெற்றது. பள்ளிக்கூடத்தில் பாடிய பாட்டுக்களை அவர்கள் வீட்டிலும் சென்று பாடினர். முதியோர் கல்வி அங்ஙனம் சிறுமிகள் வாயிலாகத் துவங்கியது. சகோதரி நிவேதிதைக்கு இப்பொழுது தமது குருநாதர் சுவாமி விவேகானந்தர் எடுத்துரைத்த சீரிய கருத்து ஒன்று ஞாபகத்துக்கு வந்தது. "அச்சமூட்டி அடக்கி வைத்திருப்பதனால் நமது தாய்மார்கள் இன்றைக்குள்ள நரிகள் போன்று ஆய்விட்டனர். சிங்கங்கள்போன்று அவர்கள் பராக்கிரமம் படைத்து எழுந்திருக்கும் காலம் ஒன்று விரைவில் வரும்." இக்கருத்துக்கு ஒப்பத் தாம் தமது மாணவிகளைப் பயிற்றுவித்து வந்ததைக் குறித்து சகோதரியார் பெருமகிழ்வடையலானார்.

பள்ளிக்கூடத்தைப் பற்றிய தமது முதல் அறிக்கையில் சகோதரி நிவேதிதை தெரிவித்திருந்ததாவது: "இப்பள்ளிக்கூடத்துக்கு வரும் குழந்தைகளின் தரம் மிகத் திருப்திகரமாயிருக்கிறது. பயங்கரமான ஒரே ஒரு குறைபாடு இருக்கிறது. அதாவது சிறுமிகள் வேளைக்குப் பள்ளிக்கூடத்துக்கு வருவதில்லை. குழந்தைகள் நல்லவர்கள் எனினும் புதிதாகப் பள்ளிக்கூடத்துக்கு வரும்பொழுது கீழ்ப்படிதலைப்பற்றி அவர்கள் ஒன்றும் அறியாதவர்களாயிருக்கிறார்கள். வீட்டில் யாருக்குமே அதைப்பற்றி ஒன்றும் தெரியாது என்பது வெளியாகிறது. Discipline simply does not exist. கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடத்தல் என்பது அவர்களிடத்து இல்லவே இல்லை. இந்த இடைஞ்சலைப் போக்குதற்கென்றே பாடங்கள் சில முறைவகுத்து வைக்கப்பட்டிருந்தன. குச்சிவைத்தல், கவாத்து எடுத்தல் (drilling), வடிவங்களைப் பார்த்து அவைமாதிரி உண்டுபண்ணுதல், சித்திரம் வரைதல், தையல் வேலை, பாய் முடைதல், ஓவியம் தீட்டுதல் ஆகிய பாடங்கள் புகட்டப்பட்டன. அதிலிருந்து ஒழுங்குப்பாடு அவர்களுக்கு விரைவில் வர ஆரம்பித்தது. கீழ்ப்படிதலையும், ஒழுங்குப்பாட்டையும் அவர்கள் அதிவிரைவில் கற்றுக்கொண்டனர். ஆராய்ந்து பார்க்கும் பழக்கம் அவர்களிடத்துச் சிறிதும் கிடையாது. ஒரு விசித்திரமான பூச்சியையோ, அழகிய சிறகையோ, எழில்நிறைந்த புஷ்பத்தையோ இக்குழந்தைகளில் ஒருத்தியாவது ஒரு தடவையாவது என்னிடம் கொண்டுவந்தது கிடையாது."

12. புத்த கயை வழக்கு

அன்னிய அரசாங்கத்துக்கு எதிர்ப்பு

ஐந்து அங்கத்தினர்களைக் கொண்ட அரசியல் இயக்கக்குழு ஒன்றை ஸ்ரீ அரவிந்தகோஷ் வங்காளத்தில் 1905ஆம் ஆண்டில் நிறுவினார். அதில் சகோதரி நிவேதிதையும் ஓர் இடம் பெற்றிருந்தார். இந்தியாவின் சுதந்திரத்துக்காகவென்று பாடுபடுதற்கு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தொண்டர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் தங்களைப்பற்றி விளம்பரம் ஒன்றும் செய்யலாகாது. அமைதியாக அவரவர்க்கு இட்ட வேலையை அத்தொண்டர்கள் செய்யவேண்டியது. ஒரு தொண்டனுடைய செயலைப் பற்றி மற்றவன் ஒன்றும் தெரிந்துகொள்ளலாகாது. இப்புரட்சிச் சங்கங்களைப்பற்றிப் பொதுமக்கள் ஒன்றும் அறிந்திலர். பொதுமக்கள் அறிந்துவிட்டால் அரசாங்கத்தார் அறிந்துகொள்வார்கள். அரசாங்கத்தார் அறிந்துகொண்டால் பிறகு அடக்குமுறை அமுலுக்கு வந்துவிடும். அதன் விளைவாக இயக்கத்தின் வலிவு குன்றிப்போம். அதற்கு இடம் தராது இரகசியமாக அந்தப் புரட்சிச் சங்கத்தை வலிவுபடுத்த அவர்கள் வேலை செய்து வந்தனர்.

ஆனால் சகோதரி நிவேதிதைக்கு இட்டிருந்த அலுவல் இரகசியமானதன்று. வெளிப்படையாக அவர் ஓர் இயக்கத்தை உண்டுபண்ண வேண்டியதாயிருந்தது. பிரிட்டிஷ் ஆட்சியின் கொடுமைகளைப் பற்றி அவர் வெளிப்படையாகப் பத்திரிகைகளில் எழுதவேண்டியிருந்தது. கல்வித்துறையிலும் ஆட்சி

முறையிலும் இந்தியர்களுடைய முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டைகள் பல அரசாங்கத்தால் போடப் பட்டன. அத்தகைய அநீதிகளையெல்லாம் சகோதரி நிவேதிதை பத்திரிகைகளில் தெளிவுபட விளக்கிக் காட்டி ஆட்சிமுறை நேர்மையாக இருக்க வேண்டு மென்று வற்புறுத்துவார். இந்தியர்கள் ஒழுக்கம் கெட்டவர்களென்றும் நம்பத்தகாதவர்களென்றும் ஒரு தடவை ராஜப்பிரதிநிதி கர்சன் பிரபு (Lord Curzon) சட்டசபையில் தாக்கிப் பேசினர். அவர் விஷயம் தெரியாது பிதற்றுகிருர் என்று கர்சன் பிர புவை நேரடியாகத் தாக்கி சகோதரி நிவேதிதையார் சில கட்டுரைகளை வெளியிட்டார். அரசியல்வாதி களுடைய பேச்சுக்களெல்லாம் வெறும் பித்தலாட்டம் என்றும், சிறுபிள்ளைத்தனம் வாய்ந்தவைகளென்றும் நிவேதிதையார் நவிலுவதுண்டு. பின்பு அரசியல் பித்தலாட்டங்களுக்கு மறுப்புக் கூறுவதும் மிக எளிது என்று அவர் எடுத்துக் காட்டினுர். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒரு விஷயத்தை அவர் வற் புறுத்திவந்தார். அதாவது இந்தியா எப்பொழுதும் இந்தியாவாகவே இருக்கவேண்டும். அது பிரிட்டிஷ் இந்தியா ஆய்விடலாகாது. தன் அலுவல்களை இந் தியா தானே நிர்வகிக்கவேண்டும். இந்தியா ஆங்கி லேயர்களுக்கு அடிமைப்பட்டிருப்பதைப் பார்த்துக் கொண்டு நான் வாளாவிருக்க மாட்டேன். அதை எதிர்த்துப் போராடுவது என் கடமை.


முதல் வெற்றி

புத்த கயையைப் பற்றிய வழக்கு ஒன்று இப் பொழுது இந்தியத் தேசாபிமானிகளால் கிளப்பப்

பட்டது. புத்தர் பெம்மான் போதி சத்வம் அடைந்த இடம் புத்த கயை. அது ஒரு சரித்திர பூர்வமான இடம். இந்திய மக்கள் அனைவரும் அதை ஒரு புனித மான இடமாகப் பாராட்டி வருவது முற்றிலும் பொருத்தமானது. அந்த ஸ்தலத்தின் நிர்வாகம் ஒரு மடாதிபதியின் பொறுப்பில் நெடுங்காலம் இருந்து வந்தது. ஆனால் அவருடைய ஆதிக்கத்தின் பெரும்பகுதியைக் குறைத்துவிட அரசாங்கத்தார் எண்ணங்கொண்டனர்; அதற்கேற்ற நடவடிக்கையை யும் அவர்கள் எடுக்கலாயினர். ஆனால் இந்தியத் தேசாபிமானிகளிடமிருந்து இதற்கு மறுப்பு மிக வந்தது. சகோதரி நிவேதிதை இதைக் குறித்துச் சில பத்திரிகைகளில் தலையங்கங்கள் எழுதினர். அக் கட்டுரைகள் பொதுமக்களுக்கிடையில் பெருங் கிளர்ச்சியை உண்டுபண்ணின. இந்த இயக்கத்தை மிகத் தீவிரமாக நடாத்தியவர் சகோதரி நிவேதிதை. புத்த கயையைக் குறித்து அரசாங்கத்தார் கொண்டி ருந்த எண்ணத்தை மாற்றிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் வந்தது. பழையபடி புத்தகயை மடாதி பதியிடத்திலேயே அதன் நிர்வாகம் இருந்துவர வேண்டியது என்று அரசாங்கத்தார் அறிக்கை ஒன்று வெளியிட்டனர். கிளர்ச்சியை உண்டு பண்ணியவர்களுக்கு வெற்றி கிடைத்தது. அதன் சிறப்பு முற்றிலும் சகோதரி நிவேதிதைக்கு உரிய தாயிற்று. தேசமக்கள் பலர் அவருக்கு ஆசியும் பாராட்டுக் கடிதங்களும் அனுப்பினர்.

வஜ்ராயுதம்

அறத்துறையில் சகோதரி நிவேதிதை எடுத்துக்கொண்ட பெரு முயற்சிக்காக புத்த கயை



மடாதிபதி அவரை ஆசீர்வதித்து ஒரு கடிதம் எழுதியிருந்தார். அத்துடன் அவருக்கு வெகுமதியாக **வஜ்ராயுதத்தின் சின்னம்** ஒன்றை அனுப்பி வைத்திருந்தார். அதன் உட்கருத்தை முற்றிலும் அறிந்துகொண்ட சகோதரியார் தம்மைப் பாக்கியவதி என்றே கருதிவந்தார். அக்கருத்தை மற்றவர்களும் அறிந்துகொள்ளுதல் அவசியமாகிறது. ஒருவர் மற்ருெருவருக்குத் திருநீறு தருகின்றபொழுது 'நீ சிவசொரூபம் ஆகக்கடவாய்' என்னும் கருத்து அதில் அடங்கியிருக்கிறது. அங்ஙனம் வஜ்ராயுதத்தின் சின்னத்தை மடாதிபதி வெகுமதியாக அனுப்பிய பொழுது சகோதரி நிவேதிதை தம்போக்கில் ஒரு வஜ்ராயுதம் ஆகவேண்டும் என்ற கருத்து அதில் அடங்கியிருந்தது. புராண ஐதிகத்துக்கு ஒத்ததாயிருந்த வஜ்ராயுதத்தைத் தேச சரித்திர வரலாற்றுக்கு ஒத்ததாய்த் திருத்தியமைத்தது சகோதரி நிவேதிதையின் செயற்கரிய செயலாகும்.

ததீசி என்ற பெயர் படைத்திருந்த மஹரிஷி ஒருவர் இருந்தார். அவர் நைஷ்டிக பிரம்மச்சாரி. அதாவது ஆயுள்முழுதிலும்அவர்ஒருதூய பிரம்மச்சாரியாகவே இருந்துவிட்டார். விவாகம் செய்துகொண்டு

இல்வாழ்க்கை நடாத்துதற்கு அவர்ஒருப்படவில்லை. மனம்,மொழி, மெய் என்ற முக்கரணங்களையும் அவர் கடவுள் வழிபாட்டுக்கென்றே ஒப்படைத்திருந்தார். தவத்தின் உச்சநிலை அவரிடத்துத் திகழ்வதாயிற்று. பிரம்ம ஞானத்தைப் பரிபூரணமாக அடையப்பெற்ற வர் அவர். புனிதத்துக்கு உறைவிடமாகிய அவரிடம் தேவேந்திரன் வந்தான். தனக்கு அந்த ததீசி மஹரிஷி யிடமிருந்து பெறவேண்டியது ஒன்று இருக்கிற தென்று அவன் விண்ணப்பித்தான். தம்மிடமிருக்கிற எதைக் கேட்டாலும் கொடுத்துவிடுவதாக ரிஷிபுங்க வரும் வாக்களித்துவிட்டார். பிறகு விண்ணவர் கோன் வெளியிடுவானாயினன்:—ஓயாத தொல்லை களை அல்லும் பகலும் கிளப்பிக்கொண்டிருந்த அரக் கர்களை அழிப்பதற்கு வஜ்ராயுதம் ஒன்றே உதவும். வேறு எதுவும் அவர்களை வேர் அறுக்க உதவாது. வஜ்ராயுதத்தை அமைப்பதற்கு ததீசி போன்ற தூய தவசியின் எலும்பு தேவையாயிருந்தது. இக்கூற் றைக் கேட்ட முனிவரும் மனமகிழ்ச்சி அடைந்தார். தமது உடல் எலும்பு ஓர் உயர்ந்த காரியத்துக்கு உதவப்போவதே அம்மகிழ்ச்சிக்குக் காரணமாயிற்று. உடனே பிரம்ம நிஷ்டையில் உட்கார்ந்து உடலை உகுத்து விட்டார். தேவராஜனும் தகுதிவாய்ந்த அவருடைய எலும்பைக் கொண்டு வஜ்ராயுதம் அமைத்து அரக்கர்களை ஒழித்தான். இது புராண வரலாறு.

இதை இந்துதேச சரித்திர வரலாறாக மாற்றி அமைப்பதற்கு சகோதரி நிவேதிதையார் வழிகாட்

டிக்கொடுத்துள்ளார். அரக்கர்களுடைய இயல்பு ஆகிய கேடுகள் சமுதாயத்தில் ஓயாது தோன்றிக் கொண்டே இருக்கும். ததீசி போன்ற நல்லார்கள் தங்கள் ஜீவிதத்தைச் சமுதாய நலத்தின் பொருட்டு ஒப்படைத்துக்கொண்டே இருந்தால் கேடுகளைப் பெரிதும் அகற்றிவிடலாம். தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் நன்மக்கள் ஜீவிதமே தேச சரித்திரம் எனப் பெயர் பெறக்கூடியதாகிறது. ததீசி மஹரிஷி போன்றவர்களின் எண்ணிக்கை இந்தியாவில் அதிகரிக்கவேண்டும். அத்தகைய தியாக மூர்த்தி ஒவ்வொருவனும் ஒவ்வொரு வஜ்ராயுதத்துக்கு ஒப்பாகிறான். எண்ணிறந்த வஜ்ராயுதங்கள் யாண்டும் நம் நாட்டுக்குத் தேவை. இது சகோதரி நிவேதிதையார் விடுத்த வேண்டுகோள். நாட்டின் யுவர்களும் யுவதிகளும் இதற்குச் செவிசாய்த்து இந்த இலட்சியத்தைப் பின்பற்றக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

சுதேசி இயக்கம்

பொருளாதாரத்துறையில் இந்தியா புற நாடுகளுக்கு அடிமைப்பட்டிருந்ததை சகோதரி நிவேதிதை நன்கு உணரலானார். நாட்டிலுள்ள மூலப் பொருள்களும் விளைபொருள்களும் குறைந்த விலைக்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. உண்டுபண்ணப்பட்ட பொருள்களாக (Manufactured articles) வெளிநாடுகளிலிருந்து அவைகள் இறக்குமதி பண்ணப்பட்டன. உதாரணமாக இந்தியாவின் பஞ்சு இங்கிலாந்துக்கு எடுத்துச் செல்லப்

பட்டது. அங்கிருந்து விலையுயர்ந்த துணி வகைகளாக அது இந்தியாவுக்குத் திரும்பி வந்தது. இதனால் இந்தியாவின் செல்வம் கோடிக்கணக்கில் கறந்தெடுக்கப்பட்டது. வறுமைநோய் எங்கும் பரவுவதாயிற்று. இதைத் தடுப்பதற்கு நிவேதிதையார் பகீரதப் பிரயத்தனம் எடுத்துக்கொண்டார். நாளடைவில் சுதேசி இயக்கம் என்னும் பெயர் பெற்ற பொருளாதாரப் புனருத்தாரணத்தை இவர் துவக்கிவைத்தார். பலதரப்பட்ட தொழிற்சாலைகள் வங்காளத்தில் அவருடைய தூண்டுதலால் ஆரம்பிக்கப்பட்டன. படிப்படியாக அவைகள் விருத்தியடைந்துவந்தன. நூல் நூற்கின்றவர்கள், நெசவுத் தொழில் செய்கின்றவர்கள், துணிகளை விற்கின்றவர்கள் ஆகியவர்களுக்கிடையில் ஒழுங்கான இணக்கத்தை அவர் உண்டுபண்ணி வைத்தார். கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கும் அவர் வழிகாட்டிக் கொடுத்தார். உழைப்பும் கடவுள் வழிபாடும் நன்கு இணைக்கப் பெற்றிருக்கவேண்டும் என்பது அவருடைய கோட்பாடு.

நன்கு இயற்றப்படும் பரதர்மத்தை விட குணமில்லாத் தன் தர்மம் மேலானது. ஸ்வதர்மத்தில் இறப்பது மேல். பிறர் தர்மம் பயம் தருவதாம்—இது பகவத்கீதை புகட்டியுள்ள ஒரு கோட்பாடு ஆகும். இதை சகோதரி நிவேதிதை சுதேசி இயக்கத்துக்குப் பயன்படுத்திக் கொண்டார். பொருளாதாரத் துறையில் அரைகுறையாகவெனினும் அவரவ

ருக்குத் தேவையாயிருக்கும் பொருள்களை அவரவரே தேடிக்கொள்ளுதல் மேல். பிறரால் உண்டுபண்ணப் பட்ட பொருள் எவ்வளவு மேலானதெனினும் அது நமக்கு ஆக்கத்தைக் கொடுக்காது; அழிவையே அது உண்டுபண்ணிவிடும். தாங்கள் உண்டுபண்ணும் பொருள்களைக் கொண்டே அவர்கள் திருப்தியடைந் திருக்க வேண்டுமென்று தேசாபிமானிகளுக்கு அவர் சுதேச உணர்வை மனதில் ஆழப்பதியுமாறு ஊட்டி வந்தார்.

குடிசைத் தொழில்களைப் புதுப்பிப்பதில் மட்டும் சகோதரி நிவேதிதை தம் கருத்தைச் செலுத்த வில்லை. நவீனமுறையில் புதிய தொழில்களும் வடி வெடுக்கவேண்டும் என்பது அவருடைய கருத்து. இளைஞர்கள் பலரை அவர் இங்கிலாந்துக்கும், அமெரிக்காவுக்கும், ஜப்பானுக்கும் அனுப்பி வைத் தார். ஆங்கு அவர்கள் ஆட்டு ரோமத்தால் ஆகக் கூடிய விதவிதமான துணிகள் தயார்படுத்துதல், கண்ணாடிச் சாமான்கள் செய்வது, விதவிதமான உலோகங்களைக் கொண்டு பொருள்கள் செய்வது ஆகிய பயிற்சிகளைப் பெற்றனர். அந்த மாணாக்கர் களுக்கு வேண்டியவாறு துணைபுரியும்படி இங்கிலாந் திலும் அமெரிக்காவிலும் இருந்த தமது நண்பர் களுக்கு அவர் கடிதங்கள் எழுதி ஏற்பாடுகள் செய்து வைத்தார். பயிற்சிபெற்று வந்தவர்களைக் கொண்டு புதிய தொழில்களும் துவக்கப்பட்டன.

13. நானாவித அலுவல்கள்

உணர்வற்ற மாந்தர்

சில ஆண்டுகளுக்கு முன்பு சகோதரி நிவேதிதை சேலத்துக்குப்போயிருந்தபொழுது நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றை ஈண்டு உரைப்பது பொருந்தும். பொதுக் கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆங்கிலம் கற்றிருந்தவர்களில் பெரும்பாலோர்சகோதரியாரின் சொற்பொழிவைக் கேட்க வந்திருந்தனர். தேசாபிமானத்தில் ஊறியிருந்த பிரமுகர்கள் சிலரே அக்காலத்தில் காங்கிரஸ் அங்கத்தினர்களாயிருந்தனர். சேலத்தில் இருந்த பிரமுகர் ஒருவர் அக்கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். தலைவருடைய முன்னுரை என்னும் பாங்கில் அவர் சகோதரியாரை சேலம் வாசிகளுக்கு அறிமுகம் செய்துவைத்தார். நாட்டுக்கு என்னென்ன பாங்குகளில் பணிவிடைகள் செய்யலாம் என்னும் பொருள்பற்றி சகோதரியார் உருக்கமான சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினார். வண்டி வண்டியாக வெறும் வாய்ப்பேச்சுப் பேசுவதைவிட பயன்படும் விதத்தில் ஒரு சிறிதளவாவது வினையாற்றுவது மேல் என்று சுவாமி விவேகானந்தர் பகர்ந்திருந்தார். அவருடைய நெறியைப் பின்பற்றியவர் நிவேதிதையார். பொதுநலத்துக்காக ஏதாவது நல்வினையாற்ற வேண்டுமென்று அவர் வற்புறுத்தினார். ஆனால் பொருந்தாத பாங்கில் அவைத் தலைவர் அவருடைய பேச்சுக்குப் பின்னுரை பகர்ந்தார். அதாவது: "சகோதரி நிவேதிதையார்

சுவாமி விவேகானந்தரின் சிஷ்யையாவார். குருவுக்கு ஏற்ற சிஷ்யை அவர். கம்பீரமான தோற்றமுடையவர். குயிலினும் இனிய குரலில் அரியதொரு சொற்பொழிவு ஆற்றினர். தெள்ளத் தெளிந்த மொழி. இத்தகைய ஆங்கிலப் பேச்சைக் கேட்கும் பேறு நமக்கு இன்று வாய்த்துள்ளது.''

சகோதரி நிவேதிதைக்குப் பொறுக்க முடியவில்லை. திடீரென்று துள்ளிக் குதித்து எழுந்து நின்ருர். ''மூடும் உமது திருவாயை. அடிமைத்தனத்தில் உழன்று கிடக்கும் அசடுகள், ஆங்கில ஆட்சிக்குப் பொருந்திய பொம்மைகள்; தேசிய உணர்வுகெட்ட மரக்கட்டைகள். நாட்டுக்குரிய வேலைத் திட்டம் உங்கள் காதில் நுழையவில்லை. ஆங்கிலச் சொல் சித்திரத்தில் சொக்கிவிட்டீர்கள். வெட்கம்'' என்று கர்ஜித்துக்கொண்டு வெளியேகிவிட்டார். சீரிய செயலுக்குரிய உபதேசத்தை சகோதரியாரிடமிருந்து ஏற்றுக்கொள்ளும் தகைமை அவர்களுக்கு இன்னும் வரவில்லை.

சுப்ரமண்ய பாரதியார்

இதற்கு முற்றிலும் மாறுபட்டது சுப்ரமண்ய பாரதியார் இயல்பு. கல்கத்தாவில் நிகழ்ந்த ஒரு காங்கிரசுக்கு அவர் சென்றிருந்தார். சகோதரி நிவேதிதையை அவர் நேரில் சந்தித்தார். அவருடைய கருத்துக்களுக்குச் செவிமடுக்கும் வாய்ப்பு பாரதியாருக்குக் கிட்டிற்று. பாரததேசத்தின் சுதந்திரத்தைப் பற்றியதாகவே அது இருந்தது. அடிமைத்தனத்தை நீக்குதல், ஆண்மையை ஓங்குவித்தல், ஜாதிச்சழக்

கைத் தகர்த்தல், தீண்டாமை நோயைக் களைதல், ஒற்றுமையை வளர்த்தல், குருட்டு நம்பிக்கைகளை வேர் அறுத்தல், தேச பக்தியை தெய்வ பக்திக்கு ஒப்பாக்குதல், அச்சம் தவிர்த்தல், தூக்கி வினை யாற்றுதல் — இவைபோன்ற சீரிய கருத்துக்களை சகோதரியார் பாரதியாருக்கு அன்புடன் வழங்கினார். அவரும் அவைகளை அமிழ்தென்ன ஏற்றுக் கொண்டார். சத்பாத்திரம் ஒன்றில் போட்டு வைக்கப்பட்ட சீரிய கருத்துக்கள் என்ன பாங்கில் உலகுக்குப் பயன்பட்டன என்பது தேற்றம். தூங்கிக் கொண்டிருந்த தமிழ் நாட்டைத் தட்டியெழுப்புதற்கு பாரதியாருடைய சுதேச கீதங்கள் முகாமையாயின. அவருடைய நூல்கள்மீது அரசாங்கத்திலிருந்து தடையுத்தரவுகள் பிறந்தன. அதனால் அந்நூல்களுக்கு மதிப்பு பன்மடங்கு அதிகமாயிற்று. பாரதியாரையும் தேசிய அருள் கவிஞராகத் தமிழ்நாடு போற்றத் தொடங்கிற்று. அவருடைய நூல்களில் அடங்கியுள்ள அரிய கருத்துக்கள் பல சுவாமி விவேகானந்தரிடமிருந்து தோன்றியவைகள். அவைகளை எல்லாம் தமது குருநாதருடைய ஆணைக்கு உட்பட்டு சகோதரி நிவேதிதையார் தேசாபிமானிகள் உள்ளத்தில் செலுத்திவந்தார். தேசியக் கவிஞர் சுப்ரமண்ய பாரதியார் அவ்வம்மையாரைத் தமது குருவாகப் போற்றி வந்தார். இப்புத்தகத்தின் துவக்கத்தில் உள்ள பாரதியாரின் பாடல் குருவின் பெருமையையும், குரு சிஷ்ய இணக்கத்தையும், குரு இயற்றியுள்ள அரிய தேசிய சேவையையும் ஒருங்கே விளக்கி

விடுகிறது. தமிழ் இலக்கியத்திலும் அது சிறந்ததோர் இடம்பெறத் தகுதிவாய்ந்தது. அயர்லாந்தில் பிறந்த அவ்வம்மையார் சுப்ரமண்ய பாரதியாரின் மூலம் தமிழ்நாட்டுக்கு யாண்டும் ஞானத்தாய் ஆவார்.

கல்கத்தாவில் உதித்த தேசியத் தொண்டர்களுக்கு சகோதரி நிவேதிதை கொடுத்த பயிற்சி அலாதியானது. அவர்கள் வெறும் வாய்ப்பேச்சு வீரர்களாக நின்றுவிடலாகாது. தீவிரமான செயலுக்கு அவர்கள் துணிந்தாகவேண்டும். தன் உயிரை ஒரு லட்சியத்தின்பொருட்டு வழங்கத் தெரிந்து கொண்டவன் வீரன். உயிரை வழங்கத் தெரிந்து கொண்டவன் எதிரியின் உயிரை வாங்க முன்வர வேண்டும். ஆங்கிலேயர்கள் அயர்லாந்துக்குச் சுதந்திரத்தைத் தானமாகக் கொடுக்கவில்லை. அயர்லாந்து வீரர்கள் அதை ஆங்கிலேயர்கள் கையினின்று திருகிப் பிடுங்கியெடுத்துக் கொண்டனர். இந்தியர்களும் அச்செயலைச் செய்தாகவேண்டும். இரகசியமாக ராணுவப்பயிற்சி பெறுதல், ஆயுதங்களைக் கையாளுதல், வெடிகுண்டுகளைப் பண்ணுதல் ஆகிய செயல்களெல்லாம் நிவேதிதையார் மேற்பார்வையில் விரைந்து தொடங்கின. பௌதிக விஞ்ஞானி ஜகதீச சந்திரவசுவின் ஆராய்ச்சிசாலையில் வெடிகுண்டுகளை உண்டுபண்ணும் வேலை முதன் முதல் துவங்கிற்று. பின்பு அது பற்பல இடங்களுக்குப் பரப்பப்பட்டது. வெளிநாடுகளிலிருந்து வெடிகுண்டுக்கு வேண்டிய ரசாயனப்பொருள்கள் மாற்றுப் பெயருடன் நாட்டுக்குள் கள்ளத்தனமாகக் கொண்டுவரப்பட்டன. வெடி

குண்டுகள் ஆயத்தப்படுத்துவதைப் பற்றிய நூல்களும்அதே பாங்கில் வந்துசேர்ந்தன. இதற்கெல்லாம் மறைமுகமாகத்துணைபுரிந்தவர் சகோதரிநிவேதிதை யாவார். அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் இருந்த அவருடைய நண்பர்களும் அதற்குத் துணைபுரிந்தனர்.

புரட்சிகரமான பிரசாரங்கள் செய்து வந்த தேசாபிமானிகள் சிலர் நாடு கடத்தப்பட்டனர். அத் தகையவர்களுடைய மனைவி மக்களுக்கு உணவுக்கு வகைதேடி வைப்பது சகோதரி நிவேதிதையின் பொறுப்பாயிற்று. இந்நூலை எழுதுகிற இவ்வாண்டு வரையில் கல்கத்தாவில் பூபேந்திரநாத தத்தர் என்ற கிழவனார் ஒருவர் வாழ்ந்திருக்கிறார். அவர் சுவாமி விவேகானந்தரின் உடன் பிறந்த தம்பி. அக்காலத் திய அரசாங்கத்தை எதிர்த்துப் புரட்சிகரமான இயக்கங்களை அவர் கிளப்பினார். "யுகாந்தரம்" என்னும் பத்திரிகை ஒன்றை அவர் நடாத்தி வந்தார். அரசாங்கத்துக்கு அவர் துரோகம் செய்து வருகிறார் என்ற குற்றம் சாட்டி அவரைப் போலீசார் கைது செய்தனர். பதினாயிரம் ரூபாயை யாராவது ஜாமீன் தொகையாகக் கட்டினால் வழக்காடுவதற்கு அவரைத் தாற்காலிகமாக விடுதலை செய்வதென்று நீதிமன்றத் தார் நிபந்தனை போட்டார்கள். சகோதரி நிவேதிதை பாங்குகளில் போட்டு வைத்திருந்த பணம் கிட்டத் தட்ட அந்தப் பெரிய தொகையை எட்டியது. பற்றாக் குறையைச் சில அன்பர்களிடமிருந்து அவர் வாங்கினார். முழுத்தொகை ரூபாய் பதினாயிரத்தை அவர்

நீதிமன்றத்தில் கொண்டு செலுத்தினர். பூபேந்திர நாத தத்தரைக் காவலினின்று அவர் வெளியே கொண்டு வந்தார். பிறகு வழக்கு நடந்தது. பூபேந்திரர் குற்றவாளி என்ற தீர்ப்புச் சொல்லப்பட்டது. அவருக்கு ஒரு வருஷம் சிறையில் கடுங்காவல். அவரும் அதை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டார். அதை முன்னிட்டு சகோதரி நிவேதிதைக்குப் பொருள் செலவு மிக ஆயிற்று. அவர் அதற்காகவென்று எடுத்துக்கொண்ட சிரமமோ அளவில் அடங்காதது. ஆங்கிலேயரிடம் அவமானமும் பட்டார்.

1905ஆம் ஆண்டில் காசியில் நிகழ்ந்த காங்கிரஸ் சம்பந்தமான செயல்களெல்லாம் சகோதரி நிவேதிதையின் பொறுப்பில் வந்து அமைந்தன. அவர் அதற்காகவென்று ஆங்குச் சென்று காரியாலயம் ஒன்றை அமைத்துக் கொண்டார். திருவாளர் கோபால கிருஷ்ண கோகலே அதற்குத் தலைமை தாங்குவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. காங்கிரஸ் அங்கத்தினர் பலர் வெவ்வேறு மாகாணங்களினின்று அதற்கு வந்துகொண்டிருந்தனர். தலைவர் கோபால கிருஷ்ண கோகலே இருப்புப்பாதை வண்டி நிலையத்தில் வந்திறங்கிய பொழுது அவருக்கு அபரிமிதமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இரண்டு மூன்று முக்கியமான விஷயங்களை சகோதரி நிவேதிதை இப்பொழுது தமக்குள்ளே ஆலோசிக்க வேண்டியிருந்தது. 1907ஆம் ஆண்டு துவங்கி விட்டது. 1912ஆம் வருஷம் வரையில் தமது

ஆயுள் நீடிக்காது என்று அவர் உறுதி கொண்டிருந் தார். அதற்குத் தக்க காரணங்களை அவரே நன்கு அறிந்திருந்தார். சாவு தமக்கு என்று வேண்டுமென்றா லும் வரட்டும். உயிர் இருக்குமளவும் தம் குருநாதர் பணிவிடையை ஒழுங்காகச் செய்து கொண்டிருந் தால் போதுமானது. முக்கியமான வேறு ஓர் எண் ணம் அல்லும் பகலும் அவர் மனதில் குடிகொண்டி ருந்தது. பெரிய பொறுப்பு ஒன்றை சுவாமி விவே கானந்தர் அவரிடம் ஒப்படைத்துவிட்டுப் போயிருக் கிறார். நாட்டில் மறுமலர்ச்சிக்கு ஏதுவான வேலைத் திட்டங்களை எல்லாத்துறைகளிலும் புகுத்திவிடுவது தம் குருநாதர் தமக்கிட்ட பணியாகும். அந்த ஆணை யைத் தாம் சிரமேற்கொண்டு முழுமனதோடு பணி யாற்ற முயன்றதை சுவாமி விவேகானந்தர் மறுமை யில் இருந்த வண்ணம் அங்கீகரித்துக் கொண்டால் போதுமானது. குருநாதருடைய அங்கீகாரத்துக்கு அன்னியமாக எந்தவிதமான சுகத்தையோ, சுவர்க்க வாழ்வையோ, ஓய்வு ஒழிச்சலையோ தாம் நாடவில்லை என்று உள்ளம் உரு அவர் எண்ணி வந்தார். அவர் மனதில் எழுந்த மூன்றாவது எண்ணம் தமது மேல்நாட்டுப் பயணத்தைப் பற்றியது. மற்றுமொரு முறை அவர் ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் போய்வர வேண்டிய அவசியமிருந்தது.

1907ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்திலிருந்து சகோதரி நிவேதிதையாருக்கு இலண்டனில் மேல் நாட்டு வாழ்க்கை திரும்பவும் துவங்கிற்று. அப் பொழுது மானுட வாழ்வைக் குறித்து அவர் வியப்பு

மிக அடைந்தார். அது ஓர் அற்புதமான கனவு. இந்தியா என்னும் சூழ்நிலையில் அக்கனவின் போக்கு ஒருவிதமானது. இங்கிலாந்து என்னும் சூழ்நிலையிலோ அதன் போக்கு மற்றொரு விதமானது. மக்களுடைய மனநிலையைப் பெரிதும் மாற்றவல்லது சூழ்நிலை. சீரிய சூழ்நிலையில் பெரும்பான்மையோர் தக்கார் ஆகின்றனர். கீழான சூழ்நிலையோ அவர்களைத் தகவிலர் ஆக்கிவிடுகிறது. தகைமையில் தலைசிறந்தவர்கள் ஞானியர். வாழ்வைக் கனவென அறிந்து கொண்டவர்களும் ஞானியர்களேயாம். விவேகானந்த சுவாமிகளின் அருளால் வாழ்வைக் கனவென அறிந்துகொள்ளும் தகைமை சகோதரி நிவேதிதைக்கு உண்டாயிருந்தது.

இந்தியாவில் அவர் இயற்றிக் கொண்டிருந்த அரும்பணியை இங்கிலாந்திலும் தொடர்ந்து செய்ய அவருக்கு இயன்றது. ஒருவிதத்தில் இங்கிலாந்தில் வசதிகள் மிக உண்டு. அது ஒரு சுதந்திர நாடு. அவரவர் அபிப்பிராயங்களை மக்கள் அங்கே தங்கு தடையின்றித் தாராளமாக வெளியிடலாம். அரசாங்கத்துக்கு எதிர்ப்புக் கூறுவது அந்நாட்டில் குற்றமாகாது. முறையான எதிர்ப்புக்குச் செவி சாய்ப்பது அந்நாட்டு அரசாங்கத்தின் கடமையாயிற்று. அந்த வாய்ப்பை சகோதரி நிவேதிதை நன்கு பயன்படுத்திக்கொண்டார்.

அக்காலத்தில் அயர்லாந்தும் சுதந்திரத்துக்குப் போராடிக் கொண்டிருந்தது. அது தாம் பிறந்து

வளர்ந்த நாடு ஆதலால் அதன் முன்னேற்றத்திலும் சகோதரி நிவேதிதைக்கு ஊக்கம் இருந்தது. அதன் நிலைமையை நேரில் காண விரும்பி அவர் அங்கே சென்றார். சில ஆண்டுகளுக்குள்ளாக அந்த நாட்டில் ஏற்பட்டிருந்த விழிப்பும் சுதந்திர தாகமும் அவரு டைய மனதை முற்றும் கவர்ந்துவிட்டன. பட்ட ணங்களில் வசித்திருந்தவர்கள், நாட்டுப் புறங் களில் வசித்திருந்தவர்கள் ஆகிய எல்லாரும் தங்கள் நாட்டின் விடுதலையைப்பற்றிய வேட்கை பிடித்தவர் களாயிருந்தனர். சகோதரி நிவேதிதைக்கு அதைக் குறித்துப் பெரு மகிழ்வு. இந்தியாவின் நிலைமையை அயர்லாந்தின் நிலைமையோடு அவர் தமக்குள்ளே சீர்தூக்கிப் பார்த்து வந்தார். அத்தகைய சுதந்திர தாகம் இந்திய மக்கள் அனைவருக்கும் ஒருமுகமாக என்று வருமோவென்று அவர் ஏங்கியிருந்தார். விரைவில் வராவிட்டாலும் நாளடைவில் அது வந்தே தீரும் என்ற உறுதியான நம்பிக்கை அவருக்கு இருந்தது.

அமெரிக்காவிலிருந்து சகோதரி நிவேதிதைக்கு அழைப்புகள் பல வந்துகொண்டிருந்தன. அது ஒரு புறமிருக்க, அவர் தாமே அங்குப் போகவேண்டும் என்ற எண்ணங்கொண்டிருந்தார். தாம் எண்ணி யதைவிட விரைவில் அவர் அங்கே போய்ச்சேரும் படி சூழ்நிலை அவரைத் தூண்டிற்று. அன்பர்கள் பலர் அவருடைய வரவை ஆவலுடன் எதிர்பார்த் திருந்தனர். நாடு முழுதிலும் சுற்றுப்பிரயாணம்

செய்வதற்கான திட்டம் விரைவில் அமைக்கப்பட்டது. சென்றவிடங்களிலெல்லாம் இந்தியாவின் சிறப்பைப்பற்றியே அவர் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அவருடைய சீரிய கருத்துக்களை அறிஞர்கள் ஆர்வத்துடன் ஏற்றுக்கொண்டனர். அதற்கெல்லாம் மேலாக அவர் ஆற்றவேண்டிய பணியொன்று இருந்தது. மாணுக்கர்கள் பலர் கல்வியின் பொருட்டு இந்தியாவினின்று அமெரிக்காவுக்குச் சென்றிருந்தனர். அரசியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இந்திய மக்கள் பலர் தங்கள் இயக்கத்தைப் பலப்படுத்துவதற்காகவும் அமெரிக்காவுக்குப் போயிருந்தனர். அவர்களில் பெரும்பாலாரது பொருளாதார நிலை மிகக் கீழ்த்தரமானதாயிருந்தது. இந்தியாவிலிருந்து நிதி வரவழைக்க அவர்களுக்கு வசதியில்லை. அமெரிக்காவில் யாசகம் பண்ணுவது சட்டத்துக்கு விரோதமானது. இந்த இடையூறுகளுக்கிடையில் அமெரிக்காவில் உயிர்வாழ்ந்தாக வேண்டும்; நாடிய இலட்சியத்தை அடைந்தும் ஆகவேண்டும். இதற்கான உபாயங்களை அந்த இந்திய மக்களுக்கு சகோதரி நிவேதிதை காட்டிக்கொடுத்தார். நாள் ஒன்றுக்குச் சில மணிநேரம் சில ஸ்தாபனங்களில் உழைத்தால் போதுமானது. அந்த உழைப்புக்காக நல்ல சம்பளம் கொடுப்பார்கள். அந்த வருவாயைக்கொண்டு வாழ்வைக் கண்ணியமாக நடத்திவிடலாம். பொருள் கொஞ்சம் சேமித்து வைப்பதும் சாத்தியம். அத்துடன் கல்வியைப் பூர்த்தி பண்ணவும் முடியும். அமெ

ரிக்க அன்பர்களின் துணைகொண்டு இந்திய இளைஞர்களுக்கு இந்த வசதிகளையெல்லாம் சகோதரி நிவேதிதை செய்துவைத்தார்.

இதற்குள்ளாக இலண்டனிலிருந்து ஓர் அவசரச் செய்தி சகோதரி நிவேதிதைக்கு அங்கு எட்டியது. அவருடைய தாயார் நோய்வாய்ப்பட்டு நெருக்கடியான நிலையில் இருந்தார். அச்செய்தியைக் கேட்டதும் புதல்வியும் உடனே இலண்டனுக்குப் புறப்பட்டுப் போனார். இறைவன் அருளால் தக்க தருணத்தில் அவர் தாயின் பக்கத்தில் வந்து சேர்ந்தார். அந்திய காலத்தில் அவருக்குப் பணிவிடை கொஞ்சம் செய்யவும் இயன்றது. கிடைப்பதற்கு அரிய அந்த வாய்ப்பைக் குறித்து சகோதரி நிவேதிதை பெருமகிழ்வடைந்தார். கடவுளின் கிருபையாலும் தமது குருநாதரின் அனுக்கிரகத்தாலும் அது அப்படி அமைந்ததென்று அவர் உறுதி கொண்டார். இனித் தாயின் மனநிலையைப் பற்றி ஒன்றும் மொழிய வேண்டியதில்லை. தமது அருமைப் புதல்வியைப் பார்த்தான பிறகும் அவளுடைய அரும்பணியை ஏற்றுன பிறகும் தமது உடலை உகுத்துவிடுதலில் அவ்வம்மையாருக்குத் தடையொன்றுமில்லை. கடவுள் சிந்தனையில் ஈடுபட்டவராக அமைதியாக அவர் உடலை நீத்தார். இனி, இந்தியாவுக்கு விரைவில் திரும்பிப் போக வேண்டுமென்று சகோதரி நிவேதிதையும் தீர்மானம் செய்தார்.

14. இறைவனடி சேர்தல்

சகோதரி நிவேதிதை இந்தியாவுக்குத் திரும்பி வந்தபொழுது அரசியல் கிளர்ச்சி இயக்கங்கள் எல்லாம் ஒருவாறு அடங்கிக் கிடந்தன. அரசாங்கத்தார் எடுத்துக்கொண்ட தீவிரமான அடக்கு முறையினல் அந்த இயக்கங்கள் அழிந்துபட்டுப்போயினவென்று அவர்கள் எண்ணியிருந்தனர். ஆனல் அதைப்பற்றி சகோதரி நிவேதிதை கொண்டிருந்த கருத்தோ வேறுவிதமானது. சுதந்திரப் போராட்டம் தோற்றத்துக்கு வருவதும், பின்னணியில் மறைந்து கிடப்பதும், மாறி மாறி வருவதும் இயல்பு. பல நாடுகளில் அப்போக்கில்தான் அது நிகழ்ந்து வந்திருக்கிறது. இந்திய நாடு அதற்கு ஏன் விலக்கு ஆகவேண்டும்? இப்பொழுது பின்னணியில் இருக்கும் சுதந்திரப் போராட்டம் வெற்றி பெறும் வரையில் திரும்பத் திரும்பத் தலையெடுத்தே தீரும்; இதுவே சகோதரியாரது கருத்து. இனித் தமது முயற்சியின்றி அது தானகவே தருணம் வாய்க்கும் பொழுதெல்லாம் தலையெடுத்து வரும் என்று அவர் முடிவு கட்டினர். இந்தியாவின் சுதந்திர இயக்கம் திரும்பவும் ஒரு தடவை தலையெடுத்து வரும்பொழுது தாம் உயிர் வாழ்ந்திருக்க மாட்டார் என்பதையும் அவர் நன்கு அறிந்திருந்தார்.

சகோதரி நிவேதிதை இந்தியாவுக்கு மட்டுமல்ல, உலகத்துக்கே வழங்கியுள்ள பெருங்கொடை ஒன்று உண்டு. அது அழியாச் செல்வமாக யாண்டும்

இருந்து வரும். தாம் இயற்றிய நூல்வடிவத்தில் இன்றைக்கும் வள்ளுவர் உலகில் வாழ்ந்திருக்கிறார். அதே பாங்கில் நூலோர் அனைவரும் வாழ்ந்திருக்கின்றனர். சகோதரி நிவேதிதை அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர். அரிய நூல்கள் பலவற்றை அவர் இயற்றியிருக்கிறார். அவைகளுள் தலை சிறந்தவைகளை ஈண்டுக் குறிப்பிடுகிறோம். The Master As I Saw Him — **நான் கண்ட குருநாதன்** என்பது மிக முக்கியமானது. விவேகானந்த சுவாமிகளுடைய பெயர் உலகில் இருக்கும் வரையில் இந்த நூல் உலகில் நிலைத்திருக்கும். இனி, விவேகானந்த சுவாமிகளுடைய பெருமையை உள்ளபடி அறிந்துகொள்ள விரும்புகிறவர்கள் இந்நூலைப் படித்தாகவேண்டும். ஆங்கில இலக்கியத்துக்கும் இது ஒரு நல்ல எடுத்துக் காட்டு ஆகும். The Web of Indian Life—**இந்தியர் வாழ்க்கைச் சிறப்பு** என்பது மற்றொரு நூல். இந்திய மக்களாகிய நாம் வாழ்ந்துவருகிற வாழ்க்கையில் பாரமார்த்திகப் பெருந்திட்டமே யாண்டும் புதைந்திருக்கிறது என்பதை இந்நூலிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். Footfalls of Indian History—இந்து தேச சரித்திரத்தின் மேலாம் இயல்பை இந்நூல் விளக்கிக் காட்டுகிறது. சகோதரியார் இயற்றியுள்ள நூல்களில் ஞானச் செல்வமே நல்ல ஆங்கில மொழியில் திகழ்ந்துகொண்டிருக்கிறது.

யாத்திரைக்குரிய ஸ்தலங்களில் இமயமலை புனிதம் மிக வாய்க்கப்பெற்றது. அம்மலையில் காஷ்மீரத்தில் உள்ள அமரநாதத்துக்கு யாத்திரைபோய் வந்த

பிறகு சகோதரி நிவேதிதை தாம் இந்தியாவுக்கு ஆற்றவேண்டிய அரும்பணிகளில் இறங்கினர். அப் பணிகளையெல்லாம் அவர் திறம்படச் செய்தாய்விட்டது. பல துறைகளில் இந்தியாவின் புத்துயிர்க்கு ஏதுவான இயக்கங்களில் பலவற்றை அவர் துவக்கி வைத்தாய்விட்டது. இனி, அந்த இயக்கங்கள் எல்லாம் தாமாகவே வலிவுபெற்று வளர்ந்து வரும். சகோதரி நிவேதிதையார் இனித் தமது திருமேனியைத் துடைத்து விடுதற்கான காலம் நெருங்கிவிட்டது. அதற்கிடையில் மற்றுமோர் அரிய ஸ்தல யாத்திரையைச் செய்துமுடிக்க அவர் தீர்மானித்தார். கயிலாயகிரி யாத்திரைக்கு அடுத்தபடியில் இருப்பது திருக்கேதாரம், பத்ரிகாசிரமம் ஆகிய இரண்டு ஸ்தலங்களுக்கு உரிய யாத்திரை. இந்த யாத்திரையைப் பூர்த்தி செய்து விட அவர் உறுதி கொண்டார். அதை முறையாகச் செய்து முடிப்பது அரும்பெரும் தவம் செய்வதற்கு ஒப்பானது. பக்தியுடனும் ஊக்கத்துடனும் நிவேதிதையார் அந்த யாத்திரையைச் செய்தார். ஹரித்துவாரத்திலிருந்து புறப்பட்டுத் திருக்கேதாரத்தையும், பத்ரிகாசிரமத்தையும் தரிசித்துவிட்டுத் திரும்பி வருவதற்கு நானூறு மைல் நடக்கவேண்டும். பிரயாணத்தை முடிக்கச் சுமார் ஆறு வாரங்கள் பிடிக்கும். நாள்தோறும் புதிய புதிய அனுபவம்; புதிய புதிய உணர்ச்சி. பக்திமிகப் படைத்திருப்பவர்களுக்குப் பாரமார்த்திக அனுபவங்கள் பலப்பல ஆங்காங்கு உண்டாகும். சகோதரி நிவேதிதைக்கு அத்தகைய அரிய அனுபவங்கள்

உண்டானதற்கு அத்தாட்சிகள் அவர் இந்த யாத்திரையைப் பற்றி எழுதி வைத்துள்ள நூலிலே இருக்கின்றன. இந்த யாத்திரையை வெற்றிகரமாக முடித்துவிட்டுத் திரும்பி வந்தபொழுது அவருடைய உடல்தான் இந்த மண்ணுலகுக்குத் திரும்பி வந்தது என்று சொல்லலாம். இன்னும் செய்து முடிக்க வேண்டிய சில அலுவல்களுக்கு அவருடைய உடல் பயன்பட்டு வந்தது. உள்ளமோ முழுதும் இறைவனுடைய திருவடியிலேயே புதைந்திருந்தது.

கல்கத்தாவுக்கு வந்ததும் நூல்கள் எழுதியதை முன்னிட்டுத் தமக்கு வந்து கொண்டிருந்த வருவாய் அனைத்தும் தாம் காலமான பிறகு தாம் துவக்கிய பெண்பாடசாலைக்கு உரியதாகவேண்டும் என்று ஒரு சாசனம் எழுதி வைத்தார். பள்ளிக்கூட நடைமுறைகளைப்பற்றிய பொறுப்புகளை எல்லாம் தமது தோழிமார்களிடம் அவர் ஒப்புவித்தார். "ஆற்றுதற்கு அலுவல்கள் பல இருக்கின்றன. ஆனால் இனி காலமோ கைவசத்தில் இல்லை" என்றார் அவர். நாள்தோறும் நேரத்தில் பெரும் பகுதியைத் தியானத்திலேயே கழித்து வந்தார். புற உலக ஞாபகம் பெரும்பாலும் அவருடைய மனதினின்று நழுவிப்போய் விட்டது. இதற்கிடையில் அவருக்கு அமைதியும் ஓய்வும் வேண்டுமென்று கருதி அவரை இமயமலையின் கீழ்ப்பகுதியிலிருக்கும் டார்ஜிலிங் என்னும் ஊருக்கு சர் ஜகதீச சந்திரவசுவும் அவருடைய மனைவியார் அபலாதேவி வசுவும் அழைத்துச் சென்றனர். அவருக்கு நல்ல

ஓய்வு கொடுத்து உடலை உறுதி படைத்ததாக மாற்றித் திரும்பவும் கல்கத்தாவுக்கு அரும்பெரும் பணியின் பொருட்டு அழைத்து வரலாம் என்று அந்தத் தம்பதிகள் எண்ணியிருந்தார்கள். ஆனால் தமது உடலும் இமயமலையிலேயே ஒடுங்கப் போகிறது என்று சகோதரி நிவேதிதை அறிந்துகொண்டார். டார்ஜிலிங் என்னும் ஊரில் வசதிகள் அனைத்தும் வாய்க்கப்பெற்ற வீடு ஒன்றில் அவருடைய உடல் தளர்வுற்று வசித்து வந்தது. உள்ளமோ அகண்டாகாரத்தில் சிவசாயுஜ்யம் அடைந்து விட்டது. இன்னும் ஒரே ஒரு சூரியோதயத்தை இவ்வுடல் காணும் என்று முந்தியநாள் மாலைஅவர் பகர்ந்தார். 1911ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 13ஆம் தேதி காலையில் கதிரவன் தோன்றினான். ஜன்னல் வழியாக அவனுடைய கதிர்கள் சகோதரியார் முகத்தின் மீது பொலிந்தன. உபநிஷதத்தில் உள்ள "நிலையற்றதிலிருந்து நிலைபேறு உடையதின்கண் என்னை எடுத்துச் செல்வாயாக; இருளிலிருந்து அருள் ஒளியின்கண் என்னை எடுத்துச் செல்வாயாக; மரணத்தினின்று மரணமிலாப் பெருவாழ்வின்கண் என்னை எடுத்துச் செல்வாயாக"—என்னும் பிரார்த்தனையைப் பகர்ந்தார். கையில் ஜபமாலையைத் தாங்கிக்கொண்டிருப்பதற்கிடையில் மனம் அகண்டாகாரத்தில் விரிந்தோடியது. சகோதரி நிவேதிதையார் சமாதி நிலையில் உடலினின்று பிரிந்துகொண்டார்.

சுவாமி சித்பவானந்தர் அவர்கள் இயற்றிய

பெரிய நூல்கள்

திருவாசகம்	ரூ.	32-00
ஸ்ரீமத் பகவத்கீதை 16-ம் பதிப்பு	...	28-00
ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம் (*தமிழ் வியாக்கியானம்*)	...	26-00
ஞானயோக விளக்கம்	...	15-00
ராஜயோக விளக்கம்	...	12-00
கர்மயோக விளக்கம்	...	10-00
மஹாபாரதம்	...	10-00
பக்தியோக விளக்கம்	...	9-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	...	8-00
விவேகானந்த விவரணம்	...	7-50
இராமாயணம்	...	7-00
அனுஷ்டான வேதாந்தம்	...	7-00
விவேகானந்த உபநிஷதம்	...	7-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேசமஞ்ஜரீ	...	6-50
தாயுமானசுவாமி பாடல்கள்	...	6-00
கடவுளின் வடிவங்கள்	...	6-00
சந்தேகம் தெளிதல் பாகம்—1	...	5-50
சந்தேகம் தெளிதல் பாகம்—2	...	5-50
தினசரி தியானம்	...	5-00
அம்பிகையின் ஆயிரம் திருநாமங்கள்	...	4-50
விஷ்ணுவின் ஆயிரம் திருநாமங்கள்	...	4-00
சுவாமி விவேகானந்தர்	...	3-50
எதிர்கால இந்தியா	...	3-00

தபோவனத் தொடர் 39

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய மிகச் சிறிய நூல்கள்

மாணிக்கன்	...	1-25
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	...	1-25
சைவன் யார்?	...	1-25
ஆலய வழிபாடு	...	1-25
மனிதனது நிஜ சொரூபம்	...	1-25
சிவதத்துவம்	...	1-25
ஆத்ம சக்தி	...	1-25
குழந்தைகளின் களிக்கூடம்	...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும்	...	1-00
நோய்க்கு இடம் கொடேல்	...	1-00
கணபதி	...	1-00
நன்நெறிகளும் அருள் வாக்குகளும்	...	0-80
சூரிய நாராயணன்	...	0-75
தெய்வீக மகிமைகள்	...	0-75
முருகக் கடவுள்	...	0-75
வர்ணாச்ரம தர்மம்	...	0-70
தாயுமான சுவாமி ஆலயத்தில் தத்துவ அமைப்பு	...	0-60
விஷ்ணு தத்துவம்	...	0-50
விவேகானந்தரின் வீரகர்ஜனை	...	0-40
கந்தர் அனுபூதி	...	0-30

விவரங்களுக்கு:

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115

விலை ரூ. 3-75